992

தொகுதி 10.] 1931ஞு ஜூன், ஜூலை [பகுதி 5-6

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

10 AUG 1931



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 4-பாகம் விலை ரூபா 8-4-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவர்க்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

10 AUG 1931

அதற்கு அவனுடைய மனைவி, "இப்போது நானும் நமது குமாரியும் அணிந்திருக்கும் துக்க உடைக்குச் செலவு செய்ததுபோக மீதியெல்லாம் அப்படியே இருக்கிறது?" என்று கூறினாள்.

அப்போது வேலப்பன் மெதுவாகவும் ஆனால் உறுதியுடனும் பின் வருமாறு கூறினான்:—"நான் உயிர்தப்ப முடியுமோ முடியாதோ என்னும் நம்பிக்கைகளை யெல்லாம் இழந்து விடும்படியான நிலைமைக்கு இன்னும் வந்துவிடவில்லை. எப்படியேனும் உயிர் தப்பி விடலாம் என்னும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது" என்றான். அச்சமயத்தில் அவனுடைய குமாரி சிறிது சந்தோஷமடைந்து சிரித்தாள். அதற்காக வேலப்பன் அவளைக் கண்டித்து இப்படியெல்லாம் மடத்தனமாக நடந்து கொண்டால் யாராவது அவர்கள் பேசுவதைக் கேட்டு விடுவார்களென்று எச்சரித்து மீண்டும் தன் மனைவியிடம், "நீ எவ்வளவு பத்திரமாகப் பணத்தை வைத்துக்கொண்டிருக்கிறாயோ அவ்வளவு எளிதில் நான் தப்பித்துக் கொள்ளலாம். ஏனெனின் நான் தப்பி வருவதற்கு யார் உதவி செய்கிறார்களோ அவர்களுக்குத் தக்க சன்மானம் செய்யவேண்டு மல்லவா?" என்று கூறினான்.

அதற்கு அவனது மனைவி, "அப்பணம் இரத்தினபுரி பாங்கியில் இருந்தால் எவ்வளவு பத்திரமாக இருக்குமோ அவ்வளவு பத்திரமாகவே என்னிடம் இருக்கிறதென்பதை நீங்கள் தைரியமாக நம்பலாம்" என்று உறுதி கூறினாள்.

இவ்வாறாக கணவனும் மனைவியும் குமாரியுமாகச் சுமார் அரைமணி நேரத்துக்குமேல் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் இருவரும் வெளியே போய்விடவே வேலப்பன் மட்டும் [illegible]க்கப்படி தனியாக இருந்த நிலைமையில் எதை எதையோ சிந்தித்துச் சில சமயங்களில் துக்க

18658

மடைந்தும் வேறு சில சமயங்களில் ஆறுதலடைந்தும் தன் காலத்தைக் கழித்தான்.

மறுநாள் காலை அந்தச் சிறையின் பரியாரி எப்போது வருவான் என மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் நமது வேலப்பன். அச்சமயத்தில் சிறைக்காவலாளி அவ்வறையில் நுழைந்து வேலப்பனைக் கண்டு "க்ஷவரம் செய்து கொள்கிறாயா" என்று கேட்டான். அதற்கு அவன் உடனே பளிச்சென்று "அப்படியே ஆகட்டும், உடனே அவனை அனுப்பு" என்றான். வேலப்பன் இவ்வளவு ஆவலாகப் பதில் சொன்னதைக்கண்ட காவலாளி சிறிது சந்தேகம் கொண்டவன்போல் வேலப்பனை உற்று நோக்கினான்.

அதை ஒருவாறு உணர்ந்துகொண்ட வேலப்பன் மிகச் சாமர்த்தியமாக, "கொஞ்சநேரமாயினும் யாராவது ஒருவருடன் பேசிக்கொண்டிருப்பதால் சிறிது மன ஆறுதல் ஏற்படுமல்லவா?" என்று சமாதானம் கூறினான்.

இச்சமாதானத்தைக் கேட்டுத் திருப்தி யடைந்த காவலாளி யாதொன்றும் பேசாமல் வெளியே சென்று பரியாரியை அனுப்பினான். பரியாரியை அறையில் தன்னுடன் தனியாகக் கண்டதும் வேலப்பன் ஆவலுடன், "என்ன? உன் எஜமானன் என்னசொன்னான்; நமது யோசனையை ஒப்புக்கொண்டானா?" என்று வினவினான்.

பரியாரி:—எஜமானன் அப்படியே ஒப்புக் கொண்டான். ஆனால் ஆயிரம் பவுனுக்குக் குறைவாகக் கொடுத்தால் அவன் வாங்கமாட்டான் என்பது மட்டும் திண்ணம்.

வேலப்பன்:—அப்பாடா! ஆயிரம் பவுனா? அவ்வளவு பெருந்தொகை அதிகமல்லவா?

பரியாரி:—ஓஹோ! அவர் என்னசொல்கிறார் தெரியுமா? இந்த வேலையில் ஈடுபடுவது மிக அபாயமானதென்றும் தூக்கு மேடையில் ஏற இருக்கும் ஒருவனை விடுவிப்பது இலேசான காரிய மல்லவென்றும் கூறுகிறார். மேலும் உனக்கு உதவி செய்யும்போது நாங்கள் அகப்பட்டுக் கொண்டால் எங்கள் கதி யாதாகுமென்பதையும் நீ கவனிக்கவேண்டும்.

வேலப்:—சரி, எப்படியாவது உன் எஜமானன் என்னைத் தப்பவைப்பதற்குத் தயாராக இருக்கிறானா?

பரியாரி:—ஓ, எத்தகைய தடையுமின்றித் தயாராக இருக்கிறார். ஆனால் காரியம் முடிந்ததும் பணம் கிடைக்கும் என்று நம்புவதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது.

வேலப்:—ஏன்? அதற்கென்ன தடை; என்னிடம் தேவையான பணம் இருக்கிறது.

பரியாரி:—உன்னிடமா? இங்கேயா வைத்துக்கொண்டிருக்கிறாய். சர்க்கார் ஷெரீபுக்குத் தெரிந்தால் ஒரு பைசாவும் விடாமல் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து எடுத்துக்கொண்டு போய்விடுவாரே.

வேலப்:—இங்கே வைத்திருப்பதாக நான் சொல்லவில்லை. அத்தொகை என் மனைவியிடம் இருக்கிறது. மேலும் அவசியமானபோது எவ்வளவு தொகை வேண்டுமாயினும் என் மனைவியின் மூலம் அனுப்புவதற்கும் ஒரு நண்பர் இருக்கிறார்.

பரியாரி:—ஆனால் எனது எஜமானன் இப்படிப்பட்ட சமாதானங்களையெல்லாம் கண்டு திருப்தியடைந்துவிடமாட்டான். நிச்சயமாகப் பணம் கிடைக்கும் என்னும் உறுதியான நம்பிக்கை ஏற்படவேண்டும்.

வேலப்:—அதற்கென்ன தடை? நம்பிக்கை ஏற்படும்படி செய்கிறேன். என் மனைவியிடம் பணம் இருக்கிறது. வேண்டுமாயின் உன் எஜமானன் தானப்பன் அவள் வசித்துவரும் வீட்டுக்குச் சென்று அதைப் பார்த்து விட்டு வரலாம்.

பரியாரி:—சரி, இப்போதுதான் காரியத்தில் கண்ணு யிருப்ப தாகச் சொல்ல முடியும். உன்மனைவி வசிக்குமிடம் எங்கே?

வேலப்:—என் மனைவியும் குமாரியும் இன்று பகல் என்னை வந்து காண்பார்கள். அவர்களிடம் இன்று மாலைக்கு மேல் ஒருவர் அவர்கள் வசிக்குமிடத்துக்கு வருவாரென் றும் அவருக்குப் பணத்தைக் காட்டும்படியும் சொல்லி விடுகிறேன்.

இவ்வாறு கூறி வேலப்பன் தன் மனைவி வசிக்கும் விலா சத்தையும் தெரியப்படுத்தினன். அப்போது பரியாரி சந்தோ ஷத்துடன், "தானப்பன் எதையும் தானுக முன் வந்து வேலைசெய்வது வழக்கமில்லை யாதலால் இவ்விஷயத்தில் எல்லாவற்றையும் முடிக்கும்படி எனக்கே கட்டளையிட்டிருக் கிறன். ஆதலின் நான் பார்த்துக் கொள்கிறேன். இனி உனக்குக் கவலைவேண்டாம்" என்று கூறினன்.

அதற்கு வேலப்பன் மிக்க ஆத்திரத்துடன், "அது சரி; உன் எஜமானன் எல்லாவற்றையும் உன்னிடமே ஒப்ப டைத்திருக்கலாம். நான் தப்பிச் செல்வதற்கு என்ன ஏற் பாடு எம்மாதிரி செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டான்.

பரியாரி மறுநாள் காலை வரும்போது எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவிப்பதாகச் சொல்லிவிட்டு வேலப்பனுக்கு க்ஷவரம்செய்ய ஆரம்பித்தான். சிறிது நேரத்துக்கெல்லாம்

பரியாரியை வெளியே அனுப்ப சிறைக்காவலாளியும் அங்கு வந்து சேர்ந்தான். ஆகவே பரியாரி வெளியே சென்முன். அப்போது வேலப்பன் அவ்வறையில் மீண்டும் தனியாக இருக்க வேண்டியதாயிற்று. அப்போது அவன் வழக்கப் படி பல விஷயங்களைப்பற்றி யெல்லாம் சிந்திக்கலானுன். அச்சமயம் சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்குச் சன்மார்க்க உபதேசம் செய்யும் பாதிரியார் வந்து சேர்ந்தார். வேலப் பன் அவரிடம் நடந்து கொண்டதிலிருந்து அவன் நல்ல நிதானமான மனோ நிலைமையுடனேயே இருப்பதாகத் தெரிந்துகொண்டு போனுர்.

அன்று பகற்பொழுது கழிந்ததும் வேலப்பன் எதிர் பார்த்தபடியே அவனது மனைவியும் குமாரியும் அவனைக் காணவந்தனர். அப்போது அவன் அவர்களிடம் அன்று மாலை ஒருவர் அவர்கள் வசிக்கும் வீட்டுக்கு வரும்போது அவர்களிட மிருக்கும் பணத்தைக் காண்பிக்க வேண்டு மென்று விவரித்துப் பின்வருமாறு கூறினுன்:—

"அவர் யாராயிருந்தாலும் சரி; இன்று மாலைக்குப் பின் யார் நீங்கள் வசிக்கும் வீட்டிற்கு வருகிறுர்களோ அவரிடம் ஆயிரம் பவுன்களைக் காண்பியுங்கள். அதற்குமேல் இருக் கும் தொகையை அவருக்குக் காண்பிக்கலாகாது. ஏதேனும் அதிக தொகை இருக்கிறதா என்று அவர் கேட்டாலும் இல்லை என்று தாட்சண்யமின்றி உறுதியுடன் கூறிவிட வேண்டும். அவர் அப்பணத்தைப் பார்க்கலாமே யொழியத் தொடக்கூடாது. ஏனெனில் நான் இப்போது இழிமக்க ளுடன் சகவாசம் செய்துகொண் டிருக்கிறேன் என்பது ஞாபகத்தில் இருக்கவேண்டும். என் தற்கால நிலைமை யில் அவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டியதாக இருக் கிறது. என் உயிர் தப்பவேண்டி யிருக்கிறது என்பது

உங்கள் கவனத்தில் இருக்கட்டும். அந்த உயிர் இப்போது உங்கள் கைவசமே இருக்கிறது?

இதைக்கேட்ட வேலப்பனுடைய மனைவி தன் கணவன் கட்டளையிட்டிருக்கிறபடியே நடந்து கொள்வதாக உறுதி கூறினாள். பிறகு மனைவியும் குமாரியும் வேலப்பனுடைய அனுமதிபெற்று வெளியே போனார்கள். அவர்கள் சென்ற பின்னர் வேலப்பன் தனிமையாக வழக்கம்போல் பல விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆனால் இம்முறை அவன் தான் எப்படியாவது தப்பித்துக்கொண்டு போய்விடலாம் என்னும் நம்பிக்கையுடனேயே ஒருவாறு திருப்தியுடன் இருந்தான்.

140 - வது அத்தியாயம்

வேலப்பன் இவ்வாறு சிறையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கையில் அவனிடம் குமாஸ்தாவாக இருந்தவனும், தன் சகோதரியின் கற்பைக்கெடுக்க முயற்சித்தான் என்பதற்காக வேலப்பனிடம் பரமதுவேஷங் கொண்டவனும், வேலப்பன் தூக்கு தண்டனை விதிக்கப் பட்டதற்கே காரணமாய் இருந்தவனுமான விசுவநாதன், அந்த வேலப்பன்மீது செலுத்திவந்த கண்ணோட்டத்தை விட்டுவிடவில்லை. வேலப்பன் சிறையிலிருந்து எப்படியேனும் தப்பிச் செல்வதற்கு முயற்சிசெய்வான் என்று விசுவநாதன் யூகித்தறிந்துகொண்டு சிறைக் காவலாளிகளிடம் சென்று வேலப்பனைப் பார்க்க யார் யார் வருகிறார்கள் என்று விசாரித்தான். அவனது மனைவியும் மகளும் தவிர வேறு யாரும் வருவதில்லையென்று அறிந்துகொண்டான். ஆனால் வேலப்

பன் சிறையில் சிறிது உற்சாகத்துடனேயே இருப்பதாக அறிந்துகொண்டதால் அவன் ஏதோ சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறான் என்னும் சந்தேகம் விசுவநாதனுக்கு ஏற்பட்டுவிட்டது. எப்படியாவது வேலப்பன் தூக்குமேடையில் ஏற்றப்பட்டு அவன் பிணமாகத் தொங்குவதைக் காணவேண்டும் என்று விசுவநாதன் முடிவு செய்துவிட்டவனாதலால் அவன் சூழ்ச்சிகளையெல்லாம் கண்டுபிடித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

சிறையில் பரியாரி தவிர வேறு ஒருவரும் வேலப்பனைக் காண்பதில்லை என்றும் விசுவநாதன் தெரிந்து கொண்டதால் அப்பரியாரியின் விலாசத்தைத் தேடிக்கொண்டு போனான். அங்கு சென்றதில் அவன் அங்கு இல்லையென்றும் ஜாடித் தீவிலுள்ள வேறொரு க்ஷவரக்கடையில் இருப்பதாகவும் தெரிந்து அங்கே சென்றான். அக்கடையின் வாயிலின்மீது தானப்பன் என்று எழுதப்பட்டிருந்ததால் சிறையில் தூக்கு போடுபவன் அங்கே இருக்கிறான் என அறிந்துகொண்டான்.

விசுவநாதன் அக்கடையில் நுழைந்து அங்கே இருந்த குமஸ்தாவிடம் தனக்கு க்ஷவரம் செய்யும்படி கூறினான். அந்த குமஸ்தா சிறையில் வேலைசெய்யும் பரியாரியேயாவான். அவன் க்ஷவரம் செய்துகொண்டிருந்தபோது விசுவநாதன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்து திடீரென்று, "ஐயோ பாவம், இந்நகரில் வட்டிக்குப் பணத்தைக் கொடுக்கும் பிரபல முதலாளியாய் இருந்த வேலப்பன் இப்போது தப்புக் கையெழுத்து போட்டதன் காரணமாகச் சிறையில் இருக்கிறான் போலும்" என்றான்.

பரியாரி:—ஆம்; நானும் இன்று காலையில் அவனைப் பார்த்தேன்.

விசுவநாதன்:—வாஸ்தவத்தில் நீ அவனைப் பார்த்தாயா?

பரியாரி:—ஆம்; இன்றுமட்டுமல்ல, நேற்று காலையிலும் பார்த்தேன். சிறைச்சாலையில் கைதிகளுக்கு க்ஷவரம் செய்ய வேண்டியவன் காயலாவாக இருப்பதால் நான் சில தினங்களாகப் போவதால் அவனைப் பார்க்கமுடிகிறது.

விசுவநாதன்:—அப்படியா! வேலப்பன் எப்படி இருக்கிறான் பாவம்! அதிக கவலையில் மூழ்கி யிருக்கிறானா?

பரியாரி:—ஏன்? அவனைப் பார்க்கும்போதும், அவனுடைய நிலைமைகளைக் கவனிக்கும்போதும் அவன் நிம்மதியாக இருப்பதாகவே கூறவேண்டும்.

விசுவ:—நீ கூறுவதைப் பார்த்தால் அவன் தப்பிப்போவதற்கு ஏதேனும் வழி இருக்கவேண்டுமென்று தெரிகிறது. அது உண்மைதானா?

பரியாரி:—ஒவ்வொருவரும் கடைசிக்காலம் வரும்வரை ஏதேனும் ஒருவகை நம்பிக்கையைக் கொள்வதுதான் வழக்கம். வேலப்பனும் நம்மைப்போன்ற மனிதன்தானே, ஆதலின் அவன் நம்பிக்கை கொள்வதில் தவறு என்ன இருக்கிறது?

விசுவ:—அப்படியானால் அவன் உன்னிடம் ஏதேனும் விஷயம் தெரிவித்திருக்கிறானா?

பரியாரி:—நீ என்ன நினைக்கிறாய்? ஏதேதோ பேச ஆரம்பித்து விட்டாயே.

விசுவ:—நினைப்பதென்ன? எனக்கு நீ இவ்விஷயத்தில் உதவி செய்தால் நான் உனக்குத்தக்க சன்மானம் அளிப்பேன் என்பதே.

பரியாரி:—அதுதான் காரியம் நடக்க வேண்டியமுறை. நான் உனக்கு என்ன செய்யவேண்டும், தக்க சன்மானம் என்றால் எவ்வளவு தொகை.

விசுவ:—இது பொது இடமாகையால் பலரும் வருவார்கள். ஆகையால் நாம் தனிமையாகப் பேசும்பொருட்டுத் தனி அறையில் எங்கேனும் செல்வோம் வா.

அப்போது மிகக் கடூரமான ஒரு தொனியில் எதிர் அறையில் இருந்த யாரோ ஒருவன் "அப்படியானால் இந்த அறையில் வா. நாம் சாவகாசமாக விஷயத்தைப் பேசுவோம்" என்று கூறினன். அத்தொனியைக் கேட்ட மாத்திரத்தில் விசுவநாதன் அப்படிப் பேசியவர் யாரென்று கவனிக்கும் பொருட்டு சுற்றிப் பார்த்தபோது எதிர் அறையின் வாயிலில் மிக்க விகாரரூபமுடைய மனிதன் நின்றிருப்பதைக் கண்டான். அங்கே நின்றவன் தானப்பனேயன்றி வேறெவருமன்று. பரியாரியும் விசுவநாதனும் பேசிக்கொண்டிருந்ததை தானப்பன் கேட்டுக்கொண்டிருந்ததால் விஷயத்தைத் தொடர்ந்து பேச அவனல் முடிந்தது.

அதன்படியே விசுவநாதனும் தன் க்ஷவரத்தை முடித்துக்கொண்டு தானப்பன் இருந்த அறைக்குள் சென்றான். அப்போது தானப்பன், "நீ ஏதோ வேலைபாகவே இங்கு வந்திருப்பதாகத் தெரிகிறது; அதைப்பற்றி இப்போது விவரமாகப் பேசலாம். நான் யாரென்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். அப்படியில்லையென்றால் நானே அறிமுகம் செய்துகொள்கிறேன். நான்தான் தானப்பன்; உனக்கு க்ஷவரம் செய்தவன் என் குமாஸ்தா. ஆகவே அவன் எதிரிலும் பேசலாம்" என்று கூறிவிட்டு அப்பரியாரியையும் உள்ளே அழைத்துக் கதவை மூடிவிடும்படி கட்டளையிட்டான்.

தானப்பனைப்பற்றி விசுவநாதன் அதிகம் அறிந்துகொண்டிருக்கிறபடியால் அப்படிப்பட்ட ஆபத்தான ஒரு மனிதன் முன் தான் தனிமையாக இருக்கவேண்டிய நிலைமை

ஏற்பட்டதற்காகச் சிறிது அச்சமடைந்தானென்றாலும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "நானும் உன் குமஸ்தாவும் பேசியபோது நீ மறைவில் இருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாயோ?" என்று தானப்பனைக் கேட்டான்.

தானப்:—ஆம்; நீ என் குமஸ்தாவுடன் ஏதோ முக்கிய விஷயம்பேச ஆரம்பித்ததே அதை நான் கவனத்துடன் கேட்கலானேன். ஏனெனின் எப்போதாவது ஏதேனும் சமயம் அகப்படுமா என்று காத்துக்கொண்டிருப்பவன் தானே.

விசுவ:—சரி; தானப்பா! இப்போது நாம் மீண்டும் பழைய கதையைத் தொடங்கவேண்டாம். நான் இப்போது சிறையில் இருக்கும் வேலப்பனுடைய அந்தரங்க நண்பன்.

தானப்:—அப்படியானால் நீ இங்கு வரும்போதே ஏதோ காரியமாகத்தான் வந்திருக்கிறாய். வந்தவிடத்தில் தற்செயலாக நீ ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லையென்று ஏற்படுகிறது.

விசுவ:—ஆம்; காரியமாகத்தான் வந்தேன். நீயோ அல்லது உனது குமஸ்தாவோ சிறையிலுள்ள கைதிகளுக்கு க்ஷவரம் செய்கிறீர் என்று தெரிந்துகொண்டுதான் இங்கே வந்தேன். நான் முன்புகூறியபடி நான் வேலப்பனுடைய சிநேகிதன். ஆனால் நான் அவனுக்காக எவ்வளவுதான் பரிந்தாலும் பகிரங்கமாக வெளியில் வந்து ஒன்றும் செய்யமுடியாத நிலைமையில் இருக்கிறேன். அந்த நிலைமையைப்பற்றி விவரமாக உன்னிடம் கூற முடியாததற்காக வருந்துகிறேன். நான் அவனுக்காக என்ன செய்தாலும் அவையனைத்தும் ரகசியமாகவே

இருக்கவேண்டும். நான் இவ்வளவு உழைக்கிறேன் என்பது வேலப்பனுக்குக்கூட கொஞ்சகாலம் தெரிய லாகாது. ஏனெனின் காரியம் முடியும்வரை அவனுக்கு வெறும் நம்பிக்கை கொடுப்பதில் பயனில்லை.

தானப்:—அப்படியானால் நாங்கள் உனக்கு என்னசெய்ய வேண்டுமென்கிறாய். உன் யோசனைதான் என்ன?

விசுவ:—தானப்பா! உன் குமஸ்தா தினசரி நமது வேலப் பனைப் பார்த்துவிட்டு வருவதால் அவன்மூலம், வேலப் பன் தப்பித்துக் கொள்ளும்படி உபாயம் செய்தால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையில் அவன் இருக்கிறானா என்று விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

தானப்:—இதை எளிதாகத் தெரிந்துகொண்டு விடலாம். நீ கூறிய இந்த யோசனையின்படி செய்தாய்விட்டது என்று வைத்துக்கொள்வோம்; பிறகு உன் அடுத்த திட்டம் என்ன?

விசுவ:—அப்படித் தெரிந்துகொண்ட பிறகு அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச்செய்ய நாம் தயாராக இருக்கவேண்டும்.

தானப்:—அதற்கு நீ உடன் இருந்து உழைப்பதுடன் வேண் டிய பணத்தையும் தருவாயோ?

விசுவ:—அவ்வளவு முன்னேற்பாடுகள் இல்லாவிட்டால் நான் இங்கு வரவேண்டிய அவசியமே இல்லை. என் அன்பான நண்பர் மகா கொடிய தூக்கு தண்டனையி னின்றும் தப்பவேண்டுமென்பதற்காகவே இவ்வளவு சிரமப்பட்டு இங்கு வந்தேன். உங்களுக்குப் பணம் கொடுப்பதிலும் பின் வாங்கமாட்டேன். இதோ எடுத் துக்கொள்.

என்று கூறிய வண்ணம் சில நோட்டுகளைத் தன் குறிப்புப் புஸ்தகத்தினின்றும் எடுத்துத் தானப்பன் கையில் கொடுத்தான். விசுவநாதனுக்கு இவ்வளவு தொகை கொடுத்து உதவியது சர்தார் சூரியநாயகம் பிரபுவே. பணத்தைக் கையில் பார்த்ததும் தானப்பனுக்கும் அவனது குமஸ்தாவுக்கும் சந்தோஷம் அதிகரித்து விட்டது.

தானப்:—நீ இப்போது நடந்து கொண்டவிதம் சரியானது. காரியத்தில் கவனமாய் இருக்கிறாய் என்று தெரிகிறது. நீதான் பகிரங்கமாய் வாமுடியாதென்று கூறுகிறாயே.

விசுவ:—ஆம்; வரமுடியாதுதான். என் மற்ற சந்தர்ப்பங்களின் காரணமாக நான் அவ்வாறு இருக்கவேண்டியதாக இருக்கிறது. உண்மையாகவே வேலப்பன் விடுதலை யடையும்வரை நான் அவனுக்காக உழைக்கிறேனென்பது அவனுக்கும் தெரியக்கூடாது. நான் யார், என்பெயர் என்ன என்பதும் உன்னிடம் சொல்ல முடியாது. நீ என்னைப்பற்றித் தெரிந்து கொள்ளும் பொருட்டு இரகசியமாக விசாரிக்க ஆரம்பித்தால் நான் உடனே நமக்குள் இப்போது ஏற்பட்ட சம்பந்தத்தை அறுத்துக்கொண்டு விடுவேன் என்பது நிச்சயம்.

தானப்பன் சூதும் வாதும் நிரம்பியவன் என்பதும் மற்றவரை எளிதில் நம்பிவிடமாட்டான் என்பதும், மற்றும் அவனுடைய கொடிய குணங்களும் நேயர்களுக்குத் தெரிந்த விஷயமே. எனினும் விசுவநாதன் பேசிய தோரணையில் தானப்பன் ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆதலின் யாரோ கனவான் கௌரவமாக இருந்துகொண்டு தன் நண்பன் வேலப்பனை விடுவிக்க முயல்கிறான். இதிலென்ன குற்றமிருக்கிறது என்று நினைத்துவிட்டான். அவனே நம் பினுனென்றால் அவனுடைய குமாஸ்தாவைப்பற்றிக் கேட்க

வேண்டியதே இல்லை. மேலும் கையில் நோட்டுகளைப் பார்த்த மாத்திரத்தில் தானப்பன் மயங்கிவிட்டான். இதனால் இது வரை நடந்திருக்கிற விஷயம் பூராவையும் விசுவநாதனிடம் சொல்லிவிடுவதெனத் தானப்பன் தீர்மானித்துவிட்டான்.

தானப்:—ஐயா! நீ செய்வதும் சொல்வதும் சரிதான். ஆகவே நாம் முடிவான விஷயத்தைப்பேச ஆரம்பித்துவிடுவோம். உன் நண்பன் வேலப்பன் நாம் ஏதேனும் சௌகரியம் செய்துகொடுத்தால் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையில் இருக்கிறானா என்று கேட்கிறாய்? அதற்கு நானே உடனே பதில் சொல்லிவிடுகிறேன். இதற்காக உன்னைக் காக்கவைக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் அத்தகவல் உனக்குத் தெரிவிப்பதற்காக நீ என்ன சன்மானம் செய்வாய்.

இதைக்கேட்டதும் விசுவநாதன் உள்ளத்தில் மகிழ்ச்சி கொண்டான். தான் கோரிவந்த காரியம் வெற்றியுறும்போல் தெரியவே சிறிதும் பின்வாங்காமல், "அத்தகவலுக்காக இதோ ஐம்பது பவுன் தருகிறேன் எடுத்துக்கொள்" என்று சொல்லி அதை அவன் கையில் கொடுத்தான்.

தானப்:—சரி; சந்தோஷம். இப்போது விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். வேலப்பன் நமது துணையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறான். மேலும் அதைப் பற்றி நானும் எனது குமஸ்தாவும் வேலப்பனுடன் பேசியே சில விஷயங்களை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

விசுவ:—ஓ! அப்படியா. இது சந்தோஷமான செய்தியே. பாவம் வேலப்பன் எனக்கு எவ்வளவோ உதவிகளெல்லாம் செய்திருக்கிறான். ஆகையால் அவனுக்காக நான் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன்.

ஆகையால் நண்பர்களே உண்மையில் சொல்லுங்கள். அவனை விடுவிக்க ஏதேனும் நம்பிக்கை இருக்கிறதா?

தானப்:—மனமிருந்தால் வழியுமுண்டு என்று சொல்வார்களல்லவா? வேலப்பன் தங்கி இருக்கும் சிறையின் சுவர்கள் மிக உயரமாகவும், உறுதியாகவும் இருந்தாலும், அதன் வாயில்களுக்குள்ள இரும்புக் கம்பிகளெல்லாம் மிக்க உறுதியானதாக இருந்தாலும் தானப்பன் வேலை செய்வதென்று இறங்கிவிட்டால் அவைகளை எல்லாம் எளிதில் வென்றுவிடலாம்.

விசுவ:—நீ பேசும் துணிவைப் பார்த்தால் எனக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுகின்றாய் என்றல்லவோ காணப்படுகிறது. நீ தயவுசெய்து உன் திட்டங்களைத் தெரியப்படுத்து. இதுவரை என்ன முடிவு செய்திருக்கிறீர்கள் என்பதையும் அறிவி. உனக்கு ஏதேனும் சன்மானம் கொடுப்பதாகச் சொல்லி யிருந்தால் அதற்கு இரண்டத்தனை தரும்படி ஏற்பாடு செய்வேன்.

தானப்:—நீ மிக்க தாராள நோக்கமுடையவன். ஆனால் அவசரப்பட்டுப் பேசி விடவேண்டாம். இரட்டத்தனை தர ஏற்பாடு செய்கிறேன் என்றால் அது உன்னால் முடியுமா என்பதைக் கவனித்துப்பார்.

விசுவ:—நான் சொன்னது வெறும் பெருமைக்கு என்று நினைக்க வேண்டாம். ஆகக்கூடிய காரியத்தையே சொன்னேன்; என்ன பிரமாதம். உனக்கு எவ்வளவு தொகை சன்மானம் கெய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சொல் பார்ப்போம்.

தானப்:—எனக்கா! ஆயிரம் பவுன் தருவதாக உறுதி கூறி யிருக்கிறான். அதற்கு நீ என்ன சொல்கிறாய்.

விசுவ:—ஆயிரம் பவுனு! இத்தொகை மிகவும் அதிகம் தான். ஆயினும் நான் கூறிய வார்த்தையினின்றும் தவறமாட்டேன். இத்தொகை உனக்கு எப்போது, எப்படி கிடைக்கும் என்பதைத் தெரிவித்து விட்டால் நானும் அப்போதே என்தொகையைக் கொடுக்கச் சௌகரியமாக இருக்கும்.

தானப்:—நீ வேலப்பனுடைய உண்மையான நண்பனே என் பதில் சிறிதும் சந்தேகமில்லை. உண்மையான விவரத்தைக் கூறுகிறேன். இன்றிரவு வேலப்பனுடைய மனைவி தன்னிடம் வேண்டிய தொகை இருக்கிறதென்பதை எங்களுக்குக் காண்பிப்பாள். இன்றிரவு ஒன்பது மணிக்குமேல் அவள் இப்போது வசிக்கும் இடம் சென்று தொகை இருக்கிறதா என்பதைக் கவனிப்பேன். அதேசமயத்தில் நீ எங்குவரச் சொல்கிறாயோ அங்குவந்து உன் பணத்தையும் பார்ப்பேன்.

விசுவ:—என் பணத்தைப்பற்றி நீ பயப்படாதே. நானே இன்றிரவு பத்துமணிக்குமேல் இங்கேவந்து சில நூறு பவுன்களையேனும் கொடுத்துவிட்டுப் போகிறேன். ஆனால் நான் வந்தது போனதுபற்றி யாரிடமும் ஒன்றும் சொல்லவேண்டாம்.

தானப்:—அப்படியே செய். நான் எந்த இரகசியத்தையும் யாரிடமும் சொல்லமாட்டேன்.

இந்த சம்பாஷணைக்குப் பின் விசுவநாதன் தானப்பனுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டான். அதன்பின்னர் தானப்பனும் அவனது ஆளும் தங்களுக்கு ஏற்பட்ட நற்காலத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டார்கள். ஒரே காரியத்துக்காக இருவர் தனித்தனியே

ஆயிரம்பவுன் வீதம் தரக்கூடிய நிலைமை ஏற்பட்டது கண்டு சந்தோஷமடைந்தனர்.

நேயர்காள்! விசுவநாதன் தானப்பனுடன் பேச ஆரம் பித்தது முதலே, வேலப்பன் தப்பி ஓடிவிட ஏதேனும் முயற்சி செய்திருக்கிறனா? அதற்கு வேண்டிய பணம் அவ னிடம் என்ன இருக்கிறது? என்பது போன்ற விஷயங் களைக் கிரகித்துக் கொள்ளவே அவன் முயன்றான் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அவ்விஷயங்களை யெல்லாம் அவன் தெரிந்துகொண்டுவிட்டபடியால் இனி அதைப் பாழாக்குவதே அவன் வேலை. அதற்கான முயற்சியையும் அவன் செய்ய ஆரம்பித்து விட்டான். இங்கே நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் மற்றொன்று இருக் கிறது. அதாவது புத்திமானே பலவான் என்னும் உண் மையேயாகும். தானப்பன் எவ்வளவு பலமுடையவனாக வும், கொடிய சுபாவமுடையவனாகவும் இருந்தும் அவனைத் தேக வலிமையில் எளியவனான விசுவநாதன் தன் புத்தி சாதுர்யத்தால் வெற்றி கொண்டான். ஆதலின் அறிவுள்ள வர்கள் எப்படிப்பட்ட துஷ்டர்களிடம் அகப்பட்டுக்கொண் டாலும் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொள்ளலாம்.

141 - வது அத்தியாயம்

இப்போது நாம் சிறையிலுள்ள வேலப்பனைக் கவனிப் போம். மேற் குறிப்பிட்ட சம்பவம் நடந்த அன்றிரவு அவன் சிறையில் சிறிதும் தூங்காமல் தான் விடுதலை யடை வதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாதாகுமோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். நம்பிக்கை ஒருவாறு ஏற்பட்

டிருக்கிறதென்றாலும் அதையே நம்பி அவன் நிம்மதியாய் இருந்துவிட முடியவில்லை. அவனுக்கு எவ்வளவோ வகை யான அச்சங்கள் தோன்றலாயின. தன் மனைவியிடம் இருக்கும் பணத்துக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிட்டால் என்னசெய்வது! அவன் தப்புவதெல்லாம் அத்தொகை எவ் வளவு பத்திரமாக இருக்கிறதென்பதைப் பொருத்திருக்கிறது. தன் மனைவி பணத்தை ஜாக்கிரதையாக வைத்திருக்கிறாளா, வெளியில் போகும்போதெல்லாம் இரும்புப்பெட்டியின் சாவியைப் பத்திரமாக உடன் எடுத்துச் செல்கிறாளா என்று தான் தன் மனைவியைக் கேட்காமற் போனதற்காக வருந்தி னான். தானப்பனே எத்தகைய உதவியும் செய்யாமல் பணத்தைமட்டும் பறித்துக்கொள்ள முயன்றால் என்னசெய் வது என்னும் அச்சம் ஒருபுறம்; அப்படி அவன் உதவி செய்ய இசைந்தாலும் இப்படிப்பட்ட பிரம்மாண்ட சுவர் களையுடைய சிறையிலிருந்து தப்புவது எப்படி என்னும் அச் சம் மற்றொருபுறம். இவ்வாறாக வேலப்பன் இரவெல்லாம் சிறிதும் கண்ணைமூடாமல் பற்பல சிந்தனைகளில் காலங் கழிக்கலானான், ஆனால் சிற்சில சமயங்களில் எத்தனையோபேர் அதே சிறையினின்றும் பல விதங்களிலெல்லாம் தப்பிச் சென்றிருக்கிறார்களே என்பதை நினைக்கும்போது சிறிது ஆறுதல் அடைவான். மேலும் தானப்பன் இக்கஷ்டங்களை யெல்லாம் சமாளித்துக்கொண்டு எப்படியாவது தன்னை விடு விப்பான் என்று நினைக்கும்போதும் தன் விடுதலையில் சிறிது நம்பிக்கை கொள்வான்.

இவ்வாறாக வேலப்பன் அன்றிரவெல்லாம் சிறைச்சாலை அறையில் தன் படுக்கையில் உட்காருவதும் எழுந்திருந்து நடப்பதும், துக்கத்தால் கண்ணீர்விடுவதும், உடனே சிறிது நம்பிக்கையால் புன்முறுவல் செய்வதும், ஒருசமயம் அச்சப்

படுவதும், மறுசமயம் நம்பிக்கை கொள்வதுமாகப் பலவகை களில் காலத்தைக் கழித்தான்.

மறுநாள் காலை வழக்கப்படி பரியாரி வரவேண்டிய வேளை சமீபித்தது. சற்று நேரத்துக்கெல்லாம் காவலாளி யும் வேலப்பனுடைய அறைக்குவந்து பூட்டைத் திறந்து உள்ளே சென்று வேலப்பனைப் பார்த்து, "நீ இன்று க்ஷவரம் செய்துகொள்கிறாயா" என்று கேட்டான். அதற்கு அவன், "ஆம்; ஆம். செய்துகொள்ள வேண்டியதுதான்" என் றான். உடனே பரியாரியும் காவலாளியின் கட்டளைக்கிணங்க உள்ளே நுழைந்தான், காவலாளியும் கதவைச் சாத்திக் கொண்டு சென்றான். அறையில் வேலப்பனும் பரியாரியும் தனியே நின்றதும் பரியாரி தலையை யசைத்ததும் வேலப் பன் ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டதென்று உணர்ந்து தன் பின்னுலிருந்த படுக்கையில் திடீரென்று மயக்கமுண்டவன் போல் விழுந்து துயரப்படலானான். இதைக் கண்டு பரியாரி பீதியடைந்து அவனை எழுப்பப்போனான். ஆனால் அவ னுடைய தீப்பொறி பறக்கும் கண்களையும் அவனுடைய தேகம் துடிப்பதையும் கண்டு அஞ்சினான். இவ்வளவு கோபா வேசத்துடன்கூடிய மனிதனை பரியாரி எப்போதும் கண்ட தில்லை.

இதற்குள் வேலப்பன் தானாகவே மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். உடனே பரியாரியை உற்றுநோக்கிய வண் ணம் ஏதோ கேட்கப்போனான். ஆனால் பேச அவன் நா எழவில்லை. பற்களெல்லாம் கிட்டிக்கொண்டன. அவனுடைய திண்டாட்டத்தைக் கண்ட பரியாரி தானாகவே, "என் எஜ மானனிடம் பணம் இல்லாமல் ஒன்றும் செல்லாது. வேறு பணத்துக்கு ஏதேனும் ஏற்பாடு செய்தாலொழிய பயன் படாது" என்றான்.

இதைக்கேட்டதும் வேலப்பன் இன்னும் அதிக பீதியடைந்து, "என்ன? நீ சொல்வதை விளக்கமாய்ச் சொல்" என்ருன். அதற்குப் பரியாரி, "நேற்று பகல் சர்க்கார் ஷெரீப் உன் மனைவி வசிக்குமிடத்துக்கு ஆளை அனுப்பி அவளிடமிருந்த சுமார் ஆயிரத்தைந்நூறு பவுன்களையும் கைப்பற்றிச் சென்ருராம்" என்று கூறினுன். அச்செய்தியைக் கேட்டதும் வேலப்பன் துயரக்கடலில் மூழ்கித் தலையைத் தொங்கவிட்டான்.

ஆனுல் சிறிது நேரத்துக்கெல்லாம் காவலாளி வந்து பரியாரியை வெளியே அனுப்பி விடுவானுதலால் அதற்குள் நடந்த விஷயங்களையேனும் நன்ருகத் தெரிந்துகொண்டு விடவேண்டும் என்னும் எண்ணத்துடன் ஒருவாறு தேறுதலடைந்து உட்கார்ந்துகொண்டு பூரா விவரங்களையும் கூறும்படி பரியாரியைக் கேட்டான்.

அதற்கு அப்பரியாரி பின் வருமாறு கூறினுன்:—நேற்றிரவு ஒன்பது மணிக்குமேல் நானும் எனது எஜமானனும் உன் மனைவி வசிக்கும் இல்லம் சென்று உன்மனைவியையும் குமாரியையும் கண்டோம். ஆனுல் ஐயோ பாவம்! அவர்களிருவரும் கண்ணீரும் கம்பலையுமாக மிகத் துக்கத்துடன் கவலை கொண்டிருந்தனர். நாங்கள் அங்கு சென்றதன் காரணத்தை உன் மனைவியிடம் விளக்கிக் கூறினேம். அப்போது அம்மாது, எப்படியோ உளவை அறிந்துகொண்டு சர்க்கார் ஷெரீப் அங்கு தன் ஆட்களுடன் வந்து சோதனை போட்டு எல்லாத் தொகையையும் அபகரித்துக் கொண்டதாகவும், அம்மாதர்களின் கைச்செலவுக்காகமட்டும் ஐம்பது பவுன் விட்டு வைத்திருப்பதாகவும் கூறினுள். ஆகையால் அங்கே பணமில்லை என்பதை அறிந்துகொண்டு நானும் என் எஜமானனும் எங்கள் இடத்துக்குப்போய்ச் சேர்ந்தோம்.

வேலப்:—ஆ! தெய்வமே, இந்த இரகசியத்தை யார் வெளியிட்டிருப்பார்கள். நிச்சயமாகவே என் ஜன்மவிரோதியாகிய அவனாகவே இருக்கவேண்டும். அவன் இன்னுமா என்னைப் பின் தொடர்ந்து வருகிறான்!

பரியாரி:—உன் சார்பில் உன் விடுதலைக்காக உழைக்கும் உன் நண்பன் எவனேனும் இருக்கிறானா?

வேலப்:—நண்பனா! ஐயோ கடவுளே! என்னைப்பார்த்தால் எனக்கு நண்பர்கள் இருக்கிறார்களென்று நினைக்கவும் இடமிருக்கிறதா.

பரியாரி:அப்படி யானால் உள்ளதைச் சொன்னால்தான் உனக்கு விளங்கும். சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஒருவன், பார்வைக்கு அழகாகவும், மெல்லிய தேகத்துடனும், சுத்தமாகவும் இருக்கும் ஒருவன் உனக்குத் தெரியுமா?

வேலப்:—ஏன்? நீகூறும் விவரத்தைப் பார்த்தால் என் ஜன்ம விரோதியாகிய விசுவநாதனைப் பற்றியே கூறுவதாகத் தெரிகிறது,

பரியாரி:—அப்படியானால் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. அவன் சொன்னபடி நேற்றிரவு வாராததால் இதில் ஏதோ சூது இருக்க வேண்டுமென்று என் எஜமானன் நினைத்தது சரியாகவே முடிந்தது,

வேலப்:—என்ன: நீ எந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறாய். என்ன நடந்ததென்பதையாவது முழுவதும் விவரமாய்க் கூறு.

பரியாரி:—நேற்று பகல் ஒரு இளைஞன் எங்கள் க்ஷவரக் கடைக்கு வந்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்து உன் நண்பன் என்று சொல்லி நாங்கள் உன்னை விடுவித்

தால் தானும் ஏதேனும் சன்மானம் செய்வதாகக்கூறி என் எஜமானனிடமிருந்து எல்லா விஷயங்களையும், "உன் மனைவியிடம் பணம் இருக்கிறதென்பது உள் படக் கிரகித்துக்கொண்டு போய்விட்டான்.

வேலப்:—ஐயோ! அயோக்கியர்களா! நீங்கள் உங்கள் முட்டாள்தனம் காரணமாக என்னையே அழித்து விட்டீர்களே. இனி நான் பிழைக்க முடியாது. விசுவநாதன் இன்னும் என்னைப் பின்தொடர்ந்து வருகிறான் என்று தெரிகிறது. என்னைத் தூக்குமேடையில் ஏற்றுவதை அவன் காண விரும்புகிறான் போலும்! அவன் தான் ஷெரீபுக்கு இவ்விஷயத்தைத் தெரியப்படுத்தி விட்டான். ஐயோ கடவுளே! கடவுளே!

என்று உளறிக்கொண்டே மீண்டும் தன் படுக்கையின் மீது விழுந்து புரண்டான். அடிபட்ட பாம்பைப்போல் பல வகையிலும் துயரமடைந்த வண்ணம் பிரலாபித்துக்கொண்டிருந்தான். அக்கோரக்காட்சி பார்ப்பதற்கே மிக்க பரிதாபமாக இருந்தது. பரியாரி மிக்க கடூரமான மனதை யுடையவனாதலால் அதையெல்லாம் பார்த்துக்கொண்டு சிறிதும் சலனமின்றி நின்றுகொண்டிருந்தான். எனினும் அவன் உடனே காவலாளி வரும் வேளையாயிற்று என்று மட்டும் வேலப்பனுக்கு ஞாபகப் படுத்தினான்.

உடனே வேலப்பன் படுக்கையினின்றும் எழுந்து உட்கார்ந்து, "ஆ! நான் எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியனானேன். எல்லா நம்பிக்கைகளும் அற்றுப்போயினவே. ஆனால் உங்களுக்கு மனமிரங்க வில்லையா? நம்பிக்கை போனதுதானா? ஐயோ கடவுளே! நீயும் உனது எஜமானனும் எனக்கு உதவிசெய்ய மாட்டீர்களா? உங்களால் தான் உங்கள் முட்டாள் தனத்தால்தான் என் பணம் முழுவதும் போயிற்று

என்பது ஞாபகமிருக்கட்டும். அப்படிப் பணம் போனதனுல் தானே உங்களுக்குக் கொடுக்க முடியவில்லை? என்ருன்.

பரியாரி:—இன்னெரு ஆயிரம் பவுன் எப்படியாவது சமாளிக்க உன்னுல் முடியாதா?

வேலப்:—முடியவே முடியாது, ஆயிரம் பைசாவும் சமாளிக்க முடியாது. நம்பிக்கை இல்லை என்னும் அச்சத்தால் என் தேகமெல்லாம் நடுங்குகிறதே! நீங்கள் உதவிசெய்ய மாட்டீர்களா?

பரியாரி:—பணம் சமாளிக்க முடியாதென்ருல் நிச்சயமாக நம்பிக்கை இல்லை என்று வைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

வேலப்:—நீயும் உனது எஜமானனும் என்னை இத்தகைய ஆபத்தான நிலைமையில் விட்டுவிட மாட்டீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

பரியாரி.—உனக்கு உதவிசெய்வதில் பல கஷ்டங்களும் ஆபத்துகளும் இருக்கிறதே. அதற்கு யார் பணம் கொடுப்பார்கள்?

வேலப்:—ஆபத்தா! அந்த ஆபத்து எனக்கும் இருக்கிறதல்லவா? நான் தப்ப முயற்சிக்கும் வேளையில் எனக்கும் ஆபத்து ஏற்படலாமன்ருே?

பரியாரி:—நீ தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவன். உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் பாதகமில்லை. ஆனுல் எங்கள் நிலைமை அப்படி ஆகுமா?

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது சிறைக் காவலாளி வந்து அந்த அறையின் பூட்டைத் திறக்கும் சத்தம் கேட்டது. உடனே வேலப்பன் உணர்ச்சி யடைந்து,

"அவன் வருகிறானே! நாம் எத்தகைய முடிவுக்கும் இன்னும் வரவில்லையே" என்றான்.

அதற்கு அப்பரியாரி, "என்ன முடிவுக்கு வருவது. அதெல்லாம் ஒன்றும் முடியாது. நீ உட்காரு. உனக்கு க்ஷவரம் செய்கிறேன்" என்று கூறினான். அப்போது வேலப்பன், "அப்படியானால் நான் க்ஷவரம் செய்துகொள்ள முடியாது. என்மனம் குழப்ப மடைந்து விட்டது" என்று கூறிக்கொண்டே மீண்டும் படுக்கையில் விழுந்து புரள ஆரம்பித்தான். அவ்வேளையில் காவலாளியும் உள்ளே நுழைந்தான்.

உடனே பரியாரி, "இன்று வேலப்பன் க்ஷவரம் செய்துகொள்ளக்கூடிய மனோநிலைமையில் இல்லை. நீ என்னை உள்ளே விட்டுச்சென்றதும் அவன் மதிமயங்கி விழுந்து விட்டான். இன்னமும் எழுந்திருக்கவில்லை.'' என்றான்.

அதற்குக் காவலாளி நிதானமாக, "அப்படியானால் அவனைப் பார்க்க நாம் டாக்டரை வரவழைக்க வேண்டியதுதான்" என்று சொன்னான். உடனே பரியாரி வெளியே போய்விட்டான். சொற்பநேரம் கழிந்த பின்னர் வேலப்பன் சிறிது தெளிவடைந்து உட்கார்ந்தபோது பக்கத்தில் சிறைச்சாலை டாக்டரும், மதபோதகரும் நின்றிருப்பதைக் கண்டான்.

---

142 - வது அத்தியாயம்

துயரத்தில் மூழ்கிக்கிடந்த வேலப்பன் அவர்களிரு வரையும் உற்று நோக்கினன். அவர்கள் இருவரையும் அவன் பலமுறை பார்த்திருந்தும் அப்போது அவர்கள் யாரென் பதை அறியாதவன்போல் நடந்து கொண்டான். அப் போது மத உபதேசகர் அவன் சமாதானத்தை யடைய வேண்டுமென்றும் தைரியத்துடன் இருக்க வேண்டுமென் றும் உபதேசிக்க ஆரம்பித்தார். டாக்டர் நாடியைப் பிடித் துப் பார்த்து அவனுடைய நிலைமையை அறிந்து இன்னும் சொற்பநேரத்துக்குள் அவனது மனோநிலைமை சாந்தப்படு மென்று தெரிவித்தார். அப்படியே சொற்ப நேரத்துக்குள் அவனும் சமாதான நிலைமையை அடைந்து எதிரில் நிற்கும் இருவரும் இன்னாரெனத் தெரிந்து கொண்டான். தான் மனக்குழப்பம் அடைந்தவனைப்போல் இருந்தால் சதா சர்வ காலமும் ஒரு காவலாளியைப் போட்டுவிடுவார்க ளாதலால் பிறகு தப்பித்துக்கொண்டு செல்ல எத்தகைய முயற்சியும் செய்ய முடியாமற் போகுமாதலின் மனக்குழப்ப மில்லா தவன்போல் இருப்பதே நலமென்று அறிந்து ஒருவாறு தன்னைத்தான் சமாதானப் படுத்திக்கொண்டு அமைதியை யடைந்தான்.

ஆகவே தன் எதிரில் இருந்த மதபோதகரிடம் மரி யாதை செலுத்தி ஏதோ துக்கத்தால் திடீரென்று தன் மனம் அதிகம் வேதனைப்பட்டதாகவும், எனினும் தான் எப்படிப் பட்ட கவலையையும் பொறுத்துக்கொள்ளக் கூடியவனென் றும் சொல்லிக்கொண்டான். அவரும் அவனை ஆசீர்வதித்து அவன் ஆத்மா சாந்தி யடையவேண்டுமெனப் பிரார்த்தனை

செலுத்தினர். பிறகு டாக்டரும் மதபோதகரும் வெளியே சென்றனர். வேலப்பன் மட்டும் மீண்டும் தனியாக இருந்தான்.

அப்போது அவன் ஒரு ஆசனத்தின்மீது உட்கார்ந்து கொண்டு யோகாப்பியாசம் செய்பவன்போல் இனி தான் என்னசெய்வது என்பதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்கலானன். தன் மனைவிபோய்க் கேட்டால் உடனே ஆயிரம்பவுன் தரக்கூடிய நண்பர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தன் நண்பர்களின் பெயரை எல்லாம் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தான். ஆனால் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனுடைய மனைவிக்கு யார்தான் கடன் கொடுப்பார்கள். மேலும் வேலப்பனே முன்பு எல்லாரிடத்திலிருந்தும் அதிக வட்டி வாங்கி எல்லாருக்கும் விரோதியாக இருக்கிறான். ஆகையால் யாரும் பணம் தரமாட்டார்களென்று தெரிந்ததும் மீண்டும் கவலையில் ஆழ்ந்து பலவகையாகச் சிந்திக்க ஆரம்பித்தான். அப்போது தனக்கு மரணதண்டனை நிறைவேற்ற வேண்டியநாள் வந்துவிட்டது போலும், பெருங் கூட்டம் கூடியிருப்பது போலும், பிரபல அதிகாரிகளெல்லாம் வந்து தன்னைத் தூக்குமேடைக்கு அழைத்துக்கொண்டு போவது போலும், தான் தூக்கில் சிக்கி மாண்டதாகவும் நினைத்துக் கொள்ளவே பெரும்பீதி அவனை அலைக்க ஆரம்பித்தது. பகலில் கனவு காண்பதுபோல் அவன் இப்படியெல்லாம் மனக்கண்ணால் கண்டான். ஆனால் சிறிது மன அமைதியை யடைந்ததும் தான் பழையபடி சிறையின் அறையில் தனியாக இருப்பதை யறிந்து, “ஓ, கடவுளே! உண்மையில் நான் தூக்குமேடையில் இல்லை. அத்துக்க சம்பவங்களையெல்லாம் மனக்கண்ணால் கண்டேன்” என்று நினைத்துக்கொண்டு இன்னும் சொற்பகாலத்துக்குள் எப்படியாவது தூக்குமேடையி

னின்றும் தப்பித்துக்கொள்ள என்னவழி என்று பற்பல முறைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகச் சிந்திக்கலானான்.

சற்று நேரத்துக்கெல்லாம் வழக்கம்போல் வேலப்பனுடைய மனைவியும் குமாரியும் அங்கே வந்தார்கள். சர்க்கார் ஷெரீப் பணத்தை யெல்லாம் அபகரித்துச் சென்றதற்காக வேலப்பன் அவர்களிருவரையும் வாயில் வந்தபடியெல்லாம் திட்டினான். அவர்கள் அப்பணத்தை எங்கேனும் ஒளித்து வைத்திருக்க வேண்டுமென்றும், அவர்களிடம் பணமே கிடையாதென்று உறுதியாக மறுத்திருக்க வேண்டுமென்றும், சோதனைக்கு வந்தபோதும் அவர்களைவிட் டிருக்கக்கூடாதென்றும் பலவாறெல்லாம் சொல்லி அதையெல்லாம் அவர்கள் செய்யாததால் அப்பணம் போனதற்கு அவர்களே பொறுப்பாளிகளென்று வசைமொழி கூறினான்.

ஆனால் திடீரென்று ஒரு எண்ணம் அவன் மனதில் உதித்தது. இவ்வளவு துக்கமும் கவலையும் அடைந்திருந்த அவன் உள்ளத்தில் ஒரு ஒளி தோன்றியதுபோல் அவ்வெண்ணம் தோன்றவே, தன் மனைவியையும் குமாரியையும் திட்டிக்கொண்டிருந்த அவன் திடீரென்று தன் மனப் போக்கை மாற்றிக்கொண்டு அவர்களுடன் சமாதானமாகவும், உல்லாசமாகவும் பேச ஆரம்பித்தான். தனக்குப் புதிதாகத் தோன்றிய எண்ணத்தின்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்றும் அவர்களிடம் கூறினான். அதாவது வேலப்பனுடைய மனைவி உடனே சர்க்காருக்கு ஒரு மகஜர் அனுப்பி அதில் ஷெரீப் பறிமுதல் செய்துகொண்டு போன பணம் தன் சொந்த பணமென்றும், அதைத் தன் கணவன் கடன்களுக்காகக் கைப்பற்றியது தவறு என்றும் தெரிவித்துக் கொள்ள வேண்டு மென்பதே. அதை அவன் மனைவியும் குமாரியும் செய்ய முற்பட வேண்டுமென்று

சொல்லி அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்ட பின்னர், அவர்கள் உடனே ஒரு வக்கீலிடம் சென்று சாமர்த்தியமாக மகஜர் எழுத வேண்டுமென்றும், அங்கிருந்து நேராக அதை மந்திரியிடம் கொண்டுபோய்க் கொடுத்து உடனே இளவரசரிடம் சேரும்படி செய்ய வேண்டுமென்று தெரிவிக்க வேண்டுமென்றும் கூறினன். வாஸ்தவத்தில் இவ்வழியில் தான் தப்பித்துக் கொள்ளலாமென வேலப்பன் உண்மையில் நம்பினன். ஆகவே தன் மனைவியிடம் அவன் சாமர்த்தியமாகவும் முறைப்படியும் நடந்துகொண்டால் இம்முயற்சியில் வெற்றி பெறலாமென்றும் கூறினன். அவளும் தன்னுலானதையெல்லாம் செய்வதாக வாக்குறுதி யளித்தாள். தான் சொன்னபடி செய்வதற்காக வென்று அவன் உடனே அவர்களிருவரையும் வெளியே அனுப்பினன்.

அவர்கள் இருவரும் சென்றபின் ஒருவாரம் கடந்து விட்டது. ஆ! நாம் எளிதில் ஒருவாரம் அல்லது ஏழுநாட்கள் என்று சொல்லிவிட்டோம். இந்த ஏழுநாட்களையும் வேலப்பன் சிறையில் எவ்வாறு கழித்தான் என்று கூற வேண்டுமாயின் அதுமட்டுமே பல அத்தியாயங்களாக முடியும். எத்தகைய மனக்கவலையுமின்றி வெளியில் இருக்கிறவர்களுக்கு ஏழுநாட்கள் மிகவும் சொற்பகாலமாகத் தோன்றும். உதாரணமாக உத்தியோகத்தில் இருக்கும் ஒருவர் ரஜா பெற்றுக்கொண்டு தெய்வ ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வதாக வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்டவருக்கு ஒருவாரம் ஒரு நிமிஷத்தில் கடந்துவிடும். அவ்வாறே மாமியார் வீட்டிலிருக்கும் ஒரு பெண் தன் தாய் வீட்டுக்குச் சென்று ஒருவாரம் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அக்கால வரையறை மிகச் சிறிதாகத் தோன்றும். பல நண்பர்கள் ஒன்றுகச் சேர்ந்து பெரிய நகரங்களைச் சுற்றிவரப் புறப்

பட்டாலும் அவர்களுக்கு ஒருவாரம் என்பது சொற்பகால மாகவே தோன்றும். இவர்களெல்லாம் ஒருவாரம் கழிந்த பின்னர் அதை ஒருநாளைப் போலத்தான் நினைப்பார்கள். ஆனால் மரணதண்டனை விதிக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்ட நமது வேலப்பன் போன்றார்க்கு அவ்வாறு தோன்றுமா? தோன்றவே தோன்றாது. ஏழுநாள் ஏழு வருஷமாகத் தோன்றுவது சகஜமே.

மகா மனவேதனையுடனும் அச்சத்துடனும் வேலப்பன் அந்த ஒருவாரத்தையும் கழித்தான். அப்படி கழித்ததற்குக் காரணம் தன் மனைவி செய்துகொண்டிருக்கும் மகஜர் மூல மாகவேனும் தான் தப்பிச்செல்வதற்கு வழி ஏற்படும் என் னும் திடமான நம்பிக்கையேயாகும். ஆனால் ஒருவாரமாகி யும் எத்தகைய பதிலும் கிடைக்காததால் இம்முயற்சியிலும் தோல்வியடைய நேரிடுமோ என்று சந்தேகித்து அஞ்சி னான். அவன் கூறியபடி மகஜர் எழுதப்பட்டு மந்திரியிடம் நேரில் கொடுக்கப்பட்டது. அது இளவரசரிடம் போய்ச் சேருமென்றும் தக்க அதிகாரிகள் கூறினார்கள். ஆனால் ஒரு வாரம் கழிந்துவிட்டது.

இவ்வாறு ஒருவாரம் கழிந்தபின்னர் ஒருநாள் காலை அச்சிறை அதிகாரி வேலப்பன் இருந்த அறைக்குச் சென் றான். அப்போதே வேலப்பன் தனக்கு ஏதோ ஆபத்தான செய்தியைக் கொண்டுவருகிறான் என உணர்ந்தான். விஷய மும் அப்படியே முடிந்தது. அவ்வதிகாரி வேலப்பனிடம் அவனை அடுத்த திங்கட்கிழமை காலை தூக்கிலிடும்படி சர்க் கார் உத்தரவு வந்துவிட்டது எனத் தெரிவித்தான். தெரி வித்த அன்று வெள்ளிக்கிழமை. ஆதலின் இடையில் இரண்டேநாட்கள் இருக்கின்றன. இனி தான் பிழைத்திருப்ப தெல்லாம் இன்னும் சிலமணி நேரமே என்று வேலப்பன் உணர்ந்தான்.

அதிகாரி அவ்வறையினின்றும் சென்றதும் வேலப்பன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு தன் இருகாங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு ஓவென்று கதறி அழலானான். தனக்கு மாணம் எதிரில் வந்துவிட்டது. அதுவும் எப்படிப் பட்ட மாணம்? மகா கொடுமையான தூக்குமேடையல்லவா? எனினும் தன் மனைவி அனுப்பிய மகஜருக்கு நல்லகாலமாய்த் தக்க அனுமதி கிடைத்துப் பணம் திரும்பி வந்துவிட்டால் திங்கட்கிழமைக்குள் தப்பித்துச்செல்ல முடியாதோ என்றும் யோசித்தான். ஆகவே அவன் ஒருவாறு தேற்றிக் கொண்டு இருக்கிற காலத்துக்குள் எப்படித் தப்பித்துச் செல்வது என்று யோசிப்பதிலேயே கவனத்தையெல்லாம் செலுத்த ஆரம்பித்தான். இருக்கிற இரண்டு தினங்களுக்குள் எவ்வளவோ முயற்சிகளையெல்லாம் செய்யலாம் என்று நம்பிக்கை கொண்டான்.

வேலப்பன் இவ்வாறு நினைத்துக்கொண்டிருக்கும் போது அவனுடைய மனைவியும் குமாரியும் வந்து சேர்ந்தார்கள். ஆனால் அவர்கள் சிறைவாயிலிலேயே அங்குள்ள ஆட்கள்மூலம் வேலப்பன் திங்கட்கிழமையன்று தூக்கிலிடப் படுவான் என்று தெரிந்து கொண்டபடியால் வேலப்பனைக் கண்டதும் துக்கத்துடன் அழ ஆரம்பித்தார்கள். வேலப்பன் அவர்கள் அழுவதைக்கண்டு ஏன் அழுகிறார்கள் என்பதை உணர்ந்துகொண்டு, 'நீங்கள் சங்கதியைக் கேள்விப் பட்டீர்களோ? எதிர்பாராமல் ஏதேனும் உதவி ஏற்பட்டாலொழிய நான் இன்னும் சொற்பமணி நோந்தான் இவ்வுலகில் இருக்க முடியும் என்பது உங்களுக்குத் தெரிந்துவிட்டதோ?' என்று கேட்டான்.

உடனே அவனுடைய குமாரி, "அப்பா! இனி என்ன செய்வது? நாம் எழுதிக்கொண்ட மகஜருக்கு எப்படிப்பட்ட பதிலும் வாக்காதே." என்றாள்.

வேலப்பன், "அதைத்தான் நானும் சொல்ல விரும்பி னேன். நீங்கள் அலட்சியம் செய்து விட்டீர்கள். நான் சொன்னபடி சரியாகக் கவனிக்கவில்லை. நீங்கள் பிரதி தின மும் மந்திரி வீட்டுக்குப்போய் முறையிட் டிருக்கவேண்டும். ஐயோ கடவுளே! அந்த மகஜரில் என்ன இருக்கிறதென் பது உங்களுக்குத் தெரியுமோ? என் உயிரே அதில்தானே ஒட்டிக்கொண் டிருக்கிறது" என்று கர்ஜித்தான்.

குமாரி தந்தையைக்கண்டு, "அப்பா கவலைப்படாதே, சிறிது ஆறுதல் அடைந்திரு. நானும் தாயாரும் மீண்டும் இப்போது மந்திரி காரியாலயம் போய் வருகிறோம். கடவுள் துணையை நம்பி இருப்போம்" என்று கூறிச் சமாதானப் படுத்தினள்.

அப்போது வேலப்பன் மிக்க ஆத்திரத்துடன், "ஆம், அப்படியே செய்யுங்கள், என் அன்புள்ள மனைவியே, குமா ரியே, தயவுசெய்து உடனே மந்திரி காரியாலயம் போய் வாருங்கள். நான் உங்களிடம் என் துக்கத்தில் ஏதேனும் கடுமையாக நடந்துகொண் டிருந்தாலும் என்னை மன்னியுங் கள். நான் இப்போது எப்படிப்பட்ட மனோநிலைமையில் இருக்கிறேனென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? ஐயோ! இப்போது என்னைப் பாருங்கள்; என் கைகால்களெல்லாம் வேலை செய்கின்றன. என்னால் பார்க்கவும் கேட்கவும் முடி யும். நான் இதோ பேசுகிறேன். என் ஹிருதயம் துடிப் பதை நானே அறிகிறேன். பலவித யோசனைகளெல்லாம் மூளையில் தோன்றுகின்றன. இப்போது உயிருடன் இருக் கிறேன். ஆனால் கடவுளே! நீ கொடுத்த இவ்வளவு சக்தி களும் இன்னும் சொற்பமணி நேரத்துக்குள் மறைந்து விடும் போல் இருக்கிறதே. இந்த ஆவியே ஒரு விளக்கைப்போல் அல்லவா இருக்கிறது. விளக்கு எரிகிற வரையில்தான் பிர

காசம், திடீரென்று அணைந்து விட்டாலோ எல்லாம் ஒரே இருட்டுமயமே. நமது உயிரும் அப்படித்தானே இருக்கிறது. ஒரு சமயத்தில் எல்லாம் வேலை செய்கின்றன. மறு நிமிஷமே எல்லாம் அசையாமல் கட்டையாய்ப் போய்விடுகின்றன. ஆகவே நீங்கள் இருவரும்போய் வெற்றியுடன் வந்தால்தான், பணம் பெற்றால்தான் என் உயிரும் மீளும்'' என்று பரபரப்புடன் விவரமாகக் கூறினான்.

வேலப்பன் இவ்வாறு வருத்தத்துடன் பைத்தியம் பிடித்தவன்போல் பேசியதைக் கண்ட அவனது மனைவியும் குமாரியும் அதிகம் துக்கமடைந்து கண்ணீர் வடித்தனர். கேவலம் தப்புக் கையெழுத்து போட்டதற்காக மரணதண்டனை விதிப்பதா? இரத்தினபுரி ராஜ்யமே உலகில் உயர்ந்ததும் பெருமை வாய்ந்ததும் நீதிமிக்கதும் என்று கூறப்படுகிறதே. இதுதானா நியாயம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

இப்போது நாம் வேலப்பன் மனைவி எழுதிக்கொண்ட மகஜர் ஏன் கவனிக்கப்படவில்லை என்பதைக் கவனிப்போம். அது இளவரசரின் குற்றமே யொழிய மந்திரியின் குற்றமாகாது. அந்த மகஜரை மந்திரி தன் பையில் போட்டுக்கொண்டு பலமுறை இளவரசரிடம் சென்றார். ஆனால் ஒரு முறை இளவரசர் மதனவல்லியின் அறையில் இருக்கிறாரென்றும், மற்றொருமுறை அவர் ஏதோ விசாரமாக இருக்கிறாரென்றும், வேறொருமுறை அவர் குடும்ப விவகாரம் பேசிக்கொண்டிருக்கிறாரென்றும், இன்னொருமுறை அவர் மாடியிலிருந்து இறங்கும்போது குடி மயக்கத்தால் கீழேவிழுந்து காய மடைந்திருக்கிறாரென்றும் இப்படிப் பலவாறாகக் காரணம் கூறிவிட்டபடியால் அதை இளவரசரிடம் காட்டவே அவரால் முடியவில்லை. ஆகவே வேலப்பன் மனைவியும் அவ

னது குமாரியும் மீண்டும் மந்திரியைக் காணச்சென்றபோது அவர் அவ்விருவரையும் சந்தித்து, "மாதர்களே! உங்களுடைய மகஜரை நான் உடனே இளவரசரிடம் சேர்ப்பித்து விட்டேன். அவரும் தம் தந்தையாரிடம் அன்புகொண்டுள்ள இப்பிரஜைகளுக்கு நீதி வழங்கவேண்டுமென்னும் எண்ணமுடையவராதலால் அதை வாங்கிக்கொண்டார். நான் மந்திரி என்னும் முறையில் என்னயோசனை கூறவேண்டுமோ அதையும் கூறினேன். ஆனால் அது என்னவென்று பகிரங்கமாகச் சொல்லமுடியாது. இதனால் நீங்கள் திருப்தியடைவீர்களென்று நம்புகிறேன்" என்று மிகச் சாமர்த்தியமாகவும், ராஜ தந்திரத்துடனும் பேசினார்.

மந்திரி இவ்வாறு கூறியதில் தங்கள் மகஜரின் கதியாதாயிற்று என்னும் கேள்விக்குப் பதில் வரவில்லையாதலால் இன்னும் ஏதேனும் சொல்வார் என்று அம்மாதர் இருவரும் கருதினர். ஆனால் அவரோ அத்துடன் முடிந்துவிட்டது போல் அவர்களை வெளியில்கொண்டு போய்விடுவதற்காகச் சேவகனை அழைக்க மணியை அடிக்க முயன்றார். அப்போது வேலப்பனுடைய குமாரி அவரைப் பார்த்து, "ஐயா, எங்கள் மகஜரைப்பற்றிய முடிவு ஒன்றும் கூறாமலே எங்களை வெளியே அனுப்பிவிடப் பார்க்கிறீர்களே. தயவு செய்து எங்கள் கவலையைப் போக்குங்கள்" என்று கூறினாள். அதற்கு அவர், அடுத்தவாரம் கட்டாயமாக அதைப் பற்றிக் கவனிப்பதாகப் பதில் அளித்தார்.

அப்போது அப்பெண், "அடுத்த வாரமா! ஆனால் தாங்கள் என் தந்தையை நாளை திங்கட்கிழமை தூக்கிலேற்றி விடும்படி கட்டளையிட்டிருக்கிறீர்களே" என்றாள். அதற்கு மந்திரி, "பெண்ணே! நீ இந்தப்பணத்தைப் பெறுவதற்கும், உன்தந்தை திங்கட்கிழமை தூக்கிலிடப் படுவதற்கும் என்ன

சம்பந்த மிருக்கிறது? இதனால் அவருக்கு என்ன பிரயோ சனம், ஆதலின் நடப்பது நடக்கட்டும்'' என்றார்.

உடனே அவர் மணியடித்ததால் சேவகன்வந்து அவர்களிருவரையும் வெளியே கொண்டுபோய் விட்டான். அவர்களிருவரும் அங்கிருந்து ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு வேலப்பன் இருக்கும் சிறைக்குச்சென்று மந்திரியின் சந்திப்பினால் தெரிந்த விஷயங்களை யெல்லாம் சொல்லி விட்டார்கள். வேலப்பனும், ''அப்படியானால் இனி எனக்கு எப்படிப்பட்ட நம்பிக்கையுமில்லை'' என்று கூறிக்கொண்டே துக்கத்துடன் படுக்கையில் சாய்ந்தான்.

வேலப்பன் தூக்கி லேற்றப்படவேண்டிய தினத்துக்கு முன் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு சிறையில் அவன் அனுபவிக்கும் வேதனையை என்னென்று எழுதுவது. அவனுக்கோ இனி தப்பமுடியும் என்பதில் சிறிதும் நம்பிக்கை இல்லாமற் போய்விட்டது. தான் இவ்வுலகவாழ்வை விட்டு நீங்கவேண்டிய காலம் வந்துவிட்டதென்பதை உணர்ந்தான். அன்று இரவு முழுவதும் அவன் கண் மூடவே இல்லை. பாவம் எப்படித்தான் அவனுக்குத் தூக்கம்வரும். இவ்வுலகில் ஒருவன் எவ்வளவுதான் கஷ்டமான வாழ்க்கையை அனுபவித்தபோதிலும் இறந்துவிடுவதற்கு எவனுக்குமே மனம் வராது. அதிலும் தூக்குமேடையில் ஏறி ஆயிரக்கணக்கான ஜனங்கள் காண இறப்பதென்றால் வேலப்பன் போன்ற பெருந்தொகையை அந்கா ஜனங்களுக்கு வட்டிக்குக் கொடுத்த ஒருவருக்கு மனம் வருமா? வேலப்பன் இருந்த அறையில் சிறு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவன் எதிரில் மதக்கிரந்தமொன்று திறந்து வைக்கப்பட்டிருந்தது. சாகிற காலத்தில் சங்கரா என்று சொல்லவேண்டு மென்பார்கள். அதுபோல இறக்கும் சமயத்தில் நல்ல

24

மதபுஸ்தகங்களைப் படித்து ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கட்டும் என்பது அரசாங்க யோசனைபோலும்; ஆனால் மறுநாள் காலை சாகப்போகிறோமென்று தெரிந்த ஒருவன் எப்படித்தான் மனநிம்மதியாக புஸ்தகத்தைப் படிக்கமுடியும்? அந்த ஒரு இரவு அவனுக்கு ஆயிரம் வருஷம்போலக் காணப்பட்டது. அவன் இடையிடையே எழுந்து அதே அறையில் மேலும் கீழுமாக நடப்பான். அப்போது அவனுடைய தேகமெல்லாம் அப்படியே வழிந்து விழுந்துவிடுவது போலும், தான் ஒரு நடைப்பிணம்போலும் கருதினான்.

திங்கட்கிழமை காலையும் உதித்துவிட்டது. அப்போது தான் உதயமான சூரியனுடைய ஒளி சிறையின் ஜன்னலின் வழியே வேலப்பன் இருந்த அறையில் வீசிற்று. ஆஹா! மரணகாலம் வந்துவிட்டதே என்று அவனும் உணரவே அவன் அடைந்த மனத்துயரத்தை வருணிக்க ஆயிரம் நாவுபடைத்தவன் எனச் சொல்லப்படும் ஆதிசேஷனாலும் முடியாதென்பது திண்ணம். அவ்வளவு கரைகடந்த துயரக்கடலில் மூழ்கிக் கரையேற வழியின்றித் திண்டாடலானான். ஒரு இடத்தில் உட்காரவோ படுக்கவோ அவனால் முடியவில்லை. அந்த அறையிலேயே மேலும்கீழுமாக நடந்தான்.

வேலப்பன் இவ்வாறு பைத்தியம் பிடித்தவன்போல் தடமாடிக்கொண்டிருக்கையில் மதபோதகர் அங்குவந்து சேர்ந்தார். அவர் சமய சம்பந்தமான இதோபதேசம் செய்ய ஆரம்பித்தார். "ஆன்மா அழிவற்றது ஆதலின் நீ தூக்கு மேடையில் ஏறினாலும் உன் ஆன்மா இத்தேகத்தினின்றும் விடுதலை யடைந்ததும் இதுவரை தான் செய்த பாபபுண்ணியங்களுக்கேற்ற தண்டனையைச் சூக்கும சரீரத்திலேயே அடைந்துவிட்டுப் பின்னரும் ஆனந்தமயமான மோட்சம் பெறுவதற்காகத் தன்னைப் பக்குவப் படுத்திக்கொள்ளும்

பொருட்டு மீண்டும் இவ்வுலகத்தில் உடலைத்தாங்கும் ஆதலின் நீ இறந்துபோவதற்காக விசாரப்பட வேண்டியதில்லை. இப்போதேனும் பாவமன்னிப்பு அளிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனிடம் மன்றாடிக் கேட்டுப் பிரார்த்தனைசெய்'' என்று மற்றும் ஏதோதோ விஷயங்களையும் கூறினார். ஆனால் வேலப்பனுடைய மனம் நிம்மதியாக இல்லாமல் இருந்ததால் அவன் ஒன்றையும் கிரகிக்க முடியவில்லை.

மதபோதகர் சென்ற சிறிது நேரத்துக்குப் பின்னர் வேலப்பனுக்காகக் காலை ஆகாரம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அவன் எதையும் விழுங்க முடியவில்லை. அவன் தொண்டை வேலைசெய்ய மறுத்துவிட்டது. வாயில் போட்டு எதையும் மெல்லவும் முடியவில்லை. அப்படியே ஒருவாறு சமாளித்துக்கொண்டு சிறிது தண்ணீர் மட்டும் அருந்தினான். கடைசியாக அவனைத் தூக்கிலேற்றவேண்டிய வேலை சமீபித்து விட்டது. ஆகவே அவன் பிரார்த்தனை செலுத்தும்படி செய்வதற்காக மீண்டும் மதபோதகர் அங்கே வந்தார். ஆயினும் என்ன பயன்? வேலப்பனுடைய புத்தி ஸ்திரமாக இருக்கவில்லை. அவன் பித்தம் தலைக்கேறியவன்போல் திரிந்துகொண் டிருந்ததால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு சமயம் அந்த அறையிலேயே அப்படியும் இப்படியும் ஓடுவான். மற்றொரு சமயம் ஒரு ஆசனத்தின்மீது உட்கார்ந்து கொண்டு ஓவென்று வாய்விட்டுக் கதறி அழுவான். வேறொரு சமயம் அவன், தான் இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டதற்குக் காரணமாயிருந்த காரியங்களைத் தான் செய்ததற்காகத் தன்னையே பலவாறு திட்டிக்கொண்டான்.

வேலப்பன் இவ்வாறான நிலைமையில் இருக்கையில், தூக்கி விடவேண்டிய வேளை வந்துவிட்டபடியால் அது சம்

பந்தமான அதிகாரிகள் அந்த அறைக்கு வந்தார்கள். அவன் கையிலிருந்த விலங்கைக் கழற்றிவிட்டு அவனைத் தூக்கு மாத்துக்கு சிறையிலேயே ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அதிகாரிகள் இட்ட கட்டளையின்படியே அவன் நடந்தானேயொழிய அவன் எதையும் மீறத் துணியவில்லை. ஏனெனின் தான் இருக்கும் நிலைமையில் தன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை அவன் அறிந்திருந்தான். அதற்கு முன் நாள் மாலையில் வெளியான பத்திரிகையில் வேலப்பன் தூக்கிலிடப்படும் சங்கதி வெளியாய் விட்டிருந்தபடியால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதைக்காண அங்கே வந்து கூடிவிட்டார்கள். வேலப்பனும் ஏணியின் வழியாகத் தூக்குமேடையில் ஏறி நின்றான். ஐயோ பாவம்! அவன் மனமுவந்து அதன்மீது ஏறினானா? இல்லவே இல்லை. ஏணியின்மீது ஒவ்வொருபடி ஏறும்போதும் அவன் விட்ட கண்ணீர் அவன்பாதத்தில் காலை நனைத்து வந்தது. ஆயினும் என் செய்வது? அவன் ஏறமாட்டேனென்றால் விடுவார்களா? ஆகவே அவன் பலவந்தத்துக்குக் கட்டுப்பட்டு அம்மேடை மீது ஏறினானேயொழிய வேறில்லை.

மேடையில் ஏறி நின்றதும் அவ்வளவு திரளான ஜனங்கள் தன்னையே உற்று நோக்குவதைக் கண்டான். அவனுடைய எண் ஜாண் உடம்பு ஒரு ஜாணாகக் குறுகிவிட்டது ஒருகாலத்தில் அக்கூட்டத்திலுள்ள எத்தனையோ பேர்களுக்கு வட்டிக்குக்கொடுத்த தான் இன்று அவர்கள் பார்க்கத் தான் தூக்குமேடையில் ஏறவேண்டிய நிலைமையைக்கண்டு கண்ணீர் வடித்தான். ஆனால் அப்போது அவன் மனதில் ஒரு எண்ணம் வந்தது. அதாவது 'ஆஹா, நான் நம்மிடத்தில் குமஸ்தாவாக வந்த விசுவநாதனின் சகோதரி அமிர்தாம்பாளின் கற்பைக் கெடுக்க முயற்சித்ததுடன் அநாவசிய

மாக அவனையும் சிறையில் அடைத்த பலன் இதுவேயாகும்' என்பதே. இந்த எண்ணம் அவனுக்கு வந்ததன் காரணம் அவ்வளவு பெரிய கூட்டத்தினிடையில் அந்த விசுவநாதனும் வேடிக்கை பார்க்க வந்திருந்ததே.

அச்சமயத்தில் தானப்பனும் மேடைமீது ஏறி வேலப்பன் முகத்தைமூடி அவனைத் தூக்கில் மாட்டினான். உடனே தானப்பன், "நான் இப்போது அடிப்பலகையைத் தட்டப்போகிறேன்" என்று கூறியதும் வேலப்பன், "ஓ கடவுளே, கடவுளே" என்றான். அவ்வளவுதான், தூக்குமரத்தில் அவனது பிரேதம் தொங்கலாயிற்று. அதேசமயத்தில் பக்கத்திலிருந்த கோயில்மணி அடித்தது. மதபோதகர் வேலப்பனுடைய ஆன்மா சாந்தி யடைய வேண்டுமெனப் பிரார்த்தித்துக்கொண் டிருந்தார். இவ்வாறாகக் காரியம் முடிந்து விட்டது. நகரத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் கடன் கொடுத்துக் கொண்டிருந்த பிரபல செல்வவந்தன் இன்று தூக்குமேடையில் உயிரைத் துறந்தான்.

வேலப்பனது சவத்தை வெளியில் எடுத்துச் செல்லும் வரையில் ஜனங்கள் காத்திருந்தார்கள். விசுவநாதனும் கடைசிவரை அங்கே இருந்து வேலப்பனைப் பழிவாங்கிவிட்டான். அவன் பிறகு நேராகத் தன் தங்கையிடம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லவில்லை. ஏனெனின் பெண்கள் அன்பு வடிவானவர்களல்லவா? மக்களைப் பெறும் தாய்மார்களல்லவா? ஆகவே அமிர்தம்பாள் இதை வெறுப்பாள் என்பது அவனுக்குத் தெரியும்.

நேயர்காள்! மரணதண்டனையின் கொடுமையை என்னென்று கூறுவது? "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்து இவ்வுலகு" என்பார்கள். அதாவது நேற்று இருந்தவன் இன்றில்லை என்று சொல்லக்

கூடிய வகையில் மனிதர்களின் காயம் அவ்வளவு அநித்ய மானதாக இருக்கிறது. ஆகையால் எவருக்கும் இறக்கமாட்டோம் என்று சொல்லமுடியாது. ஆயினும் தாளுக இயற்கை மரணம் வருமாயின் அதை ஏற்கவே செய்வர். ஆனுல் தூக்குமேடையில் ஏறிச் சாவதென்றுல் யார் மனந்தான் துணியும்? இது மகா கொடுமையான செய்கையாகும். மேலும் ஒரு உயிரை உண்டாக்கச் சக்தியற்ற மனிதர்களாகிய நாம் இறைவளுல் படைக்கப்பட்ட உயிரைக் கொல்லலாகாது. அன்றியும் மரணதண்டனை விதிப்பதாலேயே உலகில் கொலை, களவு, காமம் முதலிய குற்றங்கள் குறைந்துவிடவில்லை. மக்களுக்கு ஒழுக்கந் தரக்கூடிய கல்வியையும், தாராள நோக்கம் வாய்ந்த உயரிய சமய ஞானத்தையும் போதிப்ப தால் மட்டுமே உலகில் இத்தகைய சம்பவங்கள் நடவாதபடி செய்யலாம். இப்போது ஐரோப்பாவில் சில தேசங்களில் மரணதண்டனையை நிறுத்தி யிருக்கிறுர்கள். இங்கிலாந்தில் அதைப்பற்றிப் பெரிய விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. நமது புண்யதேசமாகிய இந்தியாவில் சுயராஜ்யம் ஏற்படும் போது இத்தகைய மரணதண்டனைகள் விதிக்கப்படமாட்டா வென்று கருதுவதற்குரிய அறிகுறிகள் தோன்றிக்கொண் டிருக்கின்றன. இவ்வுலகிலேயே விரைவில், மரணதண்டனை ஒழிக!

144 - வது அத்தியாயம்

நேயர்காள்! இப்போது நாம் இரத்தினபுரியின் மேற்குப் பாகத்திலுள்ள பிரேமநாதம் பிரபுவின் மாளிகையில் இருகாதலர்கள் பேசிக்கொண்டிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் யாரென்றுல் அப்பிரபுவின்

மனைவியாகிய பங்கஜம்மாளுடைய தமக்கை பத்மாவின் குமாரி ஜெகதீஸ்வரியும், ஒருவருஷகாலமாக இன்னகதியானு னென்று தெரியாமல் மாயமாய் மறைந்திருக்கும் அருமை நாதம் பிரபுவின் புத்திரனாகிய மதுரைநாயகமுமேயாவர். முன்பு ஒருமுறை பங்கஜம்மாளும் ஜெதீஸ்வரியும் இளவரசன் மாளிகைக்குச்சென்று திரும்பியபோது மதுரைநாயகம் ஒரு குதிரை வண்டியிலிருந்து விழுந்து மூர்ச்சையானபோது அவனை அவர்கள் எடுத்துச்சென்றார்கள் என்று சொன்னோ மல்லவா? அதுமுதல் அவன் அடிக்கடி அங்கு வருவதும் போவதுமா யிருந்தான். ஆகவே அவனுக்கும் ஜெகதீஸ் வரிக்கு மிடையில் காதல் அதிகரித்து வந்தது.

அக்காதலர்களிருவரும் ஒருநாள் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கையில் மதுரைநாயகம் தன் தந்தையைப்பற்றிய மர்மம் தெரியாதிருப்பது தனக்கு மிக வருத்தமாக இருப்ப தாகவும், எப்படியேனும் அதைக் கண்டுபிடித்தே தீர்வதென் றும் தனது காதலியாகிய ஜெகதீஸ்வரியிடம் கூறினான். அப் போது ஜெகதீஸ்வரியும் தான் தன் சிறியதாயார் பங்கஜம் மாளுடன் இளவரசர் மாளிகைக்குச் சென்றபோது இளவா சன் தன்னையே அதிகம் நேசித்ததையும், தன் சட்டைப் பையிலிருந்து ஒரு படத்தை எடுத்து உடனே பார்த்துப் பார்த்துத் தன்னையும் பார்த்ததையும் அவனிடம்கூறி அதில் தன் தாயார் பத்மாவதியம்மாள் சம்பந்தமான விஷயம் ஏதேனும் இருக்கவேண்டும் என்றும் கூறினாள். அப்போது மதுரைநாயகம் தான் அதைப்பற்றியும் விசாரித்து உண்மை யைக் கண்டு பிடிப்பதாகத் தன் காதலியிடம் உறுதி கூறி னான்.

இவ்வாறு சொற்பகாலம் கழிந்தது. பின்பு ஒருநாள் அவர்களிருவரும் பேசிக்கொண்டிருக்கையில் ஜெகதீஸ்வரிக்

குத் தான் அளித்த வாக்குறுதி மதுரைநாயகத்தின் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் அது சம்பந்தமாய் ஒன்றும் செய்ய அவனால் முடியவில்லை. ஏனெனில் அப்படி ஏதேனுமிருந்தால் அவளது சிறிய தாயாராகிய பங்கஜம்மாளே அவளிடம் கூறியிருப்பாளல்லவா என்றும், அவளே சும்மா இருக்கும் போது தான் எப்படி அதில் தலையிடுவதென்றும் தயங்கினான் ஆகவே தன் நிலைமையையும் தன் காதலியிடம் கூறினான். ஆயினும் அவள் அடிக்கடி தன் விஷயத்தைப்பற்றிக் கண்டு பிடிக்கும்படி அவனிடம் வற்புறுத்தி வந்தாள்.

அவர்களிருவரும் காதலராய்ப் போனதுடன் அவர்களுடைய காதலை ஜெகதீஸ்வரியின் சிறிய தாயாரும் அவ்வம்மையாரின் கணவனும் ஒப்புக்கொண்டுவிட்டபடியால் மதுரைநாயகம் தினசரி அங்குவர ஆரம்பித்தான். அப்போது அவன் தன் காதலியிடம், அவள் கூறும் விஷயத்தைப்பற்றி பங்கஜம்மாளிடமே கேட்டு அறிந்துகொண்டு விடுவது நலம் என்று கூறினான். ஆனால் ஜெகதீஸ்வரி தான் அக்காரியத்தைச்செய்யச் சம்மதப்படாமையால் தன் காதலனே அவ்வாறு செய்யும்படி யோசனை கூறினாள். ஆகவே அவன் உடனே பங்கஜம்மாளைத் தனி அறையில் காணச்சென்று, தன் காதலி தன்னிடம் கூறியதையெல்லாம் விவரமாக அந்தம்மாளிடம் கூறினான்.

பங்கஜம்மாள் அவன் கூறியதையெல்லாம் கவனமாகவும் உற்சாகத்துடனும் கேட்டாள். அப்போது அவள் இடையிடையே விசனத்தையும் அடைந்தாள். அவன் கூறி முடித்ததும் அவள் ஒன்றும் பேசாமல் சிறிதுநேரம் மௌனமாக இருந்து பல விஷயங்களைச் சிந்தித்தாள்.

கடைசியில் அப்பெருமாட்டி, "எனது அன்புள்ள அருமை நாயகம்! என்னுடைய தமக்கையின் புத்திரியை

நீயே மணந்து கொள்ளப் போவதால் அவளைப்பற்றிய விஷயங்களை விசாரித்து அறிந்து கொள்ள அவளது காதலனாகிய உனக்கு உரிமை இல்லாமற் போகவில்லை. ஆம்; அப்பெண்ணைப்பற்றி ஒரு அந்தரங்க ரகசியம் இருக்கிறதென்பதில் சிறிதும் ஆட்சேபமில்லை. என் சகோதரியின்பால் எனக்கு அளவிலா அன்பு; ஆதலின் அவளைப்பற்றிய ரகசியம் எனக்குத் தெரிந்தது. அது அப்படியே மறைந்து விடாமல் உன் போன்ற சிலருக்குத் தெரியவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது போலும்! ஆனால் அதை வெளியிடக்கூடிய சக்தி எனக்கு இல்லை. அதை மற்றொருவர் மூலமாகத் தான் அறிந்து கொள்ளலாம்,'' என்று சொல்லிச் சிறிதுநேரம் பேசாமல் துக்கக்குறியுடன் அவ்வறையில் தொங்கவிடப் பட்டிருந்த அவள் தமக்கை பத்மாவதியம்மாளின் படத்தை உற்று நோக்கினாள்.

இதைக்கண்டதும் மதுரைநாயகம் ஒன்றும் பேசவில்லை. என்ன பேசுவதென்றும் அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஏன் இப்படிப்பட்ட நெருக்கடியான விஷயத்தில் நாம் தலையிட்டுக் கொண்டோம் என்று அவன் சிந்தித்தான். ஆனால் தன் காதலியாகிய ஜெகதீஸ்வரியை எப்படியாவது திருப்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவன் இதில் தலையிடவேண்டியதாயிற்று.

பங்கஜம்மாள் கவலையுடன் கூடிய சொற்களோடு பின்வருமாறு தொடர்ந்து கூறலானாள்:—''முன்பு அரண்மனையில் நடைபெற்ற சம்பவத்தை நமது ஜெகதீஸ்வரி மறந்துவிடவில்லை என்பதை நானும் எனது கணவரும் பல மாதங்களாகவே அவளுடைய நடத்தையால் அறிந்து வருகிறோம். நான் ஏன் அவளை அரண்மனைக்கு அழைத்துச் சென்றேன் என்றும் பல சமயங்களில் கருதுவதுண்டு. அவள் எத்

தகைய கவலையுமின்றிச் சௌகரியமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்காகவே நாம் இந்த இரகசியத்தை அவளிடம் கூறாமல் இருந்து வருகிறோம். ஆனால் அதை மூடிவைக்க முடியாதுபோல் தோன்றுகிறது. அது என்றைக்காயினும் வெளியாகியே தீரவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆனால் நான் முன்பு கூறியபடி அது என்னால் வெளியாக முடியாது. அதில் சம்பந்தப்பட்ட அவனிடம் சென்று நீயார் என்பதையும், நீ ஜெகதீஸ்வரியின் காதலன் என்பதையும் சொல்லிக்கொண்டு உண்மையைக்கேள். அவன் விவரமாகக் கூறிவிடுவான். நான் ஒன்றும் சொல்லத்தகாது.''

அதைக்கேட்ட மதுரைநாயகம், 'ஆம்; அம்மா! நான் யாரிடம்போய்க் கேட்கவேண்டுமோ அவருடைய பெயரையோ விலாசத்தையோ நீங்கள் சொல்லவில்லையே. நான் யாரைப்போய்க் கேட்பேன்'' என்றான். அதற்கு அம்மாது, ''நீ நமது இரத்தினபுரி இளவரசரைப் போய்க் காணவேண்டும். இதற்குமேல் நான் ஒன்றும்சொல்லமுடியாது. நீ அங்கே போ'' என்று கூறினாள்.

இவ்வாறு கூறும்போது அவளுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டபடியால் திடீரென்று எழுந்து வேறு அறைக்குச் சென்று கண்ணீர்விட்டுத் துக்கப்படலானாள். சற்றுநேரத்துக்குப் பிறகு தெளிந்து எழுந்து உடனே ஒரு ஆள்மூலம் இளவரசருக்கு ஒருசெய்தி அனுப்பி அதில் இவ்வாறு மதுரைநாயகம் இன்ன விஷயத்துக்காக வருவானென்றும், அவனுக்குத் தக்கபடி பதில் கூறவேண்டுமென்றும் குறிப்பு அனுப்பினாள்.

பங்கஜம்மாளை விட்டுப் பிரிந்த மதுரைநாயகம் நேராக ஜெகதீஸ்வரி மிக ஆவலுடன் அவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அறைக்குச் சென்று, ''அன்புள்ள கண்

மணி! நானும் உனது சிறிய தாயாரும் நீ சொன்னவிஷயமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அவள் உன்னிடம் எப்படிப்பட்ட கோபமும் கொள்ளவில்லை. நாம் கேட்ட கேள்விக்காக அவள் வருத்தப்படவுமில்லை. இளவாசன் மாளிகையில் நடந்த சம்பவத்தால் உன் மனதில் ஏதோ உணர்ச்சி தோன்றி யிருக்கிறதென்பதை அவள் அறிந்திருக்கிறாள். மேலும் இனியும் இரகசியத்தை மூடிவைக்க முடியாது என்பதையும் அவள் உணர்ந்திருக்கிறாள்'' என்று கூறினான்.

உடனே அவள் பரபரப்புடன், ''அப்படியானால் ஏதோ ரகசிய மிருக்கிறதென்பது உண்மை'' என்று ஆவல் மிகுதியுடன் கேட்டாள். அதற்கு அவன், ''ஆம்; அதில் சந்தேகமில்லை. ஆனால் நான் இன்னும் அதை அறியவில்லை. நான் வேறொருவரிடம் சென்று அதைத் தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அங்கேதான் நான் இப்போது போய்க்கொண்டிருக்கிறேன். இந்த வேளையில் இதற்குமேல் எதையும் நீ கேட்காதே. நான் இன்னும் இரண்டு அல்லது மூன்றுமணி நேரத்துக்குள் திரும்பி வந்துவிடுவேன். அப்போது விஷயமெல்லாம் உனக்குத் தெரிந்துவிடும். அதுவரையில் உன் ஆவலை அடக்கிக்கொண்டிருக்கிறயா?'' என்று கேட்டான்.

அதற்கு அவள், ''ஆஹா! அப்படியே ஆகட்டும். அவ்வளவு பொறுமைகூடவா எனக்கு இல்லாமற் போயிற்று. இந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பல மாதங்களாகவே நான் ஆவலுடன் இருப்பதுபோல இன்னும் சில மணிகள்வரை நான் காத்திருக்கமாட்டேனா? ஆதலின் தாங்கள் எங்கு செல்லவேண்டுமோ அங்குபோய்த் தங்கள் காரியத்தை வெற்றியுடன் முடித்துக்கொண்டு வாருங்

கள்'' என்று சாந்தமாகவும் உறுதியுடனும் பதில் அளித் தாள்.

உடனே மதுரைநாயகம் தன் அன்பிற்குகந்த காதலி யாகிய ஜெகதீஸ்வரியை ஆலிங்கனம் செய்துகொண்டு அவ ளது உத்தரவுபெற்றுச் சென்றான்.

இச்சம்பவம் நடக்கும்போது பகல் மூன்றுமணி. அது தான் இளவரசனைக்காண ஏற்றசமயம் என்று அவன் அறிந்த தால் உடனே நேராக இளவரசனது அரண்மனைக்குச்சென்று, வெளியார் வந்தால் தங்குவதற்கு என்று ஏற்படுத்தப்பட்ட அறைக்குச் சென்று அங்கிருந்த காவல்காரனிடம் தான் இன்னானென்று குறிக்கும் தன் அறிமுகச் சீட்டைக் கொடுத்து இளவரசனிடம் அனுப்பினான். அச்சீட்டை எடுத் துச்சென்ற ஆள் கால்மணி நேரத்துக்குள் திரும்பி வந்து, இளவரசர் ஏதோ அவசரமான விஷயத்தில் ஈடுபட்டிருப்ப தாகவும் இரவு ஒன்பதுமணிக்கு வந்தால் கட்டாயம் சந்திப்ப தாகவும், அவரே முக்கியமாகச் சில விஷயங்களைப் பேச விரும்புவதாகவும் தெரிவித்தான்.

ஆகவே மதுரைநாயகம் அம்மாளிகையை விட்டு வெளியே சென்றான். எனினும், இளவரசன் தானே முக்கிய மாகச் சில விஷயங்களைப் பேசவேண்டுமென்று தெரிவித் தானே அது யாதாயிருக்கும் என்னும் ஒரு சிந்தனை அவனது மனதில் தோன்றியது. அவன் நேராக வீட்டிற்குச் செல்ல வில்லை. ஏனெனின் தான் வந்தகாரியம் முடிவதற்குமுன் வீட் டுக்குச்செல்ல அவன் விரும்பவில்லை. ஆகவே அவன் தன் வேலையைக் கழிப்பதற்காகத் தான் அடிக்கடி, தன் தந்தை மாயமாய் மறைந்துபோன விஷயத்தைப்பற்றிக் கண்டுபிடிப் பதில் அதி தீவிரமுயற்சி எடுத்துவரும் துப்பறியும் சிங்கம்

செல்வநாதன் வீட்டுக்குச் செல்வது வழக்கமாதலால் இப்போதும் அங்கே சென்றான்.

அங்கு சென்று மதுரைநாயகம் தன் தந்தையைப்பற்றி ஏதேனும் உளவு தெரிந்ததா என்று விசாரித்ததற்குச் செல்வநாதன், "ஐயா, இன்னும் விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. இதுவரை நான் கண்டுபிடித்த விஷயம் என்னவென்றால் தங்கள் தந்தையார் ஒரு மாதுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்ததன் சம்பந்தமாய் நீர் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறீரே அதை எழுதியவர்தான், சமீபத்தில் தூக்கு மேடையில் ஏற்பட்ட தேவராயன் விஷயத்தையும் வெளிப்படுத்தி யிருக்கிறார். இரு கடிதங்களுடைய கையெழுத்தும் ஒரே மாதிரியாக இருக்கிறது" என்று பதில் கூறினான்.

அதற்கு அவன், "ஆ! அழகான கையெழுத்து. அது ஒருமாதின் கையெழுத்தே என்பதில் சந்தேகமில்லை. எப்படியாவது விஷயம் வெளியாய் விட்டால் நன்றாய் இருக்கும்" என்றான்.

அதற்கு செல்வநாதன், "ஆம்; ஏதோ பெண்விஷயமாகத்தான் உங்கள் தந்தை இறந்திருக்க வேண்டுமென்று நான் பலநாளாகவே சந்தேகப்பட்டு வந்தேன். ஏனெனின் தேவராயனைக் காட்டிக்கொடுத்த அதேமாது உங்கள் தந்தையிடத்திலும் ஏதேனும் துவேஷங்கொண்டு அவரைக் கொன்றுவிட ஏற்பாடு செய்திருக்கலாம் என்பதே என் நம்பிக்கை" என்று கூறினான்.

அதைக்கேட்ட மதுரைநாயகம், "ஆம்; நீ நினைப்பதும் சகஜம்தானே. நான் என் தகப்பனாரின் கடிதங்களுடன் இருந்ததென்று சொல்லி ஒரு மாதின் கையால் எழுதப்பட்ட கடிதம் உன்னிடம் கொடுத்ததாக ஞாபகம். அதைக்கொடு மற்றொருமுறை பார்க்கலாம்" என்று கேட்டான். உடனே

செல்வநாதனும் தன் இரும்புப்பெட்டியைத் திறந்து பல கடிதங்களுடன் வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்து, "தேவாரயன் சம்பந்தமாய் உண்மையை வெளிப்படுத்தி மாஜிஸ்ட்ரேட்டுக்கு எழுதியிருந்த கடிதமும் இதே கையெழுத்து உடையதுதான். ஆனால் அக்கடிதம் இப்போது என்னிடமில்லை. எனினும் முன்பு நீங்களே பார்த்தபோது இரண்டெழுத்தும் ஒன்றாய் இருந்தது கண்டு ஆச்சர்யமடைந்தீர் அல்லவா" என்றான்.

மதுரைநாயகமும் அக்கடிதத்தை வாங்கிப் பார்த்து அதை மீண்டும் செல்வநாதனிடமே கொடுத்துவிட்டு, "இதைப்பற்றிய விசாரணையை விட்டுவிட வேண்டாம். 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதுபோல் நாம் தீவிர முயற்சி செய்வோமாயின் எப்படியாவது விஷயம் வெளியாகியே தீரும். எனக்கும் விரைவில் விஷயம் வெளியாகும் என்னும் நம்பிக்கை திடமாக இருக்கிறது" என்று கூறிக்கொண்டே செல்வநாதனுக்குச் சன்மானமாக ஒரு நூறுபவுன் நோட்டைக் கொடுத்துவிட்டு உத்தரவு பெற்றுச் சென்றான்.

சரியாக இரவு ஒன்பது மணிக்கு மதுரைநாயகம் இளவரசர் மாளிகை சென்று தான் வந்திருக்கும் செய்தியை இளவரசருக்குச் சொல்லி யனுப்பினான். உடனே காவலாளி அவனை நன்றாகச் சிங்காரிக்கப்பட்டிருந்த ஒரு அறையில் கொண்டுபோய் உட்காரவைத்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசர் வருவார் எனச் சொல்லிவிட்டுப் போனான். மதுரைநாயகம் தனியாக அவ்வறையில் இருந்தபோது அது சிங்காரிக்கப்பட்டிருக்கும் மாதிரியையும் அதிலுள்ள விசித்திரமான படங்களையும் கண்டு பிரமிப்படைந்தான். மேலும் அங்கே ஒரு அதிசயமான கடிகாரமிருந்தது. அதில் நிமிஷத்

துக்கொரு பொம்மை தோன்றிக்கொண்டே வந்தது. இந்த ஆச்சர்யங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவன் பார்வை அங்கே ஓரிடத்தில் சொருகப்பட்டிருந்த ஒரு கடிதத்தின்மீது பாய்ந்ததும் மகா ஆச்சர்யமடைந்தான். அக்கடிதத்தைக் கண்டதும் படிக்காத முன்னர்கூட அவன் அவ்வளவு ஆச்சர்யப்பட வேண்டிய காரணமென்ன? அக்கடிதம் சிறிது கிழிந்துபோ யிருந்தது. எனினும் அவன் கண்ணுக்குத்தெரிந்த எழுத்திலிருந்து இக்கடிதத்தை எழுதியவரே தான் சற்று நேரத்திற்குமுன் செல்வநாதன் வீட்டில் கண்ட கடிதத்தையும் எழுதி யிருக்கவேண்டுமென்று நிச்சயித்தான். ஆகவே அதைக் காணவேண்டுமென்னும் ஆவல் அவனுக்கு அதிகரித்தது.

நேயர்காள்! இச்சந்தர்ப்பத்தில் நாம் வேறொரு விஷயத்தைக் கூறவேண்டி யிருக்கிறது. அதாவது அன்றுபகல் அதே அறையில்தான் இளவரசன் சிற்றுண்டி யருந்தினன். அவன் சிற்றுண்டிக்குப்பின் அங்கு இளைப்பாறிக்கொண்டிருந்தபோது சுருட்டு பிடிப்பதற்காக அங்கேயிருந்த கெகிடித்தீயில் பற்றவைக்க முடியாமற்போகவே சற்றுநேரத்துக்கு முன்புதான் தனக்குக் கிடைத்த ஒரு கடிதத்தைச் சட்டைப் பையில் வைத்திருந்ததால் அதை எடுத்துக் கிழித்து அதனுல் கெகிடித்தீயின் நெருப்பில் பற்றவைத்து அதினின்றும் சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டான். மீதி கடிதத்தை அறையில் ஓரிடத்தில் சொருகிவிட்டான். இதனுல் மதுரைநாயகம் வந்தபோது அக்கடிதம் அங்கே இருந்தது.

அதைக்கண்ட மதுரைநாயகம் திடுக்கிட்டு அதையே சற்றுநேரம் பிரமிப்புடன் உற்று நோக்கினன். பிறகு எப்படியாவது இருக்கட்டுமென்று துணிந்து அக்கடிதத்தைக் கையில் எடுத்தான். அவன் அவ்வாறு பிறர் வீட்டிலிருக்

கும் ஒரு கடிதத்தை அவ்வீட்டார் அனுமதி யின்றியும் எடுத்ததற்காக அவன்மீது எவரும் குற்றம்சொல்ல முடியாது. ஏனெனின் எப்படியாவது தன் தந்தை மறைந்து போன விஷயம் வெளியாகுமா என்னும் ஆவலே அவனுக்கு அதிகமா யிருந்தபடியால் அதற்குச் சாதகமாக அகப்படும் எதையும் அவன் எடுப்பதில் என்ன குற்ற மிருக்கிறது.

அவன் அதை எடுத்து நன்முகக் கவனித்ததில் அக் கடிதம் எழுதியவரே தன் தந்தையின் மரணத்துக்கு ஜவாப்தாரி என்பதை நன்கு உணர்ந்துகொண்டதால் அதில் என்ன எழுதி யிருக்கிறதென்று படித்துப்பார்த்தான். அதில் பின் வருமாறு காணப்பட்டது:—

"எனதன்புள்ள இளவரசரே! என்னிடத்திலிருந்து ஒரு கடிதம் பெறுவதற்குத் தாங்கள் ஆச்சர்யப்படலாம். ஆனால் தங்களைக்காண நான் மிக ஆவலுடையவளாக இருக்கிறேன். நான் மிக்க துக்ககரமானதும், தனிமையானதுமான வாழ்க்கையை நடத்திவருகிறேன். இப்படிப்பட்ட வாழ்க்கையை நீண்டகாலம் நடத்த என்னால் முடியவில்லை. நான் நாளையதினம் தங்களை வந்து காண்பதாக நிச்சயித்திருக்கிறேன். நமக்குள் இருக்கும் நட்பினால் நான் தங்களைக் காண்பதைத் தாங்கள் விரும்புவீர்களென்றே நினைக்கிறேன். நான் தங்களைச் சிந்திக்காதவேளையே கிடையாது. நான் தங்களைப்பற்றிச் சிந்திப்பதில் ஆயிரத்தில் ஒருமுறை தாங்கள் என்னைப்பற்றிச்சிந்தித்தாலும் உடனே என்னைக் காணவிரும்புவீர் என்பது நிச்சயம். நான் நாளையதினம் வரும்போது என்னை எப்படி வரவேற்கிறீர் என்பதாலேயே என்னிடம் உங்களுக்கு இருக்கும் அன்பு சோதிக்கப்படும். அப்போது எல்லாம் நேரில் சொல்லிக்கொள்கிறேன். மேலும்"

அக்கடிதத்தில் இவ்வளவுதான் காணப்பட்டது. மீதி பாகம் கிழிந்துவிட்டிருந்தது. ஆனால் இப்பாகத்தில்தான் முக்கியவிஷயம் அடங்கியிருக்கிறது. அக்கடிதம் அதற்கு முன் நாள் எழுதப்பட்டதாதலால் அன்றிரவு பத்துமணிக்கு அக்கடிதம் எழுதியவர் இளவரசரைக் காணவரவேண்டும் என்று மதுரைநாயகம் அறிந்துகொண்டான். ஆனால் இளவரசரிடம் இவ்வளவு பழக்கமுள்ள அம்மாது யாராக இருக்கலாம் என்று சிந்தித்தான். அவள் ஏதோ உயர்ந்த அந்தஸ்தைச் சேர்ந்தவளாய்த்தான் இருக்கவேண்டுமென்றும் நினைத்தான். ஆனால் தன் தந்தையின் மரணத்துக்கு இவள் சம்பந்தமுடையவள் என்று எப்படி நிச்சயமாகக் கூறமுடியும் என்று கருதினான். எனினும் அவளே தேவராயனைக் காட்டிக்கொடுத்துவிட்டபடியாலும் தன் தந்தையுடனும் இளவரசருடனும் சம்பந்தம் வைத்திருப்பதாலும் அவள் ஆபத்தானவளாக இருக்கவேண்டுமென்னும் நம்பிக்கையும் அவன் உள்ளத்தில் தோன்றிற்று.

இவ்வாறு அவன் அக்கடிதத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் இளவரசன் அங்கே வந்துசேர்ந்தான். அவன் மதுரைநாயகத்தை அன்புடன் வரவேற்று, "நான் உன்னை வரவேற்க மிக ஆவலாக இருந்தேன். பகலில் நீ வந்திருந்தபோதே நான் ஆவலுடன் இருப்பதாக என் சேவகன் சொல்லவில்லையா?" என்று கேட்டான்.

அதற்கு அவன், "ஆம்; ஐயா! தங்கள் சேவகன் அவ்வாறுதான் தெரியப்படுத்தினான். தாங்கள் என்னை இவ்வளவு அன்புடன் வரவேற்றதற்காக நான் தங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்," என்று விடை அளித்தான்.

அப்போது இளவரசன், "அந்த ஆசனத்தில் உட்காரு. நாம் பேசவேண்டியவற்றைப் பேசுவோம். நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன். நீ இன்று பகல் இங்கு வருவதற்குச் சற்றுநேரத்துக்கு முன்புதான் பிரேம நாதம்பிரபுவின் மனைவி பங்கஜம்மாள் எனக்கு ஒரு கடிதம் எழுதி அதில் நீ வரப்போவதாகவும், இன்ன காரணத்துக்காக நீ வருவதாகவும் எழுதியிருந்தார். நானும் உன்னை இரவில் ஆவலுடன் சந்திப்பேன் என்று சொல்லியனுப்பியதன் காரணம் என்னவென்றால் நீ நமது ஜெகதீஸ்வரியைக் காதலிப்பதாகத் தெரிந்துகொண்டதுதான். நான் அப்பெண் விஷயத்தில் அதிக அக்கரையுடையவன். எனக்கு ஏன் இவ்வளவு அக்கரை என்பது உனக்குத் தெரியாதா" என்று சொன்னதும் அவனுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. ஏனெனின் இளவரசன் துர்த்தனைகையால் எவ்வளவோ நற்குல மாதர்களையெல்லாம் கெடுத்தானென்றாலும் அவனுக்கு ஜெகதீஸ்வரியின் தாயாராகிய பத்மாவதியம்மாளிடம் மட்டும் தணியாக்காதல் இருந்தது. அந்த அம்மையும் இளவரசனை மனமார நேசித்தார். அவர்களிருவரிடைய உண்மைக்காதலே இருந்துவந்தது. இளவரசனுடைய செயலால்தான் அம்மாது மனமுடைந்து இறந்துவிட்டதால் அவனைப்பற்றிப் பேசும்போது அவனுக்கு அடங்காத் துக்கம் அதிகரித்துவிட்டது.

அச்சமயம் மதுரைநாயகமும் இளவரசனுடைய துயரத்தில் அனுதாபங்கொண்டு, "ஆம்; எனக்கும் சிறிது சந்தேகம் தோன்றிற்று. ஆனால் அதை வெளிப்படுத்த என் மனம் துணியவில்லை" என்று மரியாதையுடனும் பணிவுடனும் கூறினான்.

இளவரசன் ஆவலுடன், "ஏன் வெளிப்படுத்த மனம் துணியவில்லை" என்று கேட்டான். அதற்கு அவன்,

"ஏனென்றால் எனக்கு அம்மாதின்மீது பற்பல சந்தர்ப்பங்களையும் கொண்டு சந்தேகம் அதிகரித்ததென்றாலும் இறந்து போன ஒரு மாதைப்பற்றி அவதூறாகப்பேச என் மனம் வரவில்லை" என்று பதில் கூறினன்.

அப்போது இளவரசன் தன் உள் சட்டைப்பையில் கையைப் போட்டு அழகான தங்கச் சட்டங்களில் அடக்கம் செய்யப்பட்டிருந்த ஒரு அழகிய மாதின் படத்தை எடுத்து மதுரைநாயகத்தினிடம் கொடுத்து, "இவள்தான் என்னை அளவிலா அன்புடன் நேசித்தது. என் யோக்கியதைக்கு மீறியும் அவள் என்னைத் திரிகாண சுத்தியுடன் நேசித்தாள் பாவம்" என்று கூறினன்.

அப்படத்தைக் கண்ட மதுரைநாயகம், "அப்படியானல் நான் சந்தேகப்பட்டது சரியாய்விட்டது. இப்படம் எனது காதலி ராஜேஸ்வரியின் தாயார் பத்மாவதி அம்மாளுடையது தானே" என்று கேட்டான். அதற்கு இளவரசன், "ஆம்; அவளுடைய படம்தான். ஆனல் அவள் தன் கணவனுக்குத் துரோகம் செய்யவில்லை. பத்மாவதியம்மாள் அவரை மணப்பதற்கு முன்பே ஜெகதீஸ்வரி பிறந்தாள். எனினும் அந்தம்மாளின் மானத்தைக் காக்கும்பொருட்டு அவள் அத்தம்பதிகளுக்கே பிறந்ததாகச் சொல்லப்பட்டு வருகிறது" என்ருன்.

உடனே மதுரைநாயகம் ஆத்திரத்துடன், "அவ்வாருயின் ஜெகதீஸ்வரி தங்கள் புத்திரியா? ஆ! கடவுளுடைய ஏற்பாடுகள் எப்படி இருக்கின்றன. இதனல்தான் அவள் முன்பு தங்களை இந்த அரண்மனையில் சந்தித்தபோது அவளுக்குத் தங்களிடம் பித்ருவாஞ்சை ஏற்பட்டது. அதனல் தான் தன் மனதில் தோன்றிய உணர்ச்சியைப்பற்றி விசாரித்து உண்மையை அறிந்துகொள்ளாதமுன் தனக்கு வாழ்க்

கையில் அமைதியும் திருப்தியும் ஏற்படாதெனக் கூறினள். நானும் அதற்காகவே உண்மையைக் கண்டுபிடிப்பதில் என்னு லான முயற்சி செய்வதாக ஒப்புக்கொண்டேன்'' என்று கூறினன்.

அதற்கு இளவரசன், "இந்த இரகசியம் தெரிவதால், அவள் திருப்தியடைவாள் என்று நினைக்கிருய்? தன் தாயாரின் மானக்கேட்டைக் கேட்டுத் துயரமடைவாள் அல்லவா? ஆகவே நீ மிக ஜாக்கிரதையாக இவ்விஷயத்தை அவளிடம் சிறிது சிறிதாகத் தெரிவிக்கவேண்டும். அவள் இதனுல் ஏதேனும் துயரமடைந்தாள் என்று தெரிந்தால் என் மனம் வருத்தப்படும்'' என்ருன். இளவரசன் இவ்வளவு இளகிய மனதுடன் பேசியது ஆச்சரியமாகவே இருந்தது. ஏனெனின் சகலவிதமான துஷ்கிருத்தியங்களும் நிறைந்த ஒருவன் இவ்வளவு அன்புடன் பேசுவதென்ருல் அதற்கேதேனும் பிரத்தியேக காரணம் இருக்கவேண்டும்.

மதுரைநாயகம் இளவரசனிடம், "இளவரசே! இவ்விஷயத்தை எவ்வளவு பக்குவமாக ஜெகதீஸ்வரியிடம் தெரிவிக்கவேண்டுமோ அவ்வளவு ஜாக்கிரதையாகத் தெரிவிக்கப்படும் என்பதைத் தாங்கள் உறுதியுடன் நம்பலாம். பங்கஜம்மாளே இதை அவளிடம் தெரிவிப்பாள். அப்பெண்ணினிடம் அவளுக்கு அதிக பிரீதி. இந்த இரகசியம் அவளுடையதல்லவாதலால் தாங்கள் அனுமதி தரவேண்டுமென்றே அவள் எதிர்பார்த்தாள். இப்போது தாங்கள் அந்த அனுமதியையும் கொடுத்து விட்டீர்கள்'' என்ருன்.

அதற்கு இளவரசன், "ஆம்; தாராளமாக அனுமதி கொடுக்கிறேன். ஆனுல் உலகம் சம்பந்தப்பட்ட வரையில் இந்த இரகசியம் ஒரு சிலருக்கே தெரிந்திருப்பதுதான்

நலம்'' என்றான். உடனே மதுரைநாயகமும், "நிச்சயமாகவே பலருக்கும் தெரியக்கூடாதுதான். பாவம்! காலஞ்சென்ற அம்மாதிற்கு மானபங்கம் ஏற்படும்படி இப்போது நாம் பேசலாகாது'' என்று கூறினான்.

பிறகு இளவரசன், "மதுரைநாயகம்! உன் விவாகத்துச்கு நான் வரமுடியாது. ஆனால் உன்னை நான் மறவேன். என்னாலான எந்த உதவியும் உனக்குச் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் என்னிடம் பணம் மட்டுமே கிடையாது. எனினும் நீ பணக்காரன் என்று கேள்விப்பட்டேன். ஆதலால் உனக்குப் பணம் அவசியமில்லை. ஏதேனும் பட்டம் வேண்டுமாயின் வழங்கத் தயாரா யிருக்கிறேன்'' என்று கூறினான்.

அதற்கு மதுரைநாயகம், "தாங்கள் இவ்வாறு அபிமானத்துடன் சொன்னதே போதுமானது. அதற்காக உங்களுக்கு வந்தன மளிக்கிறேன். எனக்கு எத்தகைய பட்டங்களும் வேண்டாம். என் தகப்பனார் காணாமற் போயிருப்பதால் நானே ஒரு ஜமீன்தாராக இருக்கிறேன். நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறபடி அவர் மீண்டும் வந்துவிட்டாலும் நான் அந்த ஜமீனுக்கு வாரிஸ்தாரனாக இருந்து அதை ஒருநாள் பெற்றே தீர்வேன். அதுவே எனக்குப் போதும்'' என்று பதில் அளித்தான்.

அச்சமயத்தில் அவ்வறையின் கதவைத் திடீரென்று திறந்துகொண்டு மதனவல்லி அங்கே வந்து, "இளவரசே! ஏன் எங்களையெல்லாம் இவ்வாறு விட்டு விட்டு வந்துவிட்டீர். அங்கு அனைவரும் உங்களுக்காகவே தேடி யலைகின்றனரே. நான் உங்களைப் பல இடங்களிலும் தேடினேன்'' என்றாள். ஆனால் இதற்குள் அவள் திடீரென்று மதுரைநாயகத்தின் முகத்தைப் பார்த்ததும் தான் பேசுவதை நிறுத்

திக்கொண்டு அவனை எங்கேயோ பார்த்திருப்பதுபோல் இருக்கிறதே என்று கவனித்தாள். மதுரைநாயகமும் அவளைக் கண்டதும் தான் முன்பு அவளுக்கும் செல்லப்பப் பிரபுவுக்கும் கலியாணமானபோது கோவிலில் கண்ட ஞாபகம் வரவே அவளை ஆச்சர்யத்துடனும் சந்தேகத்துடனும் கூர்ந்து கவனித்தான்.

அப்போது இளவரசன், "நீங்களிருவரும் பரஸ்பரம் அறிவீர்களா? அல்லது நான் அறிமுகம் செய்து வைக்கட்டுமா" என்று கேட்டான்.

அதற்கு மதனவல்லி, "இவர் மதுரைநாயகம் பிரபு தானே?" என்று கேட்டுக்கொண்டே அவனிடம் சென்று அன்புடன் அவனது கையைக்குலுக்கி "நாம் இருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்தவர்களே" என்று கூறினாள். அன்று இரவு மதனவல்லி மிக அழகாக அலங்கரித்துக்கொண் டிருந்தாள். அவள் அழகைப்பற்றி முன்னரே பலமுறை வர்ணித்துள்ளோம். தேவேந்திரலோகத்து மாதர்களும் வெட்கித் தலைகுனியும்படி அவ்வளவு சிறப்பாகத் தன்னை அழகு படுத்திக்கொண்டிருந்தாள்.

அவள் மதுரைநாயகத்தைப் பார்த்து, "நமது மாளிகையில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் களியாட்டத்துக்குத் தாங்கள் வருவீர்களோ" என்று மிக்க அன்புடனும் மரியாதையுடனும் கேட்டாள்.

அவள் யாரென்பதையும் தான் கண்டபோது அவள் இருந்த நிலைமையையும், இப்போது அவள் இருக்கும் நிலைமையையும் ஒருவாறு யூகித்தறிந்துகொண்டு, "இல்லை, அம்மணி! நான் வரவில்லை. என்னை அழைத்தற்காகவே உனக்கு வந்தனம். நான் இளவரசரிடமிருந்து விடைபெற்றுச் சென்று பல வேலைகளில் ஈடுபடவேண்டியவனாக இருக்கிறேன்" என்று விடை பகர்ந்தான்.

அதற்கு மதனவல்லி "அப்படியானால் இன்று நீங்கள் போய்வாலாம். ஆனால் இப்போது எனது அன்பர் மாளிகைக்குத் தாங்கள் வந்ததேபோல் என் மாளிகைக்கும் ஒரு நாள் வரவேண்டும்; போய்வாருங்கள்" என்றாள். அச்சமயத்தில் இளவரசன் தன் கடிகாரத்தைப் பார்த்து அதில் மணி பத்து ஆகியிருப்பதைக் கண்டு தான் வேறொரு விஷயத்தைக் கவனிக்கவேண்டிய ஞாபகம் வரவே பிரமிப்புடன் நின்றான்.

மதுரைநாயகமும் இளவரசனுடன் அனுமதி பெற்று வெளியே சென்றான். அப்போது இளவரசனும் "என்னாலான உதவியையெல்லாம் செய்யத் தயாராயிருக்கிறேன். உதவி வேண்டியபோது சொல்லியனுப்பலாம்" என்றுகூறி அனுமதி யளித்தான். மதுரைநாயகம் வெளியே வந்ததும் நேராக வீட்டுக்குச் செல்லாமல் அதேமாளிகைக்குள் செல்வதற்காக ஏற்பட்டுள்ள பிரத்யேக வாயிலின் வழியில்போய் நின்றுகொண்டு யாரையோ எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். அப்போது தன் கடிகாரத்தைப் பார்த்ததில் மணி பத்து அடிக்க இன்னும் ஐந்துநிமிஷ மிருக்கிறதென்றும், அப்போது இளவரசரும், அக்கடிதம் எழுதிய மாதும் சந்திப்பார்களென்றும் தெரிந்துகொண்டான்.

அவன் அங்கே நின்றுகொண்டிருக்கும் வேளையில் அப்பக்கம் வந்த ஒரு விகாரரூபமுள்ள மனிதனை நோக்கி, "அடேயப்பா! நீ உடனே துப்பறியும் உத்தியோகஸ்தனான செல்வநாதன் வீட்டுக்குச் சென்று அவனை இங்கேவரும்படி சொல். அதற்காக இதோ ஒருபவுன் தருகிறேன். உனக்கு அவன் வீடு தெரியுமா?" என்றான். அம்மனிதன், "ஆஹா! தெரியாமலா? செல்வநாதன் வீட்டை அறியாதவர் யாரும் இரார்.

இதோபோய் அப்படியே வரச்சொல்லுகிறேன்'' எனக்கூறி அவன் கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டான்.

சற்று தூரம் சென்ற அம்மனிதன் திரும்பி வந்து, "ஐயா! செல்வநாதனிடம் யார் கூப்பிடுவதாகச் சொல்லட்டும். ஏனென்றால் அவர் எளிதில் யாரையும் நம்பிவிட மாட்டார்'' என்றான். அதற்கு அவன், "மதுரைநாயகம் பிரபு வரச்சொன்னார் என்று சொல்லிவிட்டு நீயும் உடனே வந்துவிடு. நான் இங்கேயே எங்கேனும் நின்று கொண்டிருப்பேன். உனக்கு வந்த பிற்பாடு மற்றொரு பவுன் இனும் தருவேன்'' என்று சொன்னான்.

அம்மனிதன் "அப்படியே ஆகட்டும், தாங்கள் சரியான பெரிய மனிதர் என்பது தங்கள் பேச்சாலும் செய்கையாலும் தெரிகிறது'' என்று கூறிக்கொண்டே செல்வநாதன் வீட்டின் திசையை நோக்கிச் சென்றான்.

145-வது அத்தியாயம்

இளவரசன் மதுரைநாயகத்துக்கு அனுமதி யளித்து அனுப்பிய பிறகு, மதனவல்லியின் வேண்டுகோளின்படி களியாட்டம் நடந்து கொண்டிருந்த இடத்துக்குச் செல்லாமல் தனக்கு ஏதோ வேறு அவசரமான வேலை ஏற்பட்டிருப்பதாகவும் ஆதலின் பதினொரு மணிக்குமேல் அங்கு வருவதாகவும் சொல்லி யனுப்பி விட்டான். பிறகு அவன் மற்றொரு புறத்திலுள்ள ஒரு பிரத்யேக அறைக்குச் சென்றான். அங்கே தான் அவன் யாரைக் காதலிக்கிறானோ அவர்களை முதலில் சந்திப்பது வழக்கம். அவ்வறையிலிருந்து மற்றொரு அறைக்குச்செல்ல வழியுண்டு. அந்த அறைதான்

இளவரசன் தான் விரும்பிய மாதர்களுடன் சோரத்தனமாக இன்பம் அனுபவிப்பது வழக்கம். அது அதற்கேற்றபடி அலங்கரிக்கப்பட் டிருந்தது. ஆனல் இப்போது அவ்வறை யின்கதவு மூடியிருந்தது. எனினும் அதைத் திறந்து கொண்டு தன்னைச் சந்திக்கவரும் மாதுடன் இன்ப மனு பவிக்கவே அவன் அதற்கடுத்த அறையில் உட்கார்ந்து கொண்டான். அவனுடைய எதிரிலிருந்த மேஜையின்மீது மிக்க இனிய பழங்களும், மதுபான வகைகளும் வைக்கப் பட்டிருந்தன. நல்ல வாசனைதரும் பன்னீர் முதலியன தெளிக்கப்பட்டும், ஊதுவத்தி ஏற்றப்பட்டு மிருந்தது. படுக்கை யறையில் இருக்கவேண்டிய லீலாவினோதப் படங்க ளெல்வாம் இருந்தன. யாரேனும் அவ்வறையில் நுழைந்தால் அவர்களுக்கு இயற்கையாகவே காமவிகாரம் தோன்றும்.

இந்த நிலைமையில் உட்கார்ந்திருந்த இளவரசன் தான் எதிர்பார்க்கும் மாது இன்னும் வரவில்லையே என்னும் ஏக் கத்தாலும், தனக்கு உண்டான விரகதாபத்தாலும் ஏதேதோ கூறிக்கொண் டிருந்தான். மதுரைநாயகத்தைப் பார்த்த போது தன்னை ஒருகாலத்தில் உண்மையில் நேசித்த பத்மா வதி யம்மாளையும், அவள் மூலமாகத் தனக்குப் பிறந்த ஜெகதீஸ்வரியையும் நினைத்துக்கொள்ள நேர்ந்ததால் அதிக துக்கமடைந்த இளவரசனது மனம் திடீரென்று மாறி அரை மணி நேரத்துக்குள் காமவிகார உணர்ச்சியுடன் மற்றொரு மாதைச் சந்திக்க வேறொரு அறையில் உட்கார்ந்திருக்கிறு னென்றால் அவனுடைய மனோபாவத்தை என்னென்று கூறுவது. அவன் மாதர்கள் விஷயத்தில் அவ்வளவு கேவல மாக ஸ்திரீலோலனுகப் போய்விட்டிருந்தான்.

மேலும் அவன் எப்படிப்பட்ட மாதைச் சந்திக்கக் காத்துக்கொண் டிருக்கிறுனென்றால் அழகில் மதனவல்லிக்கு

அடுத்தபடியாக உள்ளவளும், ஆடவர்களின் மனதில் காமத் தீயை எளிதில் மூட்டக்கூடியவளும் முன்பு ஒருமுறைதான் அவளது கரத்தில் சகல இன்பங்களும் அனுபவிக்க இடங் கொடுத்தவளுமானதால் அவனுக்கு மோகம் அதிகரித்து விட்டது. அவள் ஒரு கொலைக்குற்றத்தில் சம்பந்தப்பட்டவ ளாகவும், தன் கணவனையே காட்டிக்கொடுத்துத் தூக்கு மேடையில் ஏற்றித் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்ட வளுமாக இருந்தும் அவன் அக்குற்றத்தை யெல்லாம் பொருட்படுத்தாமல் அவளது அழகு ஒன்றையே பெரிதாகக் கருதி அவளுடைய வரவை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண் டிருந்தான்.

இளவரசன் இவ்வாறு காத்திருக்கையில் தேகமுழுதும் பர்தா அணிந்த ஒருமாது திடீரென்று அக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே; வந்தாள். இளவரசனுடைய அந்தரங்க சேவகன் தான் அவளை இங்கு கொண்டுவந்து விட்டான். அவள் உள்ளே நுழைந்ததும் அவன் போய்விட்டான். கதவு சாத்தப்பட்டு உட்புறம் தாளிடப்பட்டது. அம்மாது தான் அணிந்திருந்த முகமூடியையும் பர்தாவையும் அப் புறப் படுத்திவிட்டு இளவரசன் எதிரில் நின்றாள். அவள் தான் சுகசிங்கம் பிரபுவின் சகோதர புத்திரியும், தேவராய னுடைய மனைவியுமான தெய்வயானை. அவள் சமீபத்தில் விதவையாகியும் அவர்களுடைய ஆசாரப்படி ஒரு வருஷ காலம் வரை துக்க உடையான கறுப்பு ஆடையையே அணியவேண்டி யிருந்தும் அவள் அப்படியெல்லாம் துக்க உடை யணியாமலும், விதவைகளுக்கு வேண்டிய குறி யொன்று மில்லாமலும் பல ஆடவர்களுடைய மனதையும் கவரக்கூடிய விலைமாதைப்போல் ஆடம்பரமான ஆடை ஆப ரணங்களை யணிந்து கண்டோர் மனதை வசீகரிக்கும் தன்

மையில் அங்கு வந்து சேர்ந்தாள். அவள் மெல்லிய பட்டாடைகளை அணிந்திருந்தாளே யன்றி அவளுடைய அங்கங்களெல்லாம் அப்படியப்படியே தெரியக்கூடியதாக இருந்தன. அவள் அணிந்த ரவிக்கைக்குக் கையே இல்லாததால் அவளது தோள் முதலிய அவயவங்கள் தெரியவே இளவரசன் மனதில் காமவிகாரம் அதிகரித்து விட்டது. அவன் அவளைத் தன் அருகில் இழுத்து உட்கார வைத்துக்கொண்டு அவள் பல துக்கங்களை யடைந்தும் அவளது ரூபலாவண்யம் மட்டும் சிறிதும் குன்றாம லிருந்ததைக்கண்டு ஆச்சர்யமடைந்தான்.

அவளுடைய அழகைச் சிறிதுநேரம் வரை உற்றுநோக்கியிருந்து அதில் அப்படியே மயங்கிப்போன இளவரசன் சொற்பநேரத்துக்குப் பின்னர், "தெய்வயானை! நீ எப்போதும்போல் மிக அழகுள்ளவளாய் இருக்கிறாய். உன்னை நான் முதல்முறை பார்த்த ஞாபகம் எனக்கு நன்றாக இருக்கிறது. அப்போதே நான் உன் அழகைக்கண்டு உனக்கு அடிமையானேன். நீ ஒருகால் கீழ்நாடுகளி லிருந்துவந்த ரூபவதியோ என்றும் சந்தேகித்தேன். ஏனெனின் உன் அழகு அவ்வளவு அபூர்வமானதாக இருந்தது. தெய்வலோகத்திலிருந்து இறங்கியவளோ என்று நம்பினேன்" என்று கூறிக்கொண்டே அவளது கழுத்தில் தன் கையைப்போட்டு மெதுவாக ஒரு முத்தம் தந்தான்.

நேயர்காள்! இங்கு ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். இளவரசன் தெய்வயானையை அவள் கீழ்நாட்டுப் பெண்ணோ என்று சந்தேகித்ததன் காரணமென்ன? உண்மையிலேயே மேல்நாட்டு ஆடவர்களும் மாதர்களும் கீழ்நாட்டாரையும் கீழ்நாட்டார் மேல்நாட்டாரையும் விரும்புவது சகஜம். மனித இயற்கையே புதிய ஒன்றைக்கண்டால்

அதை அனுபவிக்கவேண்டுமென்னும் ஆவல் எழுவது சகஜம். நமது கீழ்நாட்டு ஆடவர்கள் பலர் மேல்நாட்டு மாதர்களின் அதுபோல் மோகத்தில் சிக்கி அலைகின்றனர். அவ்வாறே மேல் நாட்டு ஆடவர்களும் கீழ்நாட்டு மாதர்களின்பின் அலைகின்ற னர். இதுமட்டுமல்ல; வேறொரு விசேஷமும் உண்டு. மேல் நாட்டுமாதர்களும் கீழ்நாட்டு ஆடவர்களை விரும்புகின்றனர். உதாரணமாக இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வாசிக்கச் செல்லும் மாணவர்கள் பலரிடம் அந்நாட்டுப் பெண்கள் காதல் கொண்டு சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு விடுகின்றனர். இத னால் விவாகமாகாத பல ஆங்கிலப் பெண்கள் கீழ்நாட்டார் சம்பந்தத்தால் பெற்றுவிடும் மக்களை எந்தவர்க்கத்தில் சேர்ப் பது என்னும் பெரிய பிரச்சினை இப்போது இங்கிலாந்தில் கிளம்பி இருப்பதாகவும் தெரிகிறது. இப்போது நம் நாட் டில் சில தலைவர்கள் ஆங்கிலப் பெண்களை மணந்துகொண் டிருக்கிறார்கள். எப்படியாயினும் விபசாரம் அதிகரிக்காத படி பார்த்துக்கொள்ளவேண்டியது அறிஞர்களின் கடமை யாகும்.

இளவரசன் அவ்வாறு கூறியதைக்கேட்ட தெய்வ யானை "ஓஹோ! தாங்கள் அன்று இரவு நடந்த சம்பவத் தைக் குறிப்பிடுகின்றீர்களோ! தாங்கள் அப்போது மாய மாய் அங்கு கொண்டுவரப்பட்டீர் அல்லவா? நான் அங்கே கீழ்நாட்டுப் பெண்ணைப்போலத் தான் அலங்கரித்துக்கொண் டிருந்தேன்" என்றாள். அவனும், "ஆ! என்ன அழகு! அந்த வேடம் உனக்குப் பொருத்தமாயிருந்தது. அப்போது நீ துருக்கி தேசத்து அந்தப்புரங்களில் இருக்கும் சுல்தானுக்க ளைப்போலல்லவோ காணப்பட்டாய். ஆ! என்ன ரூபலாவண் யம்" என்று கூறி அந்த இரவில் அவன் அம்மாதுடன் அனுபவித்த இன்பங்களையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்

டான். ஏனெனின் மற்ற இன்பங்களெல்லாம் அனுபவிக்கும் போது மட்டுமே ஆனந்தந்தருமென்றும், ஆனால் காதலின் பம் மட்டும் முன்பு நடந்துபோன ஒரு காரியத்தை ஞாபகப் படுத்திக்கொண்டாலும் இன்பந்தருவது என்றும் திருக்குறளி லேயே கூறப்பட்டிருக்கிறதல்லவா?

இளவரசன் தன்னைப் புகழ்வதைக்கண்ட தெய்வயானை, "என்னை ஏன் பிரமாதமாகப் புகழ்கிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டே தன் முழுசக்தியையும் உபயோகித்து அவனைக் கள்ளப்பார்வையால் கூர்ந்து நோக்கினாள். அவனும், "இல்லை; இல்லை; நான் உன்னை வீணில் புகழவில்லை. நான் உள்ளத்தில் உண்மையாக நினைப்பதையே சொல்கிறேன். நீ மட்டும் அவ் வளவு அழகுள்ளவளாக இல்லாமல் இருந்து, நான் உன் னிடம் மயங்கிவிடாமல் இருந்திருந்தால் என்னை மாயமாய் அங்கே கொண்டு வந்ததற்கு நான் அவர்களைத் தண்டித் திருப்பேன். நான் அன்று உன்னிடம் அனுபவித்த இன்பத் துக்காகவே அவர்களை மன்னித்துவிட்டேன். நான் அந்த இரவை என் ஆயுளில் ஒருகாலும் மறக்க முடியாது, இரண் டாவதுமுறையாக உன்னை உன் பெரியதந்தை சுகசிங்கம் பிரபுவின் வீட்டில் கண்டேனல்லவா?" என்று கூறிக் கொண்டே தன்தலையை அவளது தோளில் சாய்த்தான்.

அப்போது அவள் தன் தோள்மீது இருந்த அவன் தலையை மெதுவாக இழுத்துத் தன் தொடைமீது வைத்துக் கொண்டு அவனைத் தடவிக்கொடுத்த வண்ணம், "உன்னைப் போல் நானும் சிறிது ஞாபகசக்தி யுடையவளே. நான் உன்னை நேசிக்கிறேன். நான் அன்றிரவு உன்னைப் பார்த்தது முதல் சதா உன் பிரதிபிம்பமே என் கண் எதிரில் நிற்கிறது. உனக்காவது என்னைப்போல பல காதலியர் இருக்கிறார்கள். ஆதலால் உன் கண்முன் சதா பலரும் தோன்றுவார்க ளாத

லால் என்னைக் குறிப்பாகக் காணமுடியாது. என் சங்கதி அப்படியல்ல.'' என்றாள்.

அதற்கு அவன், "அப்படிச் சொல்லாதே. நான் அடிக்கடி உன்னை நினைப்பதுண்டு. உண்மையிலேயே நீயும் மதனவல்லியும் தான் இந்த தேசத்தில் மட்டுமல்ல, இந்த உலகத்திலேயே அழகானவர்கள்,'' என்றான். உடனே அவள், "நீ சொன்னபடியே உண்மையில் கருதுவதானால் நான் நல்ல அதிர்ஷ்டசாலிதான்'' என்று கூறிக்கொண்டே தன் தொடைமீதிருந்த அவனது முகத்தில் தன் முகம் எட்டும்வரை குனிந்து முத்தமிட்டாள்.

அப்போது இளவரசன், "எனதன்புள்ள கண்மணி! என் அன்பில் நீ ஏன் சந்தேகம் கொள்கிறாய். நான் என்ன அப்படித் தவறாக நடந்து கொண்டேன். நான் உன் விஷயங்களை மறந்து விட்டேனா? இன்றிரவு நான் உன்னை ஆவலுடன் வரவேற்றதிலிருந்தே நான் உன்னிடம் எவ்வளவு அன்புடையவனாய் இருக்கிறேன் என்பது தெரியவில்லையா'' என்றான்.

தெய்வயானை:—ஆம்; நீ இவ்வளவு அன்புடன் வரவேற்றதற்காக நான் வந்தனம் செலுத்துகிறேன். நான் கடைசி முறையாக உன்னைப் பார்த்ததுமுதல் மிகவும் துயரமான நிலைமையில் இருந்து வருகிறேன்.

இளவர:—ஆம்; நானும் உனக்காக அடிக்கடி வருந்துவதுண்டு. ஏனெனின் அன்றிரவு ஊருக்கு வெளியிலுள்ள பாலத்தினடியில் நடைபெற்ற சம்பவம் எனக்கும் தெரியுமல்லவா?

தெய்வ:—ஓ! அப்படியா? அதுவும் உனக்குத் தெரிந்துவிட்டதா? அதற்காக நீ என்னைக் கேவலமாக நினைக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இளவர:—நான் அப்படி நினைக்கமாட்டேன். அந்தக்கொடிய பாவி தானப்பன் உனக்குப் பலதொல்லைகளை விளைவிப்பதனால்தான் நீ அவ்வாறு செய்யத்துணிந்தாய் போலும்!

தேய்வ:—ஆம்; உண்மைதான். நான் அப்பாலத்தினடியில் அந்தப் பாவியைத்தான் கொல்லப்போனேன். ஆனால் தவறுதலாக வேறு யாரோ ஒரு இளைஞனைக் கத்தியால் காயப்படுத்திவிட்டேன். நான் பின்னர் விசாரித்ததில் அவ்வாலிபன் டாக்டரிடம் எடுத்துச் செல்லப்பட்டதில் சொஸ்தமடைந்ததாகக் கேள்விப்பட்டேன். ஆனால் அவன் யாரென்று மட்டும் தெரியவில்லை. அவன் அந்நேரத்தில் அங்கு வரவேண்டிய காரணம் யாதோ?

இளவர:—அந்த விஷயத்தைப்பற்றி நாம் இப்போது அதிகமாய்ப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அவன் பிழைத்துவிட்டான் என்று தெரிந்ததே போதுமானது. நீ ஏன் இரத்னபுரிக்கு வெளியில் வசித்துவருகிறாய் என்பதை அறிவி. அந்த தானப்பன் தொல்லை இன்னமும் இருந்துவருகிறதா?

தேய்வ:—ஆமாம்; அவனுடைய தொல்லைதான் பெரிதாயிருக்கிறது. அவன் என்னிடமிருந்து விரும்புவது உனக்குத் தெரியுமல்லவா? அதைச் சாதித்துக்கொள்ள அவன் பலவிதமான பயத்தையெல்லாம் காட்டி மிரட்டுகிறான். அவனைக் கண்டால் எனக்குப் பயமாயிருக்கிறது. அது விஷயமாய் யோசனை கேட்கவும், உன் உதவியை நாடியுமே இப்போது இங்கேவந்தேன்.

இளவர:—சந்தோஷமே. நான் உதவிசெய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் உனக்கு எந்தவகையில், எப்படி உதவிசெய்யவேண்டும் என்பதை நீயே சொல்.

தெய்வ:—நான் எப்படியாவது அக்கொடிய பாவியாகிய தானப்பன் கொடுமையினின்றும் விடுபடவேண்டும். அப்போதுதான் இரத்தினபுரியில் வந்து சுகமாக எனது பெரியதந்தை வீட்டில் இருக்க முடியும். இப்போது நான் அவனுக்காகவே மறைந்திருக்கிறேன்.

இளவர:—அப்படியானால் அவனுக்கு நீ பயப்படவேண்டிய காரணங்கள் என்ன என்பதை ஒவ்வொன்றாக ஆராய்வோம். அப்போதுதான் அதற்குப் பரிகாரம் கண்டு பிடிக்க முடியும். முதலாவது உன் கணவன் தூக்கு தண்டனை விஷயத்தில் நாம் அவனை நடந்து கொள்ளும்படி சொன்னதை அவன் இப்போது வெளிப்படுத்தமுடியாது. அப்படியே வெளிப்படுத்தினாலும் அதை யாரும் நம்பமாட்டார்கள்.

தெய்வ:—நீ சொல்கிறபடியே வைத்துக் கொள்வோம். அப்போதும் அன்று பாலத்தினடியில் நான் ஒருவனைத் தாக்கிப் படுகாயப்படுத்தியதை அவன் பார்த்திருக்கிறானல்லவா? அவன் அங்கு இருந்தான் என்பது நிச்சயம்.

இளவர:—இருக்கட்டுமே. அந்த விஷயம்தான் முடிந்து விட்டதே. மேலும் நீதான் தாக்கினாய் என்று அவனுக்கு எப்படித்தெரியும்? அன்றியும் அதை அவன் கோர்ட்டிற்குக் கொண்டுவந்தால் அதில் அவனுக்கும் சங்கடமிருக்கிறது. அப்போது அவன் அங்கு வர வேண்டிய காரணமென்ன என்னும் கேள்வி பிறக்குமல்லவா?

தெய்வ:—இருந்தாலும் அவன் அதையெல்லாம் சொல்லி மிரட்டும்போது எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது.

அவன் எப்படியாவது அவைகளை வெளிப்படுத்தித் தொந்தரை செய்வான் என்று தோன்றுகிறது.

ஆகவே அவனுக்கு அஞ்சித்தான் நான் இரத்தினபுரி நகரிலேயே சுகமாக எனது பெரிய தந்தை வீட்டில் வசிக்க முடியாமல் இருக்கிறது. நான் இங்கு வந்தது அவனுக்குத் தெரிந்தால் அவன் எப்படியாவது அம்மாளிகையில் புகுந்து என் எதிரில் திடீரென்று வந்து இடும்பாசுரனைப்போல் நின்று என்னைத் தன் இஷ்டத்துக்கு இணங்கும்படி மிரட்ட ஆரம்பிப்பான். பலாத்காரத்தையும் உபயோகிப்பான்போலத் தெரிகிறது. இதனால் எனக்குப் பெரிய கஷ்டமாக இருக்கிறது. என் பெரியதந்தை மூலமாகவேனும் பஞ்சாயத்து செய்துகொண்டு அவனுக்குப் பணம் கொடுத்தாவது சமாதானம் செய்துகொள்ளலாமென்று பார்த்தாலும் அவன் வார்த்தையை நம்புவதற்கு இல்லை. இதுதான் எனக்குப் பெரிய விசாரமாய் இருக்கிறது.

இளவர:—ஆம்; உன் நிலைமை மிக்க சங்கடமானதாகத்தான் இருக்கிறது. நானும் அதற்காக வருந்துகிறேன். உண்மையைக் கூறுகிறேன் கேள். சொற்பதினங்களுக்கு முன்னரே அப்பாவியை எங்கேனும் தீவாந்தரங்களுக்கு ஏதேனும் காரணம் காட்டி அனுப்பிவிட வேண்டுமென யோசித்தேன். ஆனால் நாட்டில் நிகழ்ந்த பல அரசியல் விஷயங்களால் அதைப்பற்றிக் கவனிக்க முடியாமற் போய்விட்டது.

தெய்வ:—இப்போதாவது எனக்காகவேனும் நீ முன்பு நினைத்தபடி செய்து அவனைத் தொலைத்துவிடக் கூடாதா? அப்படிச் செய்கிறாயா?

இளவர:—"உனக்காக எதையும் செய்வேன் என் கண் மணியே" என்று கூறிக்கொண்டே அவளை இருகத் தழுவி அணைத்துக்கொண்டான்.

தெய்வ:—அப்படியானல் என்னசெய்யப் போகிறுய் என் பதைத்தெரிவி. ஏனென்ருல் அதன்பிறகு தான் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும். நான் இந்நகரைவிட்டு வெளி யில் வசிப்பது எவ்வளவோ கஷ்டமாக இருக்கிறது. நீ அவனை என்னசெய்யப்போகிருய் என்பதைத் தெரிவித்து விட்டால் நான் இரகசியமாகவேனும் என் பெரிய தந்தை வீட்டுக்குச்சென்று அங்கேயே சொற்ப காலம் மறைந்து வாழ்வேன். என் விரோதி ஒழிந் தான் என்று தெரிந்தபிறகுதான் வெளி வருவேன்.

இளவர:—எனதன்புள்ள மாதே! அப்படியே செய். நீ இப் போது என்னைவிட்டுப் பிரிந்ததும் நேராக உன பெரிய தந்தை வீட்டுக்கே போ. இன்னும் சில நாட்களில் அவனை ஒரு விதமாக ஒழித்துவிட்டு நானே அங்கு வந்து உனக்குத் தெரிவிக்கிறேன். அப்போது நாம் இருவரும் அந்த இரகசிய அறைகளுக்குச் செல்வோம்.

தெய்வ:—அப்படியே ஆகட்டும். நீ அவனைத் தொலைத்து விட்டு வந்தால் நான் உன்னுடன் எங்கு வேண்டு மாயினும் வரத்தயாராக இருக்கிறேன்.

என்று கூறிக்கொண்டே அவனை மிக்க காமவிகாரத் துடன் நோக்கினுள். இதனல் அவனுடைய உணர்ச்சியும் எல்லை கடந்துவிட்டது. ஆகவே அவர்களிருவரும் அவ் வறைக்கடுத்த படுக்கை யறைக்குச் சென்றூர்கள். தெய்வ யானை அங்கு ஒருமணி நேரத்துக்குமேல் இருந்துவிட்டுப் பழையபடி தன் முகமுடியையும், பர்தாவையும் அணிந்து

கொண்டு வெளியே புறப்பட்டாள். அவள் அந்த அறை யில் இருந்த ஒருமணிநேரம் என்னசெய்தார்கள் என்பது பற்றி நாம் எழுதவேண்டியதில்லை. கள்ளக் காதலர்களாகிய அவர்களிருவரும் தங்கள் ஆவலைப் பூர்த்தி செய்து கொண் டார்கள்.

தெய்வயானை அம்மாளிகையைவிட்டுச் சென்ற பின் னர் இளவரசன், மற்ருரிடத்தில் நடந்து கொண்டிருந்த களியாட்டத்துக்குச் சென்ருன். அங்கே நகரிலுள்ள பிர பலர்களெல்லாம் வந்திருந்தனர். அக்கேளிக்கை மதன வல்லி, அவளுடைய கணவன் செல்லப்பப்பிரபு ஆகிய இரு வராலும் நடத்தப்பட்டது. அங்கே ஆடவரும் மாதரும் கூடிக்கொண்டு பற்பலவகை இனிய பதார்த்தங்களையும் மது பானங்களையும் அருந்திக்கொண்டும் தங்கள் தங்களுக்கிஷ்ட மானவர்களுடன் நடனம் புரிந்துகொண்டு மிருந்தார்கள். அங்கு ஒரு மூலையில் சில பெண்கள் கூடிக்கொண்டிருந்தார் கள். அவர்கள் மிக்க ரூபலாவண்ய முடையவர்களாகவும், மற்றவர்களைவிட அதிக சுறு சுறுப்பானவர்களாகவும் காணப் பட்டனர். அவர்களைக்கண்ட எவரும் அவர்களுடன் பேச வேண்டுமென்று விரும்பாமல் இருக்க முடியாது. அவர்க ளனைவரும் சகோதரிகளுமல்லர்; அல்லது பந்துக்களு மல் லர். ஆனல் ஒரு ரகசியமான விஷயத்தில் அவர்களனை வரும் நெருங்கிய சம்பந்த முடையவர்கள். அவர்கள் எக் காலும் அந்த இரகசியத்தை வெளியிட மாட்டார்கள்.

அவர்கள் அந்நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலு முள்ள பெரிய தனவந்தர்களின் புத்திரிகள். அவர்களில் இருவருக்கு விரைவில் விவாகம் செய்வதென்று ஏற்பட்டு அவர்களுக்கேற்ற காதலர்களும் அமைந்துவிட்டார்கள். மற்ற வர்களுக்கும் தக்க காதலர்களைத் தேடுவதில் ஆவலுடைய

வர்களாக இருந்தனர். அவர்கள் உயர் குலத்தையும் செல்வர்கள் வீட்டையும் சேர்ந்தவர்களாயும், மிக்க அழகுடையவர்களாயும் இருந்ததால் பல ஆடவர்களும் அவர்கள் நட்பு அகப்படுமோ என்று முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அப்போது தனியே இருந்தார்களென்றாலும் அவர்கள் பொதுவாக எல்லாருடனும் நடனம் செய்யவும், கூட்டமாகக் கேளிக்கையில் கலந்துகொள்ளவுமே வந்தவர்கள். அப்போது ஏதோ குறிப்பிட்ட விஷயத்தைப் பேசிக்கொள்வதற்காக ஓரிடத்தில் ஒன்றுகச் சேர்ந்தார்கள்.

நாம் இதுவரை பிரத்யேகமாகக் குறிப்பிட்ட அப்பெண் மணிகள் யார்? அவர்கள் அடிக்கடி இளவரசர் மாளிகைக்கு வந்து அவனுடன் நடனமாடுவதுடன் மட்டுமன்றி அதிக நெருங்கிய நட்பும் கொண்டவர்கள். அவர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு இரகசியமிருந்ததென நாம் மேலேகூறியது இதுதான். அவர்கள் பார்வைக்கு அழகானவர்களா யிருந்தாலும் அந்த அழகுக்கேற்ற அளவு சுத்தமாக அவர்கள் மனம் இருக்கவில்லை. அவர்கள் கற்புநிலை தவறியவர்கள். அவர்கள் கன்னிகைளாகக் காணப்பட்டாலும் உண்மையில் அவர்கள் அப்படி இருக்கவில்லை.

இவ்வாறுதான் பல பெரிய குடும்பங்களில் நடந்துவிடுகின்றது. அவர்கள் வளர்வதும், பயிற்சி பெறுவதும், அவர்களின் சுற்றுப்புறங்களிலுள்ள சமய சந்தர்ப்பங்களும் அவர்களை நெறிதவறும்படி செய்துவிடுகின்றது. பாடசாலைகளில் வாசிக்கும் பெண்கள் தங்குவதற்கென ஏற்படும் விடுதிகளே அவர்களை அவ்வாறு தவறிய வழியில் செலுத்துவதற்குரிய சாதனமாக இருக்கின்றன. இதனுல் எல்லாருமே கெட்டுப் போகிறுர்களென்று நாம் கூறுவதாகக் கொள்ளலாகாது. ஆனுல் பெரும்பான்மையோர் வழி தவறியவர்களே என்

பதில் ஆட்சேபமில்லை. அப்படி நல்வழியில் இருப்பவர் மிகச் சிலரே இருப்பர். இம்மாதிரி சமய சந்தர்ப்பங்களால் பெண்கள் கலியாணமாவதற்கு முன்னரே தங்கள் நெறியினின்றும் தவறியவர்களாக இருக்கிறார்கள்.

நேயர்காள்! மேல்நாட்டு ஆசிரியரே இவ்வாறு தம் நாட்டிலுள்ள குறைகளை உண்மையாக ஒப்புக்கொள்கிறார். இப்படிப்பட்ட நாகரிகத்தைத்தான் நாம் பின்பற்றவேண்டுமென்றும் இன்றேல் முன்னேற்றமடைய முடியாதென்றும் கூறுகின்றனர். அது தவறு. அந்தந்த தேசநாகரிகம் அவரவர்களுக்குச் சிறந்தது. ஆனால் மேல்நாட்டு நாகரிகத்தை ஒரு கடுகளவும் ஏற்கலாகாது என்பது நமது அபிப்பிராயமல்ல. அதிலுள்ள நல்லனவற்றை மட்டும் நம் தேசத்துக்கேற்ற முறையில் எடுத்துக் கையாளவேண்டுமே யன்றி அப்படியப்படியே பின்பற்றலாகாது. இதையே கவிரவீந்திர நாதர் முதலிய அறிஞர்களெல்லாம் கூறுகின்றனர்.

146 - வது அத்தியாயம்

இப்போது நாம் இளவரசனது மாளிகைக்கெதிரில் அன்றிரவு பத்துமணிமுதல் காத்துக்கிடக்கும் மதுரை நாயகத்தைக் கவனிப்போம். அவன் துப்பறியும் செல்வநாதனை அழைத்து வரும்படி ஒரு ஆளை அனுப்பிய பின்னர் அங்கே தான் யாருக்காகவோ காத்திருப்பதாக மற்றவர்கள் சந்தேகங் கொள்ளாம லிருக்கும்பொருட்டு ஒரே இடத்தில் நிற்காமல் மேலும் கீழுமாக நடந்துகொண்டே யாரேனும் வண்டியில் வந்து இளவரசன் மாளிகையின் பின்புறத்தில் இறங்கிப் பிரத்யேக வாயிலின் வழியே உள்ளே செல்

கிறார்களா என்பதையும் கவனித்துக் கொண்டிருந்தான். இவன் இவ்வாறு நின்றுகொண்டிருக்கையில் ஒருமாது தன் தேகம் முழுவதையும் மறைத்துக்கொண்டு மிக வேகமாக நடந்து சென்று பிரத்யேக வாயிலின் வழியே நுழை வதைக் கண்டான். உடனே அவன் தேகம் முழுவதும் நடுங்கியது. அம்மாது தன் தந்தையைக் கொலைசெய்தவ ளாகவோ அல்லது அதனுடன் சம்பந்தப் பட்டவளாகவோ இருக்கவேண்டுமென்று நினைத்தான்.

அம்மாது அவ்வாயிலின் வழியே உள்ளே நுழைந் ததும் மதுரைநாயகம் அவ்வழியின் அருகில் சென்று, உள்ளேயிருந்து வெளியே செல்வதற்கு வேறுவழி யிருக் கிறதோ என்று கவனித்தான். இவ்வழியே போனவர் இவ் வழியேதான் வரவேண்டு மென்பதையும் தெரிந்து கொண் டான். ஆகவே உள்ளேசென்ற மாது எங்கேயாயினும் இதே வழிதான் வந்து ஆகவேண்டு மென்பதையும் அறிந்து கொண்டான். அவன் அவ்வாறு பார்த்துத் திருப்தி யடைந்த பின்னர் வழக்கப்படி மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தான். சாதாரணமாக அங்கு யாவரும் நடப் பது வழக்கமாகையால் அவனை யாரும் ஏதோ காரணத்துக் காக இருக்கிறானென்று சந்தேகிக்கவில்லை. அப்போது அவன் மனதில் தான் சற்றுநேரத்துக்குமுன் இளவரசனைச் சந்தித்தது, அவன் தன் காதலியாகிய ஜெகதீஸ்வரியைப்பற் றித் தெரிவித்தது, தான் அங்கே ஒருமாதின் கடிதம் கண் டது, மதனவல்லியைச் சந்தித்துப் பேசியது முதலிய விஷ யங்கள் தோன்றலாயின.

மதுரைநாயகம் இந்நிலையில் அங்கு இருக்கும்போது துப்பறியும் செல்வநாதனும் அங்கே வந்து சேர்ந்தான். அவன் மதுரைநாயகத்தைப் பார்த்து, "என்ன ஐயா!

என்னநேர்ந்தது. ஏதோ உளவு அகப்படும் சம்பவம் நடந்திருப்பதுபோல் காணப்படுகிறது'' என்றான். அதற்கு மதுரைநாயகம், ''ஆமாம், இன்றேல் நான் இவ்வளவு அவசரமாக உன்னை அழைத்திருக்க மாட்டேன். சருக்கமாகக் கூறவேண்டுமாயின் என் தந்தை சம்பந்தமான எல்லா விஷயங்களும் ஒரு நெருக்கடியான நிலைமைக்கு வந்திருக்கிறது'' என்று பதில் கூறினான்.

செல்வநாதன், ''அது எப்படி? சிறிது சுருக்கமாக வேணும் விவரத்தைக் கூறும். அப்போதுதான் நான் விஷயங்களை ஒழுங்காக அறிந்து கொள்ளலாம்'' என்றான். அப்போது அவன், ''நான் இன்று மாலை ஒரு பிரத்யேக வேலையாக இளவரசனைக் காணவந்தேன். அப்போது நான் ஒரு தனியறையில் சிறிதுநேரம் உட்கார்ந்திருக்கவேண்டி யிருந்தது. அப்போது அங்கே ஒரு கிழிந்துபோன கடிதத்தைக் கண்டேன். ஆனால் கையெழுத்துள்ள பாகம் கிழிந்துபோயிருந்தது. எனினும் நான் அதிலிருந்த விஷயத்தைப் படித்தேன். அக்கடிதம் எழுதியவள் இளவரசருடன் அந்தரங்கமான நெருங்கிய சம்பந்தமுடையவளாய் இருக்கவேண்டும். அவள் மிகவும் துக்ககரமான வாழ்க்கையை நடத்தி வருவதாக அதில் கூறியிருக்கிறாள், அவள் இப்போது இளவரசனைக் காண வருவதாக அதில் அறிவித்திருக்கிறாள். ஆகவே நான் வெளியே வந்ததும் இங்கேயே நின்றுகொண்டு உனக்குச் சொல்லி யனுப்பினேன்'' என்று கூறினான்.

செல்வநாதன்:—நீர் சொல்லியனுப்பியது சரியான வேலைதான். ஆனால் அம்மாது இப்போது எங்கே இருக்கிறாள்.

மதுரைநாயகம்:—அவள் இப்போது இந்த மாளிகையில்தான் இருக்கிறாள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

பத்து அடித்துச் சொற்பநேரத்துக்குப் பிறகு ஒரு நடுத்தர உயரமுள்ள மாது தன் தேகம் முழுதையும் மூடிக்கொண்டு முகமும் தெரியாதபடி முகமூடி யணிந்து இவ்வழியே நடந்து சென்று பிரத்யேக வாயிலின் வழியே அரண்மனையில் புகுந்தாள். அவள் ஒரு பெரிய வீட்டு மாது என்பதில் சந்தேகமில்லை. அவள் நடையும், கம்பீரத்தோற்றமும் அவள் பெரிய அந்தஸ்துள்ள குடும்பமாது என்றே தெரிகிறது.

செல்வ:—அப்படியானல் அவள் இப்போது அரண்மனையில் இருப்பதாகவா கூறுகிறீர்?

மதுரை:—ஆம்; அவள் அரண்மனையில்தான் இருக்கிருள். அவள் இளவரசனிடம் அதிக நெருங்கிய சம்பந்தமுடையவளாய் இருப்பதால் நீண்டநேரம் இருந்து பல விஷயங்களைப் பேசலாம்.

செல்வ:—நீர் சொன்னபடியே இந்த விஷயம் மிக்க நெருக்கடியானதாக இருக்கிறது. அந்த மாது யாராயிருந்தாலும் இளவரசனுடன் இவ்வளவு நெருங்கிய சம்பந்தம் வைத்திருப்பதால் இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கும். எப்படியிருந்தாலும் நாம், அவள் யார், அவளுடைய இரகசியங்கள் என்ன, என்பனவற்றைக் கண்டுபிடிக்க வேண்டியதுதான். அவளை விடாமல் இரவும் பகலும் பின்தொடர வேண்டியதாய் இருக்கிறது. அவள் செயல் ஒவ்வொன்றையும் கவனிக்க வேண்டும்.

மதுரை:—ஆம்; நீ கூறுவதை நான் ஒப்புக்கொள்கிறேன். இச்சிறிய ஆதாரத்தைக்கொண்டே அவளைக் கைது செய்ய முடியாதாகையால் மற்றும் பல விஷயங்களைக்

கண்டுபிடிக்கும் பொருட்டு அவளைப் பின்தொடர வேண்டியதுதான்.

செல்வ:—மேலும் அவள் உங்கள் தந்தையுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தாள் என்பதற்காகவே அவரது கொலையிலும் அவள் சம்பந்தப்பட் டிருக்கிறாளெனக் கூறிவிட முடியாது. அவளைப்பற்றி நாம் இப்போது தெரிந்துகொண் டிருப்பதி லிருந்தே அவள்மீது எத் தகைய குற்றத்தையும் சுமத்திவிட முடியாது.

மதுரை:—நீ கூறுவது வாஸ்தவந்தான். இம்மாது என் தந்தையைக் கொலை செய்யவில்லை என்றாலும் அது விஷயமாக ஏதேனும் அறிந்திருப்பாள் என்றும் நினைக்க இடமில்லாமலிருக்கிறது. என்றாலும் அவள் இப்போது இவ்வழியே அரண்மனையில் நுழைந்த போது எனக்கும் தெரியாமலே என் தேகம் முழுவதும் நடுங்கியது.

செல்வ:—நீர் அதையே மனதில் நினைத்துக்கொண் டிருப்பதால் அப்படித்தோன்றி யிருக்கலாம். அதுகிடக்கட்டும் இப்போது என்னை அழைத்து வரும்படி நீர் அனுப்பிய மனிதன் யாரென்பது உங்களுக்குத் தெரியுமா?

மதுரை:—அதென்ன விசேஷம்? எனக்கு அவனைப்பற்றி ஒன்றும் தெரியாதே. யாரோ ஏழை என்றும், சொற்ப பணம் கொடுத்தாலும் திருப்தியுடன் வேலை செய்வானென்றும் நினைத்தேன்.

சேல்வ:—அவன் பெயர்பெற்ற போக்கிரி. அவன் ஒரு முறை என் கையிலிருந்து தப்பித்துக் கொண்டான். மற்றொருமுறை அகப்பட்டுக் [illegible] அவனை எப்படியேனும் அழுத்தி [illegible].

186558

மதுரை:—நீ இவ்வளவு தூரம் சொல்வது யாரைப்பற்றி! எனக்கு ஆச்சர்யமா யிருக்கிறதே.

செல்வ:—நீர் இப்போது என்னை அழைத்து வரும்படி தெரியாமல் அனுப்பிவிட்ட ஒரு ஆளைப்பற்றியே இவ்வளவு தூரம் கூறுகிறேன். அவன்தான் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தூக்கிலிடுவோனாகிய மகா கொடிய தானப்பன்.

மதுரை:—ஆ! அப்படியா! அவன் பெயரைக் கேட்டமாத்திரத்தில் எப்படிப்பட்டவரும் சிறிது அஞ்சவேண்டியதாகத்தானே இருக்கிறது. அதிருக்கட்டும். உன்னிடம் சொல்லிவிட்டுத் திரும்பிவந்தால் மீண்டும் ஒரு பவுன் தருவதாகவும் சொல்லி யிருக்கிறேனே.

செல்வ:—ஆம்; அது விஷயத்தில் அவன் ஜாக்கிரதையாக இருக்கிறான். அவன் சன்மானம்பெற மீண்டும் இங்கு வருவதாகத் தெரிவித்தான். அவனுடைய தொடர்பு உமக்கு ஏற்படக்கூடாதென்னும் எண்ணத்துடன் நானே அவனுக்கு அந்த ஒருபவுனைக் கொடுத்துவிட்டு வரவேண்டாமென்று சொன்னேன். ஆனால் அவன் அதைக் கேட்கவில்லை. இங்கு வரப்போவதாகச் சொல்லி இருக்கிறான்.

மதுரை:—அப்படியானால் அவன் இப்போது எங்கே இருக்கிறான்.

செல்வ:—அதோ பாரும்! இத்தெருவின் ஆரம்பத்தில் கறுப்பு மனிதன் ஒருவன் மேலும் கீழும் நடந்து கொண்டிருக்கிறான்.

மதுரை:—அப்படியானால் இதோ இந்த ஒருபவுனைக்கொண்டு போய்க்கொடுத்து அவனை அங்கிருந்து அனுப்பிவிடு.

செல்வநாதனும் அப்படியே அதைக்கொண்டு அவனிடம் கொடுத்து, "இனிமேல் உனக்கு இங்கொன்றும் வேலையில்லை. நீ உன் வழியைப் பார்த்துக்கொண்டு போகலாம்" என்று கூறினான். அப்போது தானப்பன், "ஐயா, ஒருவார்த்தை. சுமார் ஒரு வருஷத்துக்குமுன் மாயமாய் மறைந்துபோனாரே அருமைநாதம்பிரபு அவருடைய குமாரன் மதுரைநாயகம் தானே அங்கே நிற்பவர்" என்று கேட்டான்.

அதற்கு செல்வநாதன், "ஆம்; நீ என் அதைக் கேட்கிறாய்" என்றுகேட்க அவன் சும்மா விஷயத்தைத் தெரிந்துகொள்ளக் கேட்டதாகச் சொல்லிவிட்டுத் தன் வழியைப் பார்த்துச் சென்றான்.

ஆனால் அவன் உண்மையில் அங்கிருந்து மறைந்துவிடவில்லை. அங்கு ஏதோ விசேஷம் நடக்கப்போகிறதென்பதை அவன் அறிந்துகொண்டு அங்கேயே எங்கேனும் மறைவில் நின்று அதைக் கவனிப்பதென முடிவுசெய்தான். இந்த விஷயத்தை அறியவேண்டுமென்னும் ஆவல் அவனுக்கிருந்ததுடன் செல்வநாதனையும் அவன் தன் ஜன்மவிரோதியாகக் கருதியதால் அவனுக்கு ஏதேனும் துன்புறுத்த சமயம் அகப்படுமா என்றும் எதிர்பார்த்தான்.

செல்வநாதன், தானப்பனை அனுப்பிவிட்டு மதுரைநாயகத்தினிடம் சென்று, "ஐயா, இங்கே இருவர் உலவிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. நீர் உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். ஆனால் அந்தமாது எந்த உடைகளை அணிந்துகொண்டிருந்தாள் என்பதைக் குறிப்பாக அறிவித்துவிடும். ஏனெனின் ஆள்மாறாட்டம் ஏற்பட்டுவிடக் கூடாதல்லவா? நீர் வண்டியில் ஏறிக்கொண்டு போகும்போது

என் வீட்டுக்குச் சென்று ஒரு ஆளை அனுப்பிவிட்டுச் செல் லுங்கள்'' என்று கூறினான்.

மதுரைநாயகமும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு அம்மாது என்ன உடையை அணிந்திருந்ததைக் கண்டானோ அதைப்பற்றி விவரமாகக் கூறிவிட்டுச் சென்றான். அப்படிச் செல்லும்போது செல்வநாதன் இப்போது அகப்பட்ட சந் தர்ப்பத்தை இழந்துவிடலாகாதென்றும், எப்படியேனும் அம்மாது யார்? அவளைப்பற்றிய உண்மை என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் அழுத்தமாகக் கூறினான். அதற்கு செல்வநாதனும், "ஐயா, உம்முடைய ஆவலை நான் அறிந்திருக்கிறேன். இப்போது என் வேலைகள் முடிந்ததும் எந்நேரமாயினும் நான் உம்மிடம் வந்து விஷயத்தைக் கூறி விட்டே செல்வேன். ஆதலின் நீர் எனக்காகக் காத்திருக்க லாம்'' என்று கூறினான்.

மதுரைநாயகம் சென்ற சிறிதுநேரத்துக்கெல்லாம் செல்வ நாதன் உலாவிக்கொண்டிருந்த அப்பக்கமாகப் பைத்தியக் காரனைப்போல் கந்தைகளை அணிந்துகொண்டு தட்டுத்தடு மாறிக்கொண்டே ஒருவன் வந்தான். அவன் செல்வநாதனைக் கண்டதும் அவர்களிருவரிடையே ஏதோ சமிக்ஞைகள் மிக விரைவில் நடந்தன. உடனே அந்தப் புதிய ஆள் செல்வநாதன் உலாவிக்கொண்டிருந்த இடத்துக்கு எதிரில் ஓரிடத்தில் பதுங் கிக்கொண்டு படுத்தான். அந்த மனிதன் யாரென்று நினைக் கிறீர்கள். மதுரைநாயகம் சொன்னதன்மேல் செல்வநாத னுடைய ஆட்கள் அவனை அவ்வாறு அனுப்பியிருக்கிறார்கள்.

அந்த இரவு சுமார் பன்னிரண்டு மணிக்குத் தெய்வ யானை இளவரசனுடன் இருந்து இன்பங்களையெல்லாம் அனுபவித்துவிட்டு அந்த அரண்மனையினின்றும் புறப்பட் டாள் என்பது நேயர்களுக்கு முன்னரே தெரிந்த விஷயம்.

அவள் வெளியே வரும்போது பழையபடி முகத்தையும் தேகத்தையும் போர்வையால் மூடிக்கொண்டதால் அவளுடன் பிறந்த சகோதரனே வந்தாலும் அவளுடைய அடையாளத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் இருந்த தென்றால் செல்வநாதன் அவள் யாரென எப்படிக் கண்டு பிடித்துவிட முடியும். ஆனால் மதுரைநாயகம் சொன்ன அடையாளங்களும் உடைகளும் அவளிடம் காணப்பட்டதால் அவன் தெரிவித்தமாது அவளே என நிச்சயித்துக் கொண்டு அவளைப் பின்தொடர ஆரம்பித்தான். ஆனால் அவள் அதைக் கண்டுகொள்ள முடியாதபடி அவ்வளவு தூரத்தில் பின் தொடர்ந்தான். அவள் பற்பல தெருக்களையும் தாண்டிச்சென்று சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குச் சென்று கதவைத் தட்டியதைக்கண்டதும் செல்வநாதனுக்கு ஆச்சர்யம் அதிகரித்துவிட்டது. மேலும் அம்மாளிகையில் நுழைந்ததும் தன் முகமூடியை எடுத்துவிட்டதால் அந்த மாளிகையில் எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கின் பிரகாசத்தால் தான் நின்றிருந்த இடத்திலிருந்தே அவள் தெய்வயானையே என்று தெரிந்து கொண்டு விட்டான். அப்போதுதான் அவனுக்கு அளவுகடந்த ஆச்சர்யம் தோன்றியது.

உடனே அம்மாளிகையின் கதவும் மூடப்பட்டது. எனினும் செல்வநாதன் அங்கேயே திக்பிரமையுடன் நின்று ஜன்னல்களின் வழியாக ஏதேனும் தெரிகிறதா என்று பார்த்தான். அப்போது யாரோ ஒருவர் வந்து அவனைத் தொட்டதுபோல் தோன்றியது. திரும்பிப் பார்த்ததில் பிச்சைக்காரனைப்போல் வேடமணிந்து வந்த தன் ஆள் என்று தெரிந்ததும், "அடேயப்பா! உனக்கு தெய்வயானை அம்மாள் தெரியுமல்லவா? அவள் முன்பு ஒருமுறை சிறையிலிருந்த தன் கணவனைப் பார்க்கச் சென்றபோது நீ பார்த்

தாயே ஞாபகமில்லையா. அவள்மீதே நாட்டம் வை; அவள் எங்குசென்றாலும் அவளைப் பின் தொடர்ந்து செல். இது மிகவும் முக்கியமான வேலை. நாளை காலை நீ வந்துவிடலாம். நான் வேறு ஆளை அனுப்புகிறேன்'' என்று திட்டப் படுத்தினான்.

உடனே செல்வநாதன் நேராக மதுரைநாயகம் வீட்டுக்குச் சென்றான். அவனைக் கண்டதும் அவன் ஏதோ விஷயத்தைக் கண்டு பிடித்திருக்கிறான் என்பதை அவனது முகத்தோற்றத்தாலேயே மதுரை நாயகம் அறிந்துகொண்டு, "என்ன ஐயா! அவள்எங்கு சென்றாள் என்பதையும், அவள் யார் என்பதையும் கண்டு பிடித்தாயா?'' என்று மிக ஆவலுடன் கேட்டான். அதற்கவன், "ஆம், கண்டுபிடித்து விட்டேன். அவள் சுகசிங்கம் பிரபுவின் வீட்டில் வசிக்கும் அவருடைய சகோதரரின் புத்திரியாகிய தெய்வயானை அம்மாளே என்பதில் சந்தேகமில்லை.'' என்றான்.

அதைக்கேட்ட மதுரைநாயகம், "ஐயோ தெய்வமே! நீ சொல்வது உண்மையானால் நாம் மிக ஆபத்தான ஒரு மாதின் நடத்தையை யல்லவோ கண்டு பிடிக்கவேண்டும். அவள் தன் கணவனையே காட்டிக்கொடுத்து தூக்கு மேடைக்கு அனுப்பியவளாயிற்றே! ஐயோ, பயங்காம்'' என்று கூறினான். அதற்கு செல்வநாதன், "ஆமாம்; நீர் கூறியது வாஸ்தவந்தான். இது பயங்கரமான செய்தியே. ஆனால் அதற்காகவே அவள் இன்னும் பயங்கரமான காரியத்தையும் செய்தாளென அவள்மீது எப்படிப் பழிசுமத்த முடியும். ஆதலின் இப்போது நாம் இதற்குமேல் ஒன்றும் கூற முடியாது. அவளுடைய பழைய நடத்தையைப் பற்றியெல்லாம் விசாரிக்கவேண்டும். ஆ! அவள் கைப்பட தன் கணவனைப்பற்றி மாஜிஸ்ட்ரேட்டுக்கு எழுதிய கடிதம் இப்

போது என்னிடம் இல்லாமற் போய்விட்டதே. அவள் மிகக் கெட்டவள்தான்?'' என்று கூறிவிட்டு அவன் மதுரைநாயகத்தின் அனுமதிபெற்றுத் தன் இல்லம் சென்றான்.

இதற்கிடையில் தானப்பன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதைக் கவனிப்போம். செல்வநாதனிடமிருந்து ஒரு பவுன் சன்மானம் பெற்றதும் எங்கும் போய்விடாமல் அங்கேயே ஓரிடத்தில் மறைவாக இருந்து என்ன நடக்கிறதென்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான் என்று முன்னமே கூறியிருக்கிறோமல்லவா? அவன் அங்கிருந்துகொண்டே, போர்வையால் தன் தேகம் முழுதையும் மூடிக்கொண்ட ஒரு மாது இளவரசன் அரண்மனையில் பிரத்யேக வாயிலினின்றும் வெளிப்பட்டதையும், அவளைச் செல்வநாதன் பின் தொடர்வதையும், செல்வநாதனுடைய ஆளும் அவர்களுக்குப் பின்னால் செல்வதையும் கண்டான். எனினும் அவர்களுக்குத் தெரியும்படி அவனும் அவர்களைப் பின்தொடர தைரியமில்லாதவனா யிருந்ததால் அவர்களனைவருக்கும் தெரியாமல் அவர்களனைவரும் தன் கண்ணுக்குத் தென்படும்படி அவர்கள் பின்னாலேயே சென்றான். அம்மாது சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குச் சமீபத்தில் சென்றதும் தானப்பன் விஷயத்தைத் தெரிந்துகொண்டு தன் மனதிலேயே, "அவள் யாரென்பது தெரிந்துவிட்டது. மதுரைநாயகம்தான் அவள் இன்னாள் என்று அறிய விரும்புகிறான்போலும். அவன் சரியான ஆசாமியைக் கண்டுபிடித்துவிட்டான். ஆகவே நானும் என் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும்'' என்று சிந்தித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

தெய்வயானை தன் பெரிய தந்தையின் மாளிகையில் நாம் மேலே கூறியபடி புகுந்ததும் சுகசிங்கம்பிரபு ஏதோ ஒருகாரணத்தைக்கொண்டு குறிப்பிட்ட சிறு கூட்டத்தார்க்கு

விருந்து அளித்துக்கொண்டிருக்கிறார் எனத் தெரிந்து கொண்டாள். அங்கிருந்த சேவகர்கள் அவள் வரவைப் பிரபுவுக்கு அறிவிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவள் அதை விரும்பவில்லை. ஏனெனின் அவள் அயர்ந்துபோயிருந் தாள். இரண்டாவதாக அவள் விதவைக்கோலத்துடன் இல் லாததால் விருந்தினர் அவளைக்கண்டால் சிரிப்பார்கள்.மேலும் அவள் சொற்பகாலம்வரையேனும் இளவரசனிடம் தெரி வித்த காரணத்துக்காக இரகசியமாக வாழவிரும்பினாள். ஆகவே அவள் தனியான ஒரு அறையில் தனக்குமட்டும் தனியே சிறிது ஆகாரம் கொண்டுவந்து கொடுக்கும்படி சொல்லி அதைச் சாப்பிட்டுவிட்டுத் தன் படுக்கை யறைக்குச் சென்றாள். அதுமட்டும் அவளுக்காக எப்போதும் தயாராக இருக்கும்.

தன் படுக்கையறையில் அவள் நுழைந்ததும், சாதா ரணமாக ஒருவர் தன் பழைய நண்பர்களையும் பழைய இடத்தையும் கண்டால் எப்படி சந்தோஷ மடைவார்களோ அப்படியே சந்தோஷமடைந்தாள். அவள் தனியே இருந்து சில விஷயங்களைச் சிந்திக்க விரும்பியதால் அவள் தன் சேவ கர்களையெல்லாம் அனுப்பிவிட்டு அவ்வறையின் கதவை உட் புறம் தாளிட்டுக்கொண்டாள். அவள் தன் ஆடை ஆபரணங் களையெல்லாம் கழற்றி வைத்துவிட்டு மெல்லிய உடையை மட்டும் அணிந்து தன் தலையைச் சீவிக்கொள்வதற்காக அங் கிருந்த பெரிய நிலைக்கண்ணாடியின் முன் போய் நின்றாள். அக்கண்ணாடியில் தென்பட்ட அவளது பிரதிபிம்பத்தின் அழகே யழகு. அவளுடைய அங்கங்களும், முகமும் அவ் வளவு அழகாகக் காணப்பட்டன. தான் இளவரசனுடன் சந்தித்ததை நினைத்தபோது சந்தோஷப்பட்டபடியால், முகத் திலும் நல்ல ஒளி வீசிற்று. அவள் தான் அழகாயிருப்ப

தாகத் தானே நினைப்பதுண்டு. மேலும் இளவாசனுடைய காதல் தனக்கு இருக்கிறதென்பதை நினைத்த மாத்திரத்தில் அவள் உள்ளம் பூரித்தது.

ஆனால் கடவுளே! அவள் தன் உருவத்தை அக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டிருந்தபோது அதில் தன் உருவமட்டுமே யன்றி மற்றொரு விகாரத்தோற்றமுடைய ஆடவனின் உருவமும் காணப்படவே அவள் சந்தோஷமெல்லாம் திடீரென்று மறைந்தது. திடுக்கிட்டு நின்றாள். அவள் திரும்பிப்பார்த்ததும் எதிரில் மகாகொடிய தானப்பன் நின்றிருப்பதைக் கண்டு பீதியுற்று அசைவற்று நின்றாள்.

147 - வது அத்தியாயம்

தானப்பன் தன் எதிரில் மெல்லிய ஆடைகளுடன் நிற்கும் அழகிற்சிறந்த தெய்வயானையின் அங்கங்களையெல்லாம் ஆவல் நிரம்பிய கண்களால் கூர்ந்து நோக்கிக்கொண்டே சற்றுநேரம் மௌனமாக நின்றான். அவன் உண்மையில் கறுப்பாகவும் விகாரமாகவும் இருந்தானென்றாலும் உள்ளத்தில் காமவிகாரம் கொழுந்துவிட்டெரிந்ததாலும், அதற்கேற்றபடி காலமும் நிலைமையையும் ஒத்திருந்ததாலும் அவன் அவளை அப்படியே விழுங்கிவிடுபவன்போல் பார்த்தான். எப்படியாவது அவளிடம் தன் ஆவலைத் தீர்த்துக்கொண்டுவிடுவதெனத் தீர்மானித்துவிட்டான்.

அவன் அவளை அவ்வாறு பார்த்து நின்ற அந்த ஒரு நிமிஷத்தில் அவன் எதிரில் நின்ற தெய்வயானையோ அச்சத்தாலும் துயரத்தாலும் திடுக்கிட்டு அசைவற்று நின்றாள். உடனே அவள் தன் தேகத்தை வேறு ஆடையால் மூடிக்

கொண்டு அங்குள்ள மணியை அடிக்கப்போனாள். அப்போது அவன் திடீரென்று அவள்மீது பாய்ந்து அவளது தோள்மீது கையைப்போட்டு அவளைத் தன் விகாரரூபத்துடன் அணைத்துக்கொண்டு அவள் ஏதேனும் வாய்திறந்தால் ஆபத்து விளையுமென அச்சுறுத்தினான்.

அவள் தான் இப்போதிருக்கும் நிலைமையில் கத்தினால் தனக்கே அவமானமும் ஆபத்தும் உண்டாகு மென்பதை உணர்ந்து மெதுவாக, "கடவுள் ஆணையாக என்னை விட்டுவிடு" என்றாள். அப்போது அவன், "விட்டுவிடவா? முடியாது. நாம் சிறிதுநேரம் வேடிக்கைபேசி இன்பமாகக் காலங் கழிப்போம். நீ அமைதியுடன் இரு. நாம் பரஸ்பரம் நெருங்கிய சம்பந்தத்தை யடைவோம். இருவரும் மனம் விட்டுப்பேசி சிநேகிதர்களாவோம்" என்றான்.

தானப்பன் அவ்வாறு கூறிக்கொண்டே அவளை எதிரில் இருந்த ஒரு நாற்காலியில் உட்காரவைத்துத் தானும் மற்றொரு நாற்காலியை இழுத்துக்கொண்டு அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டான். உடனே அவன் மீண்டும் அவளைக் காமப்பார்வையுடன், அவளை அப்படியே தன் இஷ்டப்படி அனுபவித்து விடுபவனைப்போல் உற்று நோக்கினான். ஏதோ தன் எண்ணப்படி காரியத்தை முடித்துக் கொள்பவன்போல் சந்தோஷப்பட்டான்.

அப்போது அவள் சற்று தைரியமடைந்து, "நீ ஏன் என்னை இப்படித் தொந்தரவு செய்கிறாய்? ஏன் இப்படி என்னைப் பின் தொடர்ந்து வருகிறாய், என் பின்னாலேயே நீ அலைவதாகத் தெரிகிறது, ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அவன், "நான் இப்போது உன்னிடம் எதையெல்லாம் சொல்ல விரும்புகிறேனோ அதைச் சொன்னால் உடனே நீ என் காலில் விழுந்து இப்

படிப்பட்ட அவசியமான சந்தர்ப்பத்தில் நான் ஒரு நண்ப ஞக உனக்குச் சமயத்தில் உதவிசெய்ய வந்ததற்காக எனக்கு வந்தனம் கூறுவாய்'' என்று கூறினான்.

அவள் குற்றமுள்ள நெஞ்சினளாதலால் தானப்பன் அவ்வாறு கூறியதும் திடுக்கிட்டு, "நீ என்ன விஷயம் கூறு கிருய். நீ இப்போது சொன்னதன் அர்த்தமென்ன?'' என்று கேட்டாள். அதற்கு அவன், "என் அன்புள்ள மாதே! நீ என்னை உன் காதலனுகக் கொள்ளாவிட்டால் உன் இரகசியத்தை யெல்லாம் வெளிப்படுத்தி நீ சிறைக்குச் செல்லும்படி செய்து விடுவேன்'' என்று பயமுறுத்தினான். அவன் அவ்வாறு கூறியதைக் கேட்டதும் தெய்வயானை அவனுடைய சொற்களுக்காக மிக வருத்த மடைந்து துய ரத்துடன் நின்றாள். அவள் ஏதோ பேச விரும்பினாளென் ருலும் அவளால் பேச முடியவில்லை. அவள் முகம் வெளுத்துவிட்டது. அச்சத்தால் தேகம் முழுதும் நடுங்கி யது. தானப்பனை வெறுப்புடன் வெறிக்கப் பார்த்தாள்.

அப்போது அவன், "நீ ஏன் பயப்படுகிருய். நீ என் னைச் சினேகப் படுத்திக்கொண்டால் எப்படிப்பட்ட ஆபத்தி னின்றும் நீ தப்பிவிடலாம். நான் உன்னைக் கைகொடுத்துக் காப்பாற்றுவேன். ஆனால் நீ என் இஷ்டப்படி நடக்கவேண் டும். இவ்வளவுதூரம் ஏன்? நான் உண்மையைச் சொல்லு கிறேன்கேள். உன்னை இளவரசன் அரண்மனையிலிருந்து இதுவரை மதுரைநாயகமும், செல்வநாதனும் பின் தொடர் ந்து வந்தார்கள்'' என்று கூறினான். உடனே அவள் அப் படியே மூர்ச்சையாய் சித்த ஸ்வாதீனமிழந்து நாற்காலியில் சாய்ந்தாள்.

தானப்பன் அவளைக்கண்டு, "அதைரியப்பட்டு அஞ் சாதே, தப்பித்துக்கொள்ள சௌகரியமும் சாவகாசமும்

இருக்கிறது. நான் நடந்த முழுவிவரத்தையும் சொல்கிறேன் கேள். நான் இளவாசர் மாளிகையின் பக்கமாக இன்றிரவு சுமார் பத்துமணிக்கு ஏதோ வேலையாக வந்துகொண்டிருந்த போது அம்மாளிகையின் பின்புறத்திலுள்ள பிரத்தியேக வாயிலின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த அழகும் பெருந் தன்மையும் வாய்ந்த ஒரு இளைஞன் என்னை நிறுத்தி, உடனே நான்போய்த் துப்பறியும் செல்வநாதனை அழைத்து வந்தால் ஒருபவுன் தருவதாகச் சொல்லி அதைக் கையிலும் கொடுத்தான். நான் சாதாரணமாக ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் நல்ல உடையும் கட்டி வழக்கமில்லையாத லால் என்னை அவன் யாரோ ஒரு பிச்சைக்காரப் பையல் என்று நினைத்துவிட்டான்போ லிருக்கிறது. அவன் தன் பெயர் மதுரைநாயகம் என்று சொல்லிக்கொண்டான். இதில் ஏதோ விசேஷமிருக்கிறதென்று நினைத்துச் செல்வநாதனை அழைத்து வந்தபிறகும் நான் எங்கும் போய்விடாமல் தூர மறைந்து நின்று விஷயத்தைக் கவனித்தேன். சற்று நேரத் துக்கெல்லாம் மதுரைநாயகம் போய்விட்டான். அந்த இடத் தில் செல்வநாதனுடைய ஆள் ஒருவன்வந்தான். அவர்களிரு வரும் அங்கே காத்துக்கொண்டிருந்தபோது, ஆ! நான் என்ன சொல்வேன். ஒரு அழகியமாது தன் தேகத்தையெல் லாம் போர்வையால் மூடிக்கொண்டு இளவாசன் மாளிகையி னின்றும் வெளியே வந்தாள்'' என்று கூறினான்.

அதைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு, "ஆ! அப்படி வந்தவள் நான்தான். பிறகு என்ன நடந்தது சொல்; சொல்'' என்று மிகுந்த அவசரத்துடன் கேட்டாள். எதிரில் உட்கார்ந் திருப்பவன் தன்னால் வெறுக்கப்பட்டவன் என்பதையும் மறந்து தன் உயிரே அவனிடம் இருப்பதுபோல் நினைத்துப் பணிவுடன் பேசினாள்.

அதற்கு அவன், "நீ அவ்வளவு ஜாக்கிரதையாக மூடிக் கொண்டிருந்தபடியாலும், விதவைக் கோலத்துடன் இல்லாமலிருந்ததாலும் நீதான் என்று அறிந்துகொள்ள என்னாலும் முடியவில்லை. பிறகு செல்வநாதனும் அவன் ஆளும் உன் தொடர்ந்ததுபோலவே நானும் அவர்களுக்கும் தெரியாமல் உன்னைத்தொடர்ந்து வந்தேன். ஆனால் நீ இந்தத்தெருவில் திரும்பியதும் நீயார் என்பது எனக்கு விளங்கிவிட்டது. மேலும் ஒரு வருஷத்துக்குமுன் மதுரைநாயகத்தின் தந்தை மறைந்துபோனதையும் இப்போது அவர்கள் உன் பின்னால் திரிவதையும் நினைத்ததும் நான் அன்று பள்ளத்தோட்டத்தின் மாளிகையின் பின்னால் புதைத்த அந்தப்பிரேதம் அருமைநாதன் பிரபுவினுடையதே என்றும் நிச்சயித்தேன்" என்றான்.

தெய்வயானை இனி தனக்கு என்ன ஆபத்துகள் வரும் என்பதை ஒருவாறு யூகித்துக்கொண்டவளாய், "ஓஹோ! என்னைப் பின்தொடர்ந்து வருவதானால் நான் எங்கேனும் ஓடிப்போய் மறைந்து கொள்வதைத்தவிர வேறு வழியில்லை. ஆகவே நான் உடனே ஓடி ஒளியவேண்டும்" என்று அச்சத்துடன் பிதற்றினாள். அப்போது தானப்பன், "நான் சொல்லுகிறபடி நீ கேட்டால் எதற்கும் பயப்படவேண்டியதில்லை. நான் அன்று புதைத்தபிரேதம் அருமைநாதம் பிரபுவினுடையது என்று நான் நினைக்கவேயில்லை. ஆனால் இப்போது மதுரைநாயகமும் செல்வநாதனும் உன் விஷயத்தை அறிய உன்பின்னால் திரிவதால் எனக்கு இப்போது விஷயம் தெரிந்தது. நீ என்னுடன் சிநேகம் செய்துகொண்டு என்னைத் திருப்திசெய்தால் நான் உன்னை இந்த ஆபத்தினின்றும் காப்பாற்றுவேன். இப்போது செல்வநாதன் வீட்டுக்குப் போய்விட்டான். அவனுடைய ஆள்மட்டுமே தெருவில் காவல் காத்துக்கொண்டிருக்கிறான்.

தெய்வயானை:—அப்படியானால் நான் இப்போது சிறைப்பட்டவள் போலும். எனக்குக் காவல் போட்டுவிட்டார்களே! ஐயோ என்னசெய்வேன்.

தானப்:—அப்படி யொன்றும் பயப்படாதே. வெளியில் போவதற்கு எவ்வளவோ வழி இருக்கிறது. அந்த வழியால்தான் நான் இம்மாளிகையில் நுழைந்து குறிப்பாக உன் அறையில் வந்து புகுந்துகொண்டேன். செல்வநாதன் போய்விட்ட பிறகு அங்கு ஒன்றும் அதிசய சம்பவம் நடந்துவிடாதாதலால் நானும் இங்கு வந்துவிட்டேன். செல்வநாதன் எப்படியாவது உன்னைப் பிடித்துவிடுவான். அவன் இப்போது பலருடன் யோசனை செய்யச் சென்றிருப்பான்.

தெய்வ:—நான் சுகசிங்கம்பிரபுவின் சகோதரருடைய புத்திரியாகவும் இளவரசருக்கு மிகவும் வேண்டியவளாகவும் இருக்கிறேனே. அப்படிப்பட்ட என்னையுமா அவன் கைதுசெய்யத் துணிவான்.

தானப்:—உன்னைக் கைதுசெய்வதா அவனுக்குக் கஷ்டம்? அவன் யாரையும் லட்சியம் செய்யமாட்டான். அவன் தன் கடமையைச் செய்வதில் நோக்கமுடையவன். உன் கணவனை ஒரு நிமிஷத்தில் பிடித்துவிடவில்லையா?

தெய்வ:—துப்பறியும் சிங்கமாகிய அச்செல்வநாதன், தன் தந்தையே குற்றவாளியாய் இருந்தால் அவனையும் பிடித்துவிடக்கூடிய அவ்வளவு நேர்மையான சுபாவமுடையவன. ஆனால் இப்போது நாம் செய்யவேண்டியதென்ன? நீ எனக்கு இப்போது என்னயோசனை கூறுகிறாய்.

தானப்:—தப்பித்துக்கொண்டு எங்கேனும் சென்று தலை மறைவது தவிர வேறுவழி யில்லை.

தேய்வ:—தப்பிப்போவதா? சரிதான் அப்படியானால் எங்கேனும் ஓடிப்போவோம்; வா.

தானப்:—உடனே ஓடிப்போக முடியுமா? இம்மாளிகையில் உள்ளவர்களெல்லாம் நன்றாகத் தூங்கட்டும். சத்தம் ஓய்ந்தபிறகு போவோம்.

தேய்வ:—நீ எப்படி இம்மாளிகையில் நுழைந்தாய்?

தானப்:—மாளிகையின் பின்புறத்தில் காலியான சாதாரண வீடு ஒன்றிருக்கிறது. அதன்மீது ஏறிக்கொண்டால் வீட்டின் மெத்தைமீதுள்ள வாசலில் வந்துவிடலாம். பிறகு இதோபார். என்னிட பலவகைச் சாவிகளும், சிறு கட்டப்பாரையும் இருக்கிறது. இதன்மூலம் எப்படிப் பட்ட கதவையும் ஜன்னலையும் திறந்துவிடுவேன். எவ்வளவோ இடங்களில் திறந்திருக்கிறேன்.

தேய்வ:—அப்படியானால் என்னையும் அந்தவழியே அழைத்துச்செல்லப் பார்க்கிறாயா? சுவர்மீது ஏறிக்குதிக்க என்னால் முடியுமா?

தானப்:—வேறு வழி யில்லையே, என்னசெய்வது? செல்வநாதனுடைய ஆள் வெளியில் காவல் காத்துக்கொண்டிருக்கிறான். நீ முன் வாயிலின்வழியே சென்றால் அவன் உன் தலைமீது ஒரு குட்டுகுட்டி உன்னைப் பிடித்துக்கொள்வான் என்பது திண்ணம்.

தேய்வ:—ஐயோ கடவுளே! அப்படியானால் என்னசெய்வது? என் பாடு பெரும் கஷ்டமாக இருக்கிறதே. நான் என் பெரிய தந்தையைப் பார்த்தாவது அவரிடம் என் கஷ்டங்களைச் சொல்லிக்கொள்ளவேண்டும். அல்லது உடனே இளவரசரிடம் சென்று அவர் மூலமாவது பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும்.

தானப்:—ஆயிரம் பெரிய தந்தைகளும் இளவரசர்களும் வந்தாலும், செல்வநாதனைத் தன் கடமையைச் செய்வதி

னின்றும் தடுக்க அவர்களாலும் முடியாது. ஆகவே இன்னும் ஒருமணி நேரத்துக்குள் என்னுடன் வந்து தப்பித்துச்கொள்வதே சரியான வழி.

இதைக்கேட்ட தெய்வயானை, அவன் கூறுவதுதான் சரியானவழி என்று உணர்ந்தாலும், அவன் செய்யப்போகும் அவ்வுதவிக்காக அவன் தெய்வயானையிடமிருந்து எதிர்பார்க்கும் விலையைக் கவனிக்கும்போது அவளுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. அவள் கற்புநெறி தவறியவளே என்றாலும் கேவலம் தானப்பன் போன்ற விகாரரூபமும் கொடிய குணமும் வாய்ந்தவர்களிடம் அவள் தன் மானத்தை இழக்க வேண்டுமென்றால் அவளுக்கு மனம் வருமா? எந்தக் காரியத்தைச் செய்தாலும் மனம் ஒப்பவேண்டாமா? ஆகவே அவள் தானப்பன் இஷ்டத்துக்குச் சம்மதிப்பதைவிட உயிரைத்துறப்பதே மேல் என்று சிந்தித்து அப்படியே ஆசனத்தில் சாய்ந்து, "இல்லை, இல்லை, முடியாது, முடியாது" என்று தனக்கும் தெரியாமலே தலையை அசைத்தாள்.

அவள் மனதில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாள் என்பதை ஒருவாறு யூகித்து அறிந்துகொண்ட தானப்பன் ஆத்திரமடைந்து, "அப்படியானால் நான் இங்கே காத்துக்கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம். நான் உடனே போய்விடுகிறேன். போகும்போது வழியில் செல்வநாதனுடைய ஆளிடம், உன்னை உடனே கைதுசெய்து விடும்படியும், இல்லாவிட்டால் நீ எங்கேனும்போய் மறைந்து விடுவாய் என்றும் தெரியப்படுத்திவிட்டுப் போவேன்" என்று கூறிக்கொண்டே அவ்வறையின் கதவை நோக்கிச்சென்றான். உடனே அவள் அவன் பின்னேயே சென்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "வேண்டாம்; என்னை இவ்வாறு அழித்து விடாதே" என்று கூறினாள்.

உடனே அவளைத் திரும்பிப்பார்த்து, "அப்படியானால் இன்னமும் அநாவசியமாகத் தாமதம் செல்யாதே. வீண் சங்கடங்கள் உண்டாக்காதே. அன்றிரவு நகரின் வெளிப் புறத்திலுள்ள பாலத்தினடியில் நீ என்னைக் கொல்ல முயன் றதையும் நான் மறந்துவிட்டு இப்போது உனக்கு உதவி செய்ய வந்திருப்பதால் நீ உடனே என் இஷ்டப்படி இணங்குவதற்கென்ன? இதை நீ யோசித்தாயா?" என்று கேட்டான். அப்போது அவள் தன் ஆபத்தான நிலைமை களையெல்லாம் நன்றாக ஒன்றன்பின் ஒன்றாக நினைத்துப் பார்த்து மனமுடைந்து மெய்சோர்ந்து திக்பிரமையுடன் "ஐயோ கடவுளே! என்கதி யாதாகுமோ?" என்று வாய் விட்டலறிக்கொண்டே அழுகையுடன் ஸ்மரணை தப்பித் தன் ஆசனத்தில் விழுந்தாள்.

ஆனால் சொற்பநேரம் கழித்து ஸ்மரணைபெற்றுப் பார்க் கும்போது தான் அவ்வறையிலிருந்த கட்டிலின்மீது படுத் திருப்பதையும் பக்கத்தில் அக்கொடிய தானப்பன் இருப் பதையும் கண்டாள். சொற்பநேரம் தன் கண்களையே தான் நம்பவில்லை. அங்கிருந்த விளக்கு வெளிச்சத்தில் தன் நிலை மையைக்கண்டு வருந்தினாள்; இனி தற்கொலை செய்து கொள்வது தவிர வேறு வழியில்லை என்பதையும், கண்டு கொண்டாள். இனி நாம் இதைப்பற்றி அதிகமாக வர்ணித் துக்கொண்டிருப்பதில் பயனில்லை. அவள் கேவலம் தானப்ப னிடமும் தன் மானத்தை இழந்தாள் என்று மனமறிய அறியும்படி அக்கொடிய அயோக்கியன் அவள் மூர்ச்சை யாக இருக்கையில் தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விட்டான் என்று மட்டும் கூறி முடித்துவிடுவதே போதும்.

இவ்வாறு துயரமடைந்த தெய்வயானை ஒருவாறு சமா ளித்துக்கொண்டு அப்படுக்கையினின்றும் எழுந்து தன்

ஆடையை ஒழுங்கு படுத்திக்கொண்டு அருகிலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து தன் முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொண்டு ஆழ்ந்த துக்கக்கடலி மூழ்கி உயிரைத்துறந்த பிரேதத்தைப்போல் சற்றுநேரம் அமர்ந்திருந்தாள். அவள் இவ்வாறு விசாரத்துடன் உட்கார்ந்திருந்தபோது, "இம் மாதிரி காலத்தைப் போக்காதே. உடனே புறப்படு" என்னும் ஒரு சத்தம் அவள் காதில் விழவே திடுக்கிட்டு எழுந்தாள்.

அவள் மிக்க ஆத்திரத்துடன், "போதும்; போதும், உன் தொல்லே. போ வெளியே" என்று மிக உக்கிரமாகச் சொன்னதுடன் அவள் சிவந்த கண்களும், கோபத்தால் நடுங்கமுறும் தேகமும் கண்டவர்க்கு அச்சத்தை விளைவிப் பதா யிருந்தது. ஆகவே தானப்பனும் சற்று பீதியடைந்து, "நான் போய்விட்டால் நீ எப்படித் தப்பித்துக் கொள்வாய்?" என்று கேட்டான்.

அப்போது அவள் வெறுப்புடனும் படபடப்புடனும், "உன்னுடன் வந்து தப்புவதைவிட தூக்குமேடையில் ஏறிச் சாவதே நல்லது. ஆகையால் நீ வெளியே போ" என்று கூறியதுடன் கையால் கதவைக்காட்டி போகும்படி ஏவி னுள். அவன் பிடிவாதமாக, "முடியவே முடியாது. உன்னே இவ்வளவு கஷ்டத்தில் நான் விட்டுச் செல்லமாட்டேன். நீ என்னுடன் வந்தே தீரவேண்டும்" என்ருன்.

அதைக்கேட்ட தெய்வயானே இன்னும் உக்கிரமாக, "ஏன் உன் மனைவியாக இருப்பதற்கு உன்னுடன் வர வேண்டுமா, உன் கூட்டாளிகளும் நீயும் வாழும் ஆபாச மான இடத்துக்கா என்னே வரும்படி சொல்கிருய். உயிர் போனாலும் போகட்டும். நான் அங்கே வரமாட்டேன். அங்கே வந்துவிட்டால் இப்போது இருப்பதைவிடக் கேவல

மான நிலைமையில் அல்லவா உன் தயவை நாடிக்கொண்டிருக்க நேரிடும். உன்னுடன் வருவதைவிடப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கேனும் செல்லலாம். ஆகையால் வர முடியாதென்று ஆயிரம்முறை சொல்கிறேன். எனவே நீ வெளியே போ" என்று கட்டளையிட்டாள். அவள் அவ்வாறு கூறும்போது அவளுடைய தோற்றம் பயங்கரமானதாக இருந்தது. கோபாவேசம் கொண்ட வீரக்காளியின் தோற்றம்போல் காணப்பட்டது. ஆதலின் மகா கொடிய தானப்பனும் சிறிது பக்குவமாகவே நடந்துகொள்ள வேண்டியதாயிற்று.

148 - வது அத்தியாயம்

தெய்வயானை அவ்வளவு கோபத்துடன் வெளியே போகும்படி கட்டளையிட்டும் தானப்பன் சிறிதும் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவள் கோபம் மிகப் பொல்லாததாயும் பயங்கரமானதாயும் இருந்தும் அவன் வெளிச் செல்லவில்லையென்றால் அதற்கு அவன் கொண்டிருந்த ஏதோ எதிர்பாராத நம்பிக்கையே காரணமாகும். இச்சமயத்தில்தான் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று அவன் முடிவு செய்துகொண்டுவிட்டான். இன்னும் சற்றுநேரம் கழித்தாவது அவள் தன் னிஷ்டப்படி செய்வாள் என்றும் நம்பினான். அவளை விட்டுச் செல்லவே அவனுக்கு மனம் வரவில்லை. ஆகவே அவளை வெறிக்கப் பார்த்து நின்றான்.

அப்போது, சற்றுநேரத்துக்குமுன் அக்கொடிய தானப்பனது முத்தங்களுக் கிடமாயிருந்த தெய்வயானையின் வாயி

னின்றும் மிக்க ஆத்திரமாக, "நான் சொன்ன வார்த்தைகள் உன் காதில் விழவில்லையா? நீ அக்கட்டளைக்குக் கீழ்ப்படிகிறுயா இல்லையா?" என்னும் சொற்கள் வெளிப்பட்டன.

அதற்குத் தானப்பன், "மாதே! நான் உண்மையைச் சொல்லுகிறேன். நான் உன்னைவிட்டுச் செல்லமாட்டேன். உன்னைப்போன்ற ஒரு அழகிய மாது தூக்கிலிடப்படுவதை நான் சகியேன். என் கையால் உன்னைத்தழுவி அணைத்துக்கொண்டேன். அதே கையால் உன்னைத் தூக்கிலேற்ற என்னுல் முடியாது. நீ இங்கே இருந்தால் தூக்கிலிடப்படுவாய் என்பது நிச்சயம். ஆகவே நீ எங்கேனும் ஓடிப்போனுல்தான் தப்பமுடியும். ஆ! தூக்குமேடையில் சாவது மிகப் பரிதாபமான விஷயம். நான் பல மரணங்களைக் கண்டிருப்பதால் அதைப்பற்றி அதிகம் அறிவேன்," என்று கூறினுன்.

நேயர்காள்! ஒருவன் நல்ல இருட்டில் நடுராத்திரியில் தன்படுக்கையினின்றும் வெறுங்காலால் நடக்கக் கால் எடுத்து வைக்கும்போது அங்கு ஒரு பாம்பு படுத்திருந்து அதன்மீது வைத்ததாக வைத்துக்கொள்வோம். உடனே அவன் அச்சத்தால் கதறி மற்றொருபுறம் தன் காலைவைக்க முயல்கிறுன். அங்கும் ஒரு பாம்பு அப்படியே படுத்திருக்குகிறது. இவ்வாறு அவன் கால்வைக்கு மிடங்களிலெல்லாம் வழவழவெனப் பாம்புகள் படுத்திருப்பதாக இருந்தால் அவன் என்னதான் செய்வான் பாவம். அப்போது அவனுடைய மனோநிலை எப்படி இருக்குமென்று நினைக்கிறீர்கள். அவ்வாறே தானப்பன் சொன்னவிஷயங்களைக் கேட்ட தெய்வயானையின் மனோநிலையும் இருந்தது. அவள் என்னசெய்வாள் பாவம்! நாற்புறங்களிலும் அவளுக்குத் தொல்லை. ஒருபக்கம் தானப்பன் கொடுமை. மற்றொருபுறம் தூக்கு

தண்டனை. ஆகவே அவள் ஒன்றும் தோன்ருமல் துயரக் கடலில் மூழ்கி சற்றுநேரம் சிந்தனையிலிருந்தாள். தன் மன தில் திடீரென்று தோன்றி ஏதோ ஒரு புதிய எண்ணத்தால் சற்று உற்சாக மடைந்தவளேபோல் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். அப்போது அவர்களிருவரிடையே பின்வரு மாறு சம்பாஷணை நடந்தது:—

தெய்வ:—எனக்கு உதவி செய்யவேண்டுமென்பது உன்னுடைய உண்மையான எண்ணமா?

தானப்:—ஆம்; என்மீது ஆணையாக நான் சொல்கிறேன்? உதவி செய்யவேண்டுமென்று உண்மையாகவே விரும்புகிறேன்.

தெய்வ:—நான் தப்பித்துச் செய்வதில் உதவிபுரிவாயா. ஆனல், நீ கூறியபடி சுவர்கள்மீது ஏறியும், குதித்தும், தாண்டியும் வர என்னல் முடியாது.

தானப்:—அப்படியானல் உனக்கு வேறு நல்ல வழி தெரியும்போ லிருக்கிறது. அவ்வழியே வர எனக்கொன்றும் ஆட்சேபமில்லை.

தெய்வ:—ஆம்; இம்மாளிகையினின்றும் வெளியே செல்வதற்கு வேருெரு பிரத்யேக வழியும் இருக்கிறது.

தானப்:—அவ்வாருயின் சரி! எப்படியாவது இம்மாளிகையின் முன்புறத்துக்குப் போகாமல் போனல் சரிதான். அப்படியானல் உடனே புறப்படுவதுதானே. வீணுக ஏன் தாமதம் செய்யவேண்டும்.

தெய்வ:—இம்மாளிகையில் இருக்கும் சிலரகசிய அறைகளில் புகுந்து நாம் செல்லவேணடும். அவ்வறைகளைக்கடக்கும் போது நாம் மிக ஜாக்கிரதையாகப் போகவேண்டும்.இப்போது மணி இரண்டு. விருந்தினர்களெல்லாம் போய்

விட்டார்கள். வீட்டிலுள்ளவர்களும் நன்ருகத் தூங்குகிருர்கள். ஆதலால் இதுவே ஏற்ற சமயம். ஆனல் ஒரு நிமிஷம் இரு. இதோ புறப்படுவதற்கு சித்தமாகிறேன்.

இவ்வாறு கூறிக்கொண்டே தெல்வயானை தன் ஆடைகளையும் ஆபரணங்களையும் ஒழுங்காக அணிந்து கொண்டாள். பிறர் மனதைக் கவரும் வண்ணம் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். வீட்டில் அனைவரும் நன்கு உறங்குகிருர்களா என்று சிறிதுநேரம் உற்றுக் கவனித்தாள். வாசனை சாமான்கள் இருக்குமிடம் சென்று சொற்ப வாசனைகளையும் பூசிக்கொண்டாள். உடனே தானப்பனை நோக்கி புறப்படு என்ருள்.

அவர்களிருவரும் சந்தடி செய்யாமல் மெதுவாக அடி மீது அடிவைத்து நடந்தார்கள். படுக்கை அறையிலிருந்து ஆடைகளை அணிந்து கொள்வதற்காக என்று ஏற்பட்ட அறைக்கும் அங்கிருந்து மற்ருெரு படுக்கையறைக்கும் அதிலிருந்து இயந்திர வசதிகளுடைய நாற்காலிகளடங்கிய அறைக்கும் சென்ருர்கள். அந்த அறை தானப்பனுக்கும் நன்ருகத் தெரியும். ஏனெனின் அவன் இதற்குமுன் இரு முறை அங்கே வந்திருக்கிருன். ஒருமுறை அவன் தெரியாமல் அதில் உட்கார்ந்துவிட்டு அகப்பட்டுக் கொண்டபோது அங்கே வந்த தெய்வயானையும் இளவரசனும் அவனை விடுவித்தார்கள். இரண்டாவது முறை மதனவல்லியை சுகசிங்கம்பிரபுவின் கொடுமையினின்றும் தப்புவிப்பதற்காக சர்தார் சூரியநாயகத்தால் நியமிக்கப்பட்டபோது வந்தான். ஆகவே அவன் அந்த அறையில் புகுந்ததும் அதையெல்லாம் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு, "ஓ! இவைகளெல்லாம் பழையபடியே இருக்கின்றன. நாம் இப்போது எந்த வழி செல்லவேண்டும். இன்னும் அப்பாலுள்ள படங்களையெல்

லாம் நீ கண்டால் அப்போது உனக்கு என்மீது ஒருவிதமான காமம் எழும்'' என்றான்.

அப்போது தெய்வயானை, "பேசாதே! சத்தம்செய்ய வேண்டாம். நாம் மெதுவாக இக்கட்டடம் விட்டுப்போய் விட்டால் பிறகு எப்படியும் பேசலாம். நீ முதலில் அவ் வழியே அடுத்த அறைக்குச்செல். நானும் பின்னால் வருகின் றேன்'' என்றாள். அவனும் அவள்மீதுள்ள ஆசையால் அவ் வாறே ஒப்புக்கொண்டு முன்னே சென்றான். அவன் இயந் திர நுட்பங்களடங்கிய நாற்காலிகள் பக்கமாகச்சென்றபோது, பின்னாலிருந்த அவள் திடீரென்று, எதிர்பாராத பலம்பெற் றுத் தன் முழுச்சக்தியுடன் அவனைப்பிடித்து அந்த நாற் காலிகள்மீது தள்ளினாள். ஆகவே அவன் அதன்மீது விழுந் ததும் "கிளிக்'' என்று சத்தம் கேட்டது. அகப்பட்டுக் கொண்டான் பாவம் தானப்பன்! ஆக்வே அவன் அவளது அடிமையானான். உடனே அவள் விளக்கையும் அணைத்து இருட்டுமய மாக்கினாள்,

அவள் அவனைக் கண்டு பரிகாசச்சிரிப்பு சிரித்தாள். தான் வெற்றியடைந்ததற்காகத் தனக்குள்ளேயே சந் தோஷப்பட்டாள். அப்போது அவன், "இவ்வாறு ஏமாற்று வதால் என்ன பிரயோசனம். என்னை விடுவித்துவிடு'' என்று அழுதான். அதற்கு அவள், "என்ன பிரயோசனமா? உனக் குத் தக்க தண்டனையை விதித்தேன். நான் உன் குற்றத்தை யெல்லாம் மன்னித்திருப்பேன். ஆனால் இன்றிரவு நீ என்னை மானபங்கப் படுத்தியதைமட்டும் மறக்க என்னால் முடியாது. அதனால் என்தேகம் முழுதும் விஷமாகவல்லவோ எனக்குத் தோன்றுகிறது. ஆகவே நான் தற்கொலை செய்துகொண் டாவது இறந்துவிடவே விரும்புகிறேன். ஆயினும் அப்படி இறப்பதற்குமுன் உன்னைப் பழிவாங்கிவிட விரும்பினேன்.

அப்பழிவாங்குவதையும் இதோ தீர்த்துவிட்டேன். நீ இங்கேயே பசியாலும் பட்டினியாலும் தாகத்தாலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகவேண்டும்'' என்று கூறினாள்.

அதற்கு அவன் மிக்க கோபத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு, "நீ பெண்ணா பேயா? உன்னை நான் எவ்வளவுக் கெவ்வளவு காதலித்தேனோ அவ்வளவும் இப்போது வெறுக்கிறேன்'' என்று கூறினான். அதைக்கேட்ட அவள், "காதல் என்னும் பரிசுத்தமான வார்த்தையை உன் வாயால் உச்சரித்து அதையும் அசுத்தப்படுத்த வேண்டாம். நீ இதிலேயே இரண்டொருநாள் இருந்து பசிதாகத்துடன் அவஸ்தைப்பட்டுக் குற்றுயிராய் கடைசியில் யாரேனும் வந்து உதவி செய்யவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்துக் கொள். அப்படி உன் பிரார்த்தனை கேட்கப்படாவிட்டால் நீ இன்றிரவு தெய்வயானைக்கு இழைத்த கொடுமைக்கு இதுவே தண்டனை என்று நினைத்துக்கொள்,'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

தெய்வயானை இவ்வாறு கூறியதைக் கேட்ட தானப்பன் அதிக ஆச்சர்யமும் அதைரியமு மடைந்து தன் நிலைமைக்காகத் தானே வருந்தினான். வெளிச்சமிருந்து அவளுடைய முகம் தெரிந்தாலும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளலாம். அதுவுமில்லை. ஆகவே அவன் பயங்கரமான விசாரத்தில் மூழ்கிப் பேசாமல் மௌனமாக இருந்தான்.

அப்போது அவள் மீண்டும், "உன் கொடிய குணத்துக்கு உன்னை என்னசெய்தாலும் பாதகமில்லை. நானே ஒரு கத்தியைக்கொண்டு உன்னுடைய கறுப்பான மார்பில் குத்திக் கொல்வேன். ஆனால் அப்படிச் செய்தால் நீ சீக்கிரத்தில் சுகமாக இறந்துவிடுவாய். அது கூடாது. நீ மிகவும் கஷ்டப்படவேண்டும். உன் அவயவங்கள் ஒவ்வொன்றாகச்

செத்துப் பிறகு நீ சாகவேண்டும். அதுவே உனக்கு ஏற்ற தண்டனை,'' என்று சிறிதும் பரிதாபமின்றிக் கூறினாள்.

அவன், "ஏ பேயே பிசாசே நீ எனக்கு எமனாக வாய்த் தாயா? ஆனால் நீ என்மீதுள்ள வெறுப்பால் புத்தியையுமா இழந்துவிட்டாய். இவ்வளவு ஜனங்கள் நிரம்பியிருக்கும் இவ்வீட்டில் நான் கூச்சல் போட்டால் யாரேனும் வந்து என்னை விடுவிக்கமாட்டார்களா? இது என் உனக்குத் தெரியாமற்போயிற்று?'' என்று கேட்டான். அதற்கு அவள், "ஓ! அப்படி யொன்றுமில்லை. இச்சுவர்கள் ஒருவித விசித்திரமுடையவை. என்னதான் கத்தினாலும் வெளியில் கேட்காது. நீ அழுதாலும் சரி அல்லது கூச்சல்போட்டுக் கத்தினாலும் சரி எதுவும் இவ்வறையை விட்டு வெளியில்போகாது. நீயேதான் கேட்டுக்கொள்ளவேண்டும். ஆகவே நீ கத்துவதால் எத்தகைய பயனும் விளையாது,'' என்று தெரிவித்தாள்.

அப்போது தானப்பன் மிகுக்த கோபத்துடன், "அப்படியானால் நானே என் பலத்தைக்கொண்டு இந்த நாற்காலியை முறித்துப் போட்டு இயந்திரத்தைத் தூள்தூளாக்கி நான் என்னை விடுவித்துக் கொள்ளமாட்டேனா?'' என்று கூறிக்கொண்டே நாற்காலியினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளத் தன்னாலியன்றதை யெல்லாம் செய்தான். ஆனால் அதை அசைக்கவும் அவனால் முடியவில்லை.

அதைக்கண்ட தெய்வயானை, "என்ன ஐயா! உன் முயற்சியெல்லாம் என்ன ஆயிற்று? தப்பித்துக்கொண்டாயா? உன் ஜபம் ஒன்றும் செய்யாது. நீ என்னதான் தலையை முட்டிக்கொண்டாலும் நீ இதிலேயே இருந்து சாகவேண்டியதுதான். இதோ நான் போகிறேன்'' என்றாள். அப்போது தானப்பன், "கொலைகாரியே! என்னைக் கொல்வதால்

மட்டும் நீ தப்பித்துக்கொள்ள முடியாது. நீ தூக்குமேடை மீது ஏறவே நேரிடும்'' என்று கூறினான். அவள் ஒன்றும் பதில்கூறவே இல்லை. உடனே அவ்வறையின் கதவைச் சாத்திக்கொண்டுபோன சத்தம் தானப்பனுக்குக் கேட்டது. பாவம்! தானப்பன் தனியாக பயங்கரமான இருட்டில் கொடிய வேதனையில் அகப்பட்டுக்கொண்டான். அவன் கொடுமைகளுக்கு அவனுக்குத் தண்டனை கிடைக்காமற் போகுமா?

இப்போது நாம் அவ்வறையினின்றும் புறப்பட்ட தெய்வயானையைப் பின் தொடர்வோம். அவள் நேராகத் தன் படுக்கையறைக்குச் செல்லவில்லை. கீழ்கட்டுக்குச்சென்று தெருச்கதவை மெதுவாகத் திறந்துகொண்டு முகமூடியையும், போர்வையையும் அணிந்து அம் மாளிகையி னின்றும் வெளியே புறப்பட்டாள். வெளியில் அப்போது இருட்டாகவே இருந்தது. ஆனால் தெருவில் போடப்பட்டிருந்த விளக்கின் வெளிச்சத்தால் அங்கே பிச்சைக்காரனைப்போல் ஒருவன் மேலும் கீழுமாக உலாவிக்கொண் டிருப்பதைக் கண்டாள். அவள் வெளியே வந்ததும் அவனும் திடீரென்று நின்று அவளை உற்று நோக்கினான். அவள் சிறிதும் அச்சமின்றி அவன் நின்ற பக்கமாகவேபோய் அவன் சமீபத்தில் சென்றதும், ''நீ யார் என்பதை நான் அறிவேன், நீ ஏன் இங்கு இருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியும். வேண்டுமாயின் நான் செல்லுமிடத்துக்கு நீயும் பின் தொடரலாம்'' என்று கூறினாள்.

அதைக்கேட்டதும் துப்பறியும் இலாகா உத்தியோகஸ்தனுக்கு ஆச்சர்யம் அதிகரித்து விட்டது. அவள் போகும் போக்கில் அந்த உத்தியோகஸ்தனால் எந்த விஷயமும் கண்டு பிடிக்க முடியாத விதமாக அவள் நடந்து கொள்

வாள் என்று அவனுக்குத் தோன்றியது. தெய்வயானேயோ அவ்வாறு கூறியதும் சிறிது நேரமும் நிற்காமல் வேகமாக நடக்கத் தொடங்கினுள். அவள் அருமைநாதம் பிரபுவின் வீட்டுக்குச்சென்று அதன் கதவைத் தட்டினுள். அப்போது பின்னுல் ஏதோ சத்தம் கேட்டது. என்னவென்று பார்த்ததில் ஒரு மனிதன் நின்றிருந்தான். அது அந்த துப்பறியும் உத்தியோகஸ்தனே என்று அறிந்து கொண்டாள். அவள் கதவுதட்டிய சிறிது நேரத்துக்குப் பிறகு ஒரு ஆள் கதவைத் திறந்து கொண்டுவந்து யாரென்று விசாரித்தான்.

அவள், மதுரைநாயகம் பிரபு வீட்டில் இருக்கிருரா? என்று விசாரித்தாள். அதற்கு அவன், "ஆம், இருக்கிறுர். ஆனுல் இந்நேரத்திலா அவரைப் பார்ப்பது?" என்று கேட்டான். அவன், அம்மாது யாரோ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று மட்டும் தெரிந்து கொண்டான். அதற்கு அவள், "இந்நேரத்தில் இங்கு வந்ததும் அவரைக் காண விரும்புவதும் விபரீதமாகவே இருக்கிறதென்பதை நானும் அறிவேன். ஆனுலும் நான் உடனே அவரைக்கண்டு பேச வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே நான் அவரும் செல்வநாதனும் இன்றிரவு மேற்கொண்ட வேலை சம்பந்தமாக வந்திருப்பதாக அவரிடம் தெரிவித்துவிடு" என்று கூறி அனுப்பினுள்.

அந்த ஆள், அவள் யாரென்பதையும், எதற்காக வந்தாள் என்பதையும் தெரிந்துகொள்ளாமலும் அவளை அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு அறைக்கு அழைத்துச்சென்று ஒரு ஆசனத்தில் உட்காரவைத்து அங்கு ஒரு விளக்கையும் ஏற்றிவிட்டு அவள் வந்திருக்கும் சங்கதியைத் தன் எஜமானனிடம் தெரிவிக்கப் போனுன்.

அவன் வெளியே சென்றதும் தெய்வயானை அவ்வறையைச் சுற்றிப் பார்த்ததில் அங்கே ஒரு பெரிய படத்தைக்

கண்டாள். அது ஒருவருஷமாக மாயமாய் மறைந்துபோன அருமைநாதம் பிரபுவின் படம். அது சமீபத்தில் தான் எழுதப்பட்டதாகவும், உயிருள்ளதைப்போலும் தோன்றியது. உடனே தெய்வ்யானையின் மனம் அப்படியே அனலிடைப் பட்ட மெழுகுபோல் உருகியது. ஏனென்றால் அவளுக்கும் அப்பிரபுவுக்கும் ஏற்பட்ட காதல் கள்ளக்காதலே என்றாலும் அவள் அவரை உண்மையில் மிக்க அன்புடன் நேசித்தாள். உடனே அவளுக்கு முன்னே நடந்த காரியங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவர் அநியாயமான முறையில் இறந்துபோனது ஞாபகத்துக்கு வரவே அவள் அப்படியே ஸ்மரணை தப்பி நின்றாள். ஆனால் ஒன்றிரண்டு நிமிஷங்களுக்குள் மதுரைநாயகம் உள்ளே வந்த காலடி சத்தத்தால் அவளும் உணர்ச்சி பெற்றாள்.

சேவகன் அவனிடம், தன் பெயரைச் சொல்லாத ஒரு மாது அவனுடன் பேச வந்திருக்கிறாள் என்று சொன்னபோது மதுரைநாயகம் படுக்கையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கவில்லை. அவன் தன் படுக்கையறையில் இருந்தான் என்பது வாஸ்தவமேயாயினும் அன்றிரவு நடந்த சம்பவங்களையெல்லாம் பற்றிச் சிந்தித்துக்கொண்டே ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான். சேவகன் வந்து தகவலைத் தெரிவித்ததும் தனக்காக வந்த அம்மாது தெய்வயானையாகவே இருக்கவேண்டுமென்று நிச்சயித்தான். ஏனெனின் அப்போது அவனும் அவளைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். மேலும் அந்தநோத்தில் அதிலும் தானும் செல்வநாதனும் மேற்கொண்ட ஒரு காரியத்தைப்பற்றிப் பேசத் தன்னைக்காண வரக்கூடியவள் அவளே என்று உணர்ந்தான். ஆகவே அவன் உடனே எழுந்து வந்துவிடாமல் அவளுடன் என்னபேசுவது? எப்படிப்பேசுவது என்பவைகளைப் பற்றிச் சிந்தித்துவிட்டு மெதுவாக வந்தான்.

மதுரைநாயகம் துக்க முகத்துடனும், மெதுவாக அடி மேல் அடிவைத்தும், ஆர்ப்பாட்டமில்லாமலும், அடக்கமாகவும் தெய்வயானை காத்திருந்த அறையில் வந்தான். அவளை எவ்வளவோ முறை பல இடங்களில் பார்த்துப் பேசியிருக்கிறான். அவனது தந்தைக்கும் அவளுக்கும் சம்பந்தமிருந்த போதும், அது அவனுக்குத் தெரியாமலிருந்ததால் அவளுடன் அவன் களங்கமற்ற தன்மையில் பேசியிருக்கிறான். ஆகவே அவளைக்கண்டதும் அவன் அறிமுக மற்றவன்போல் இல்லாமல் தெரிந்தவன்போல் நடந்துகொண்டான். அவளும் தன் முகமூடியை எடுத்தாள். அவள் சமீபத்தில் ஏதோ ஆபத்துக் காளானவள்போல் முகம் பிரகாசம் குன்றியிருந்தது.

அவனைக் கண்டதும் தெய்வயானை மிக்க அடக்கத்துடனும், துக்கத்துடனும், "நான் என் இங்கு வந்தேன் என்பது உனக்குத் தெரியுமா? கடவுள் சாட்சியாக என்மீது எப்படிப்பட்ட அபவாதத்தையும் கற்பித்து விடாதே. பல பெண்களைப்போல் நானும் கற்புநெறி தவறியவளே. ஆயினும்" என்றாள். இதற்குள் மதுரைநாயகம் ஆத்திரத்துடன், "தெய்வயானை சீமாட்டியே! என் தந்தை இறந்துவிட்டாரா என்பதை ஒரே வார்த்தையில் சொல்லிவிடு" என்று கேட்டான்.

அதற்கு அவள், "ஐயோ கடவுளே! ஆம், இறந்துவிட்டார்" என்று சொல்லிவிட்டு ஓவென்று கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தாள். அருமைநாதம் பிதாவின் படத்தைப் பார்த்ததுமுதல் அவளுக்குண்டான துக்கமே இப்போது அழுகையாக வெளிப்பட்டுவிட்டது. அதைக்கேட்ட அவன் "ஐயோ, செத்துப்போனாரா" என்று அழுதுகொண்டே தனக்குத் தெரியாமல் அவளது கரத்தைப் பிடித்துக்

கொண்டு, "அவர் எப்படி அத்தகைய மாணத்தை அடைந்தார் என்பதை விவரமாகச் சொல்லு" என்று கேட்டுக்கொண்டான்.

அப்போது அவள் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு விவரமாகக் கூறும் எண்ணத்துடன், "ஐயா! என்மீது சந்தேகங் கொள்ள வேண்டாம். நான் என் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றதில் அவருக்கு அந்த கதி ஏற்பட்டது. உன் தந்தையை நீ இழந்ததற்கு நானே காரணமென்றாலும் கொலைசெய்த பழியை என்மீது சுமத்த வேண்டாம். ஏனெனின் அவரை நான் அவ்வளவு அதிகமாக நேசித்திருக்கிறேன். அவரும் என்னை அன்புடன் நேசித்தார். ஆகையால் என்மீது சந்தேகங்கொள்வது தகாது. எனினும் நீ என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறிய போது கண்ணீர் வடித்தாள்.

அதைக்கண்ட மதுரைநாயகம் மனம் இளகியவனாய், "நான் சந்தேகங் கொண்டதால் உன் மனம் நொந்திருக்குமாயின் நான் உனனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமே தவிர நீ என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை" என்றான். அப்போது அவள், "மீண்டும் அப்படிப்பட்ட சந்தேகத்துக்குச் சிறிதும் இடம் தரவேண்டாம்" என்று கூறிக்கொண்டே மதுரைநாயகத்தின் கையைப்பிடித்து அருமைநாதன் பிரபுவின் படத்தின் எதிரில் அழைத்துச் சென்று, உயிருடன் இருப்பதுபோலத் தோன்றும் அதன் முன் நின்று, "இறந்துபோன ஆனால் உயிருடன் இருப்பது போன்ற அவரது படத்தின் முன்னிலையிலும், தெய்வசாட்சியாகவும் உன் தந்தையின் கொலையில் நான் சம்பந்தப்படவில்லை என்று சத்தியம் செய்கிறேன்" என்றாள்.

அப்போது அவன் உண்மையிலேயே அவளிடம் நம்பிக்கை கொண்டு, "சீமாட்டியே! நான் உன்னை நம்புகிறேன்.

எனக்குத் திருப்தியாய்விட்டது. எனினும் அவர் மாணம் சம்பந்தமான முழு விவரத்தையும் அறியவேண்டுமென்னும் ஆவல் எனக்கு அதிகமாக இருப்பதால் அதைச் சொல்லும் படி நான் மீண்டும் கேட்பதற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும்'' என்றான்.

“அக்கடமையைச் செய்யவே இப்போது நான் இங்கே வந்தேன்'' என்று கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, எதிரில் தொங்கிக்கொண்டிருந்த அருமைநாதம் பிரபுவின் படத்தைப் பார்த்து மனம் உடைந்துகொண்டே விவரம் கூறலானாள். மதுரைநாயகமும் எதிரில் ஒரு ஆசனத்தமர்ந்து அவள் கூறியதைக்கேட்க ஆரம்பித்தான். அவன் எவ்வளவு கவனமாகக் கேட்டிருப்பான் என்பதுபற்றி நாம் கூறவேண்டியதில்லை. தன் தந்தை எப்படி தெய்வயானையின் மாடிமீது நூலேணி வழியே ஏறிவந்தார் என்பதும், உடனே தெய்வயானையின் கணவனாகிய தேவராயன் வீட்டுக்கு வந்துவிட்டதும், எப்படி அவர் ஸ்நானத் தொட்டியில் மறைந்து கடைசியில் அங்கேயே உயிரைவிட்டார் என்பதையும் அவள் சொல்ல அவன் கவனமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டான்.

அப்போது அவள், “மதுரைநாயகம் பிரபுவே! காலஞ்சென்ற பிரபுவின் குமாரர் என்னும் முறையில் அவருடைய நடத்தையைப்பற்றி இப்போது நீ ஆராயவேண்டாம். ஆனால் முக்கியமாக நீயும் ஒரு மனிதன் என்னும் முறையில் அவருடைய பெருந்தன்மையையும், பிறரைக் காட்டிக்கொடாமலிருந்த சிறந்த குணத்தையும் நீ பாராட்டாமலிருக்கமுடியாது. அவரை ஸ்நானத் தொட்டியில் அடக்கிவிட்டு அதன்மீது பல பேழைகளையும் பெட்டிகளையும் வைத்தபோது தனக்கு உயிர்போகுமே என்பதை அறிந்திருந்தும் சிறிது மூச்சுவிட்

டாலும் அதைத் தெரிந்துகொண்டு என் கொடிய சுபாவ முடைய கணவன் என்னைக் கொன்றுவிடுவானே என்று நினைத்து என் மானத்தைக்காக்கவே அவர் தம் உயிரைத் துறந்தார். ஆ! என்னே பெருந்தன்மை! நான் அவரை எவ் வளவு அதிகமாக நேசித்தேன் தெரியுமா?'' என்று தொடர்ந்து கூறினாள்.

இடையில் சொற்பநேரம் இருவரும் பேசாமல் இருந் தார்கள். அதற்குக் காரணம் மதுரைநாயகம், தன் தந்தை யையும், அவர் காலஞ்சென்ற விதத்தையும் நினைத்து அழுது கொண்டிருந்தான். தெய்வயானையும் அப்போது அருமை நாதம் பிரபுவைக் காதலித்த காலத்தில் தான் எவ்வளவு பரி சுத்தமா யிருந்ததையும் இப்போது கேவலம் கொள்ளைக்கார னும் கொலைகாரனுமான தானப்பனுடைய தழுவதலுக்கும் ஆளாக நேரிட்ட தன் நிலைமையையும் நினைத்து நினைத்து வருந்தினாள். தான் செய்த பாவங்களுக்கெல்லாம் தண்டனை யாகத்தான் அன்றிரவு நடுநிசியில் அப்பாதகனுடைய ஆவலைத் தீர்க்கநேரிட்டது என்பதையும் உணர்ந்தாள்.

இவ்வாறு இருவருமாகச் சொற்பநேரம் இருந்தபின்னர் தெய்வயானை தான் சொல்லவேண்டியதைச் சொல்ல ஆரம் பித்து, ''ஐயா! வெளிதேசத்துக்கு என்னை அழைத்துச் சென்ற என் கணவன் தேவராயன் திடீரென்று ஏதோ அவ சரமாகத் தான் மட்டும் தனியே இரத்தினபுரிக்கு வந்தபோது எப்படியோ ஸ்நானத் தொட்டியை எடுத்து அதிலுள்ள பிரே தத்தைப் பார்த்து அது யாருடைய பிரேதமென்பதையும் தெரிந்துகொண்டான். உடனே அவன் அங்குவந்ததும் என்னைப் படாதபாடு படுத்திவிட்டான். வேண்டுமென்றே என்னைப் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணத்துடன்

என் கணவனே என்னை உடனே இரத்தினபுரிக்கு அழைத்து வந்து அப்பிரேதத்தை என் கையால் எடுக்கும்படி செய்து பிறகே புதைக்க ஏற்பாடுசெய்தான். அதிகம் பேசுவானேன். பள்ளத் தோட்டத்திலுள்ள அம்மாளிகையின் தோட்டத்தில் தோண்டப்பட்ட குழியில் உன் தந்தையின் பிரேதமும், அவர் ஏறிவந்த பட்டு நூலேணியும் இருக்கின்றன. என் கணவன் செய்த தொந்தரைகளையெல்லாம் கவனித்தால் தண்டிக்கப்பட்டுவிட்டேன் என்பதையும் நீ அறிவாய்,'' என்றாள்.

மதுரைநாயகம்:—ஆம்; நீ கூறுவது சரிதான். நீ உன் கணவனிடம் சொல்லொணுத் துயரத்தை அடைந்திருப்பாய் என்றும் தெரிகிறது. ஏனெனின் அவனைச் சர்க்காரிடம் நீ தானே காட்டிக் கொடுத்தாய். அவன் உனக்கு இழைத்த கொடுமைகளுக்காக அவனைப் பழிவாங்கவே நீ அவ்வாறு செய்திருப்பாய் என்பது நிச்சயம்.

தெய்வயானை:—ஓ! கையெழுத்தில்லாமல் ஒரு கடிதம் போட்டேனே, அது வெளியாய் விஷயம் தெரிந்து விட்டதுபோலும்! ஆம்; நான் அவ்வளவு கொடிய காரியத்தையும் செய்யத் துணிந்தேனென்றால் அதற்கு ஒருமாதாகிய நான் பழிவாங்க வேண்டுமென்று விரும்பியதேயாகும். அப்படி விரும்பியதற்கும் அக்கணவன் என்பவன் எனக்கிழைத்த கொடுமைகள் பலவாய் இருந்ததே காரணமாகும்.

மதுரை:—தெய்வயானை சீமாட்டியே! நான் நீதிபதியல்ல. நீ உன் கணவன் விஷயமாக நடந்து கொண்டது பற்றி ஆராயவேண்டிய அவசியமும் எனக்கில்லை. ஆகவே அதைப்பற்றி இப்போது நாம் பேசவேண்டாம். என்

தந்தையின் மாணத்தைப் பற்றியவரையில் இனி நாம் செய்ய வேண்டியதென்ன என்று கவனிப்போம்.

தேய்வ:—என் சம்பந்தப்பட்டவரையில் நான் உண்மையாக நடந்த விஷயங்களைக் கூறிவிட்டேன். இனி என்ன வந்தாலும் அனுபவிக்கத் தயாராய் இருக்கிறேன். இதற்குமேல் நான் என்னசெய்ய முடியும்?

மதுரை:—என் தந்தையின் கொலைவிஷயத்தில் உன்மீது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதென்பது உனக்கு எப்படித் தெரியும்.

தேய்வ:—இன்றிரவு என்னைச் சிலர் பின் தொடர்வதையும் என்மீது சந்தேகப்படுவதையும் கண்டேன். ஆகவே நான் பயந்து போனேன். உன் தந்தையின் மாணத்தில் எனக்கு எத்தகைய சம்பந்த மிருக்கிறதென்ருலும் நான் அவரை வேண்டுமென்றே கொல்லவில்லை என்பதுமட்டும் நிச்சயம்.

மதுரை:—அது விஷயமாக நீ கூறியதை நான் நம்புகிறேன். என் தகப்பனுர் கதி இப்படி முடிந்ததென்பதைப் பல காரணங்களுக்காக வெளிப்படுத்த நான் விரும்பவில்லை. முதலாவதாக, உன்னிடம் எனக்கு எத்தகைய வெறுப்பும் துவேஷமும் இல்லை. ஆதலின் அநாவசியமாக உன்னை அவமானப்படுத்தவோ அல்லது துன்பத்திற்காளாக்கவோ நான் விரும்பவில்லை. இரண்டாவதாக என் தந்தையைப் பிறர் இகழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது எனது கடமை. ஆகவே இதை நான் நிரந்தரமாக மறைத்து விடவே முயலுகிறேன். ஏனெனின், இவர், தன் சிநேகிதனுடைய மனைவியைக் கெடுத்து விட்டார் என்னும் பழி அவர்மீது விழுமல்லவா? ஆகவே இதை நாம் மூடி வைக்கவேண்டும். ஆத

வின் இப்போது நாம் இதைப்பற்றி துப்பறியும் செல்வ நாதனுடன் ஆலோசிக்க வேண்டும்.

தெய்வ:—அப்படியே செய்வோம். செல்வநாதன் இந்த விஷயம் முழுவதையும் பொதுவிசாரணைக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னாலும், உண்மையில் நடந்த விஷயங்களைச் சொல்லி அதற்காக ஏற்படும் தண்டனைகளையும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்.

மதுரை:—அம்மையே! நீ சொல்லும் விவரத்தை நான் பூரணமாக நம்புகிறேன் என்று முன்னமே கூறினேன் அல்லவா? ஆனால் என் தந்தையிடம் நான் செய்யவேண்டிய கடமைக்காக நீ சொல்வது உண்மை என்பதை நிரூபிப்பதற்காக அப்பிரேதத்தைச் சோதனை செய்ய விரும்புகிறேன். செல்வநாதன் இவ்விஷயத்தைப் பொது நீதிஸ்தலத்துக்கு இழுத்துச் சென்றாலும் உனக்கு உபாயமாகத்தான் தண்டனை விதிப்பார்கள். ஆனால் செல்வநாதனும் இதைப் பொது விசாரணைக்கு எடுத்துச்செல்ல விரும்ப மாட்டான்.

உடனே மதுரைநாயகம் தன் கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்து அப்போது விடியற்காலை மணி நான்கு என்று தெரிந்து கொண்டான். எனினும் அம்மாதைப் பார்த்து, "நாம் இப்போது உடனே செல்வநாதனிடம் செல்லவேண்டும். ஆனால் உன்னைப் பார்த்தால் இரவெல்லாம் விழித்துக் கொண்டிருந்து பல கஷ்டங்களை அனுபவித்தவள்போல் தெரிகிறது. இதனால் உனக்குச் சிரமமாக இருக்கலாம்" என்றான். அதற்கு அவள், "பாதகமில்லை. அப்படியே செல்வநாதனிடம் உடனே செல்வோம்" என்று கூறிக் கொண்டே தன் முகமூடியையும் மேற்போர்வையையும் அணிந்தாள். இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

149 - வது அத்தியாயம்

மறுநாள் காலை சுமார் எட்டுமணி இருக்கும். அப்போது முன்பு தேவாாயனும் தெய்வயானையும் வசித்த பள்ளத்தோட்ட மாளிகையின்முன் இரண்டு குதிரைகள் பூட்டிய பெரிய வண்டி ஒன்றுவந்து நின்றது. தேவராயன் அதைக் காலிசெய்தது முதல் அம்மாளிகையில் யாரும் குடித்தனம் வாாததால் அது காலியாகவே கிடந்தது. அதன் சாவி பக்கத்து மாளிகையில் இருந்தபடியாலும், அம் மாளிகையின் சொந்தக்காரர் செல்வநாதனுக்குச் சினேகிதராக இருந்ததாலும், அதை யாரோ வாடகைக்கு வரப்போகிறவருக்குக் காண்பிப்பதாகச் சொல்லி அதன் சாவியைச் செல்வநாதன் கொண்டுவந்தான். வண்டி அம்மாளிகையின் முன் நின்றதும் முதலில் செல்வநாதன் முன்புறத்திலிருந்து இறங்கினான். பின்னர் பின்புறத்திலிருந்து மதுரைநாயகமும் இரண்டு டாக்டர்களும் இறங்கினார்கள். பிறகு மதுரைநாயகம் கைகொடுத்து தெய்வயானையை இறக்கினான். செல்வநாதன் வண்டிக்காரனிடம் அவன்போய் இரண்டு அல்லது மூன்றுமணி நேரம் கழித்துவாலாம் என்று கூறியதும் அனைவரும் அம்மாளிகையில் நுழைந்தனர். அவர்கள் அம்மாளிகையின் தோட்டத்தில் சென்றதும் அங்கே இருவர் கடப்பாரை, மண்வெட்டி முதலிய ஆயுதங்களுடன் அப்புதை குழியைத் தோண்டக் காத்திருந்தார்கள். அவர்களிருவரும் செல்வநாதனால் முன்னதாக அனுப்பட்டவர்கள். அவர்கள் தோட்டத்தின் சுவர் ஏறி உள்ளே குதித்துக் காத்திருந்தார்கள்.

மதுரைநாயகமும் தெய்வயானையும் முதலில் சென்றார்கள். இரு டாக்டர்களும் செல்வநாதனும் பின்னால் மெதுவாகச் சென்றனர். அப்போது தெய்வயானை மிகவும் துக்கத்துடன் இருந்ததாலும், கண்ணீர் வடித்துக்கொண்டிருந்ததாலும் அவள் எளிதில் நடக்கக் கஷ்டப்படுவாளென நினைத்து, மதுரைநாயகம் பெருந்தன்மையுடன் அவள் தன் கையைப் பிடித்து நடக்கலாமெனக் கூறித் தன் கையை நீட்டினான். ஆனால் அவள் அதை மறுத்துவிட்டாள். தெரிந்தோ தெரியாமலோ அவ்வாலிபனுடைய தந்தையின் மரணத்துக்குத் தான் காரணமாய் இருக்கும்போது அதே வாலிபன் தன்னிடம் நேசப்பான்மை காட்டுவதும் அதை அவள் பெறுவதும் தர்ம விரோதமானது என்று உணர்ந்தாள்.

அவள் ஒருவாறு தட்டுத்தடுமாறி நடந்துகொண்டே அப்புதைகுழி இருக்குமிடம் சென்றாள். அப்போது அவள் உண்மையில் மனம், தேகம் ஆகிய இரண்டிலும் சோர்வடைந்துவிட்டாள். ஏனெனின் முன்னாள் இரவு முழுதும் அவள் விழித்துக்கொண்டிருந்ததுடன் பலவகையான கஷ்டங்களுக்கெல்லாம் ஆளானாள். தன் காரியத்தைத் தான் சாதித்துக் கொள்ளவேண்டுமென்னும் உறுதியே அவளை நடக்கச்செய்தது. அவள் மாளிகையில் பலநாள் வசித்ததாலும், தோட்டத்தில் எல்லா இடங்களும் நன்றாகத் தெரியுமாதலாலும் தன் கள்ளக் காதலன் புதைபட்டுக் கிடக்கும் இடத்தை எளிதில் காண்பித்தாள்.

உடனே அங்கு காத்திருந்த ஆட்களும் அந்த இடத்தில் தோண்ட ஆரம்பித்தார்கள். டாக்டர்களில் ஒருவர் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் மதுரைநாயகம், தெய்வயானை, மற்றொரு டாக்டர், செல்வநாதன் ஆகியவர்களுடன் மாளிகையில் சென்றான். அம்மாளி

கையில் சென்ற அவர்கள் ஒவ்வொரு அறையாகக்கடந்து கடைசியில் ஸ்நானத்தொட்டி இருந்த அறைக்குச் சென்றார்கள். அங்கு எல்லாம் அப்புறப் படுத்தப்பட்டிருந்தது. எனினும் ஸ்நானத்தொட்டி அமைக்கப்பட்டிருந்த இடம் நன்றாகத் தெரிந்தது. அதைப் பார்த்தமாத்திரத்தில் தெய்வயானை அதிக அதிர்ச்சி யடைந்து அப்படியே பக்கத்திலிருந்த சுவரின்மீது சாய்ந்தாள். மதுரைநாயகமும் தன் தந்தை உயிர் துறந்த இடமாகிய அங்கு சென்றதும் மிகவும் துக்கித்தான்.

அந்த அறையில் சிறிதுநேரம் தங்கி இருந்த பிறகு அவர்களனைவரும் மறுபடியும் தோட்டத்தில் புதைகுழி தோண்டப்படும் இடத்துக்குத் திரும்பி வந்தார்கள். தெய்வயானை மட்டும் சிறிதுதூரம் சென்று அங்குள்ள ஒரு மரத்தினடியில் உட்கார்ந்துகொண்டு இனி நடக்கப்போகும் விஷயங்களைக் கவனித்துக்கொண் டிருந்தாள். மற்றவர்கள் அந்த புதை குழியைச்சுற்றி நின்றுகொண் டிருந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அந்த ஆட்கள், அக்குழியிலிருந்து ஒரு சவப்பெட்டியை எடுத்தார்கள். பிறகு அனைவரும் சேர்ந்து அப்பெட்டியினுள் இருக்கும் சவத்துக்குப் பங்கம் ஏற்படாதபடி அப்பெட்டியைத் திறந்தார்கள். அப்பிரேதம் ஒரு துணியில் சுற்றப்பட்டிருந்தது. எல்லா அவயவங்களும் நன்றாக இருந்தன. அதனுடன் பட்டு நூலேணியும் இருந்தது. இதனால் தெய்வயானை கூறிய விவரம் உண்மையே என்று வெளிப்பட்டது. பிரேதத்தை அனைவருமாகச் சேர்ந்து மாளிகையில் எடுத்துச் சென்றார்கள்.

அச்சமயத்தில் மதுரைநாயகம் எப்படிப்பட்ட துயரத்தை அனுபவித்தான் என்பதுபற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. உண்மையில் தந்தையினிடம் அபிமானம் கொண்ட ஒரு குமாரன் இத்தகைய துக்க சம்பவத்தில் எவ்

வாறு வருந்துவானே அவ்வாறே துக்கித்தான் என்று சொன்னால் போதுமானது. டாக்டர்கள், அப்பிரேதத்தைப் பரிசோதித்துப் பார்த்து தெய்வயானை கூறியபடியே எத்தகைய ஆபத்துமின்றி அவர் இறந்திருக்கிறார் என்று அறியும்படி அவர்களிடம் சொல்லிவிட்டு மதுரைநாயகம், செல்வநாதனை மட்டும் தனியே ஓரிடத்தில் அழைத்துச் சென்றான்.

அவ்விடத்தில் மதுரைநாயகம் செல்வநாதனைக்கண்டு, "இப்போது டாக்டர்கள் பரீட்சித்துப் பார்த்து தெய்வயானை கூறியது சரியே என்று சொல்லிவிட்டால் இவ்விஷயத்தை இப்படியே மறைத்துவிட உனக்குச் சம்மதம்தானே" என்று கேட்டான். அதற்கு செல்வநாதன், "ஆஹா! அப்படியே ஆகட்டும். நீர் என்னிடம் கூறியிருக்கும் பல விஷயங்களையும் கவனிக்கும்போது நீர் சொல்கிறபடி செய்யவேண்டுமென்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். எப்படியிருப்பினும் நான் என் கடமைகளை முறைப்படி தான் செய்துகொண்டிருக்கிறேன்" என்று பதில் கூறினான்.

அதைக்கேட்ட மதுரைநாயகம், "நீ இவ்வாறு நிதானமான ஒருமுறையை அனுஷ்டிக்க ஒப்புக்கொண்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன். ஒருவிதத்தில் நாம் தெய்வயானையிடத்திலும் அனுதாபம் காட்டவேண்டியதாகத்தான் இருக்கிறது. அவள் உண்மையிலேயே என் தந்தையை அதிகம் நேசித்தாள்" என்று கூறினான். அப்போது செல்வநாதன், "ஆனால் அவள் தன் கணவனைக் காட்டிக்கொடுத்த விஷயம் மன்னிக்கப்பட முடியாததல்லவா? அவளிடம் அனுதாபங் காட்டவேண்டுமென்று நீர் கூறும்போது இப்போது நாம் பரீட்சித்துவரும் விஷயம் சம்பந்தமாக மட்டும் கூறுகிறீர் என்றே நினைக்கிறேன்" என்று கூறினான்.

அதற்கு மதுரைநாயகம், "அப்படி நினைக்கலாகாது. தேவாயன் அவளைத் துன்புறுத்தியதுடன் மட்டுமல்லாமல் சொல்லொணுத் துயரங்களை இழைத்து வந்தானென்றும், ஆகவே அவனைப் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணத் துடனேயே அவள் அவ்வாறு செய்ததாகவும் என்னிடமே தெரிவித்தாள்" என்று சமாதானம் கூறினன். அப்போது செல்வநாதன், "தேவாயன் மிகக் கொடியவனுகவும், கேவல மான குணங்களுடையவனுகவும் இருக்கலாம். ஆனல் நமக்கு இப்போது அதைப்பற்றி யெல்லாம் கவலையில்லை. உமது தந்தையின் பிரேதத்தைச் சோதித்துப் பார்க்கும் டாக்டர் கள், தெய்வயானை சொன்னபடியே அது எத்தகைய குற் றமுமான மரணமல்ல என்று தெரிவித்துவிட்டால் உடனே நான் தெய்வயானையிடம் அவள் தாராளமாகப் போகலா மென்றும், அவள்மீது எத்தகைய குற்றமும் சாட்டப்பட மாட்டாதென்றும் கூறிவிடுவேன். இதுவரை வெளியான விஷயங்களால் அவள் கூறியது உண்மையாகவே இருக்கலா மென்று தோன்றுகிறது. ஸ்நானத்தொட்டி அமைந்த இடம் இருக்கிறது. பட்டு நூலேணியும் பிரேதத்துடன் இருக் கிறது," என்று கூறினன்.

மதுரைநாயகமும் செல்வநாதனும் இவ்வாறு பேசிக் கொண்டே தோட்டத்தில் மேலும் கீழுமாக நடந்துகொண் டிருக்கையில் டாக்டர்களில் ஒருவர் அவர்களை நோக்கிவந் தார். அதைக்கண்ட தெய்வயானையும் அவர்கள் பரீட்சை செய்து முடித்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து, தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு அவர்களுடன் வந்து கலந்து கொண்டாள். அவள் உண்மையிலேயே மிகவும் அலுத் துப்போ யிருந்ததாலும், மனதில் பலவித விசாரங்களையுடை யவளாய் இருந்ததாலும் முகம் வெளுத்துப்போய் அசதி

யுடன் இருந்தாளென்றாலும், டாக்டர்கள் செய்யும் பரீட்சை யால் தனக்கு ஏதும் ஆபத்து நேராது என்று உறுதியாக நம்பியிருந்ததால் சிறிது தைரியமாக இருந்தாள்.

அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் கூடியதும் அந்த டாக்டர், தானும் தன் நண்பரும் பிரேதத்தைச் சோதித்துப் பார்த்ததில் தெய்வயானை சொன்னவிவரம் சரியே என்று ஒப்புக்கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது என்று தெரிவித்தார். உடனே செல்வநாதன் தெய்வயானையைப் பார்த்து, "அப்படியானால் இனிமேல் நீ இங்கு இருக்கவேண்டிய அவசியமில்லை. உன்மீது எத்தகைய குற்றமும் சுமத்தப் படமாட்டாது" என்று தெரிவித்தான். மதுரைநாயகமும் அவளைப் பார்த்து, "நீ உடனே ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு இரத்தினபுரிக்குப் போய்விடலாம். நாங்கள் மட்டும் இன்னும் சொற்பநேரம் இங்கிருந்து எனது தந்தையின் பிரேதத்தை யாருக்கும் தெரியாதபடி இரகசியமாக அப்புறப்படுத்த வேண்டியதாக இருக்கிறது." என்று தெரிவித்தான்.

சுருங்கக் கூறவேண்டுமாயின் தெய்வயானை அங்கிருந்து புறப்பட்டுத் தன் பெரிய தந்தையின் இல்லம் சென்றாள். செல்லும்போது வழியில், தான் தைரியமாக நடந்து கொண்டதைப் பற்றியும், அதனால் தனக்கு ஏற்பட்ட வெற்றியைப் பற்றியும் தானே சந்தோஷமடைந்தாள்.

தெய்வயானை வண்டியில் ஏறிக்கொண்டு சென்றதும் மதுரைநாயகம், மற்றவர்கள் இருந்த இடத்துக்குச் சென்றான். அப்போது டாக்டர்களில் ஒருவர் அவனிடம் ஒரு சிறிய குறிப்புப் புஸ்தகத்தைக் கொடுத்தார். அது சிறிது ஈரமாக இருந்தது. அப்புஸ்தகம் தோண்டி யெடுக்கப்பட்ட பிரேதத்தின் சட்டைப்பையில் இருந்தது என்றும் அறி

விக்கப்பட்டது. டாக்டர்கள் இருவருமாகச் சேர்ந்து பிரேதத்தின் சட்டைகளை யெல்லாம் தேடிப் பார்த்தார்கள். இக்குறிப்புப் புஸ்தகமொன்று தவிர வேறொன்றும் அகப்படவில்லை.

அப்போது செல்வநாதன், "உன் தந்தையின் தேகத்தில் இருந்த மோதிரம் முதலியவற்றை அப்பிரேதத்தைப் புதைப்பதற்காக அப்போது நியமிக்கப்பட்ட ஆள் எடுத்துக் கொண்டு விட்டிருப்பான்" என்று மதுரைநாயகத்தினிடம் கூறினன்.

மதுரைநாயகம் அக்குறிப்புப் புஸ்தகத்தை ஜாக்கிரதையாக வைத்துக்கொண்ட பின்னர், அந்த இரு டாக்டர்களும் எடுத்துக்கொண்ட சிரமத்துக்காக அவர்களுக்கு வந்தனம் கூறிவிட்டு இதை இரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அதற்குப் பல காரணங்கள் இருப்பதாகவும் கூறினன். பிறகு அவர்களிருவரும் சென்றனர்.

அனைவரும் போனபின்னர் அங்கு மதுரைநாயகமும் செல்வநாதனும் மட்டுமிருந்து அப்பிரேதத்தை அப்புறப்படுத்தும் வழியைக் கவனித்தார்கள். செல்வநாதன் மதுரைநாயகத்தினிடம், "ஐயா பிரேதத்தை அப்புறப்படுத்தும் விஷயத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டால் நான் பொறுப்புடன் பார்த்துக் கொள்கிறேன். என் மனிதர்களை இரவு வரை இங்கேயே காவலிருக்கச்சொல்லி இரவில் தக்க ஒரு ஆளை அழைத்து வந்து அப்பிரேதத்தை உம்முடைய வீட்டுக்குக் கொண்டு வருகிறேன். உமது பந்து மித்திரர்களுடன் நீர் என்ன சமாதானம் சொல்லிக் கொண்டாலும் எனக்குச் சம்மதமே" என்று தெரிவித்தான்.

இதை மதுரை நாயகமும் வந்தனத்துடன் ஒப்புக் கொண்டான். பிறகு அவன் தன் இல்லம் சென்றான். அவன்

தன் மாளிகைக்குச் சென்றதும் முதலில் பிரேமநாதம் பிரபுவுக்கு ஒரு சீட்டு அனுப்பி உடனே அவர் வந்து தன்னைக் காணவேண்டுமெனக் கோரினன். அப்படியே அப்பிரபுவும் வந்தபோது மதுரைநாயகம் எல்லா விவரங்களையும் அவரிடம் தெரிவித்துக்கொண்டு விட்டு இறுதியில் அவரிடம், "ஐயா, தாங்கள் வீட்டுக்குப்போய்த் தங்கள் மனைவியினுடைய சகோதரியின் குமாரியாகிய ஜெகதீஸ்வரியிடம் நான் ஏன் இன்று முழுவதும் அவளைச் சந்திக்கமுடியவில்லை என்பதற்கு இக்காரணங்களைச் சொல்லி அவளுக்கு ஆறுதல் சொல்லவும். மேலும் என் தகப்பனாரின் கதியைக் கண்டுபிடித்ததும், அவர் இறந்து நீண்டகாலமா யிருந்தாலும் அதற்காகவேண்டிய துக்கச் சடங்குகளையெல்லாம் நான் நிறைவேற்றவேண்டியவனாக இருக்கிறேன். இதையெல்லாம் அவளிடம் தெரிவித்தால் நான் அங்கு வாராததுபற்றி அவள் வருத்தப்படமாட்டாள். அவளது பிறவியின் இரகசியமும் இப்போது நான் அறிந்ததை தாங்களும் தங்கள் மனைவியும் சேர்ந்து அவளிடம் மெதுவாகத் தெரிவித்துவிடவேண்டும்" என்று கூறினன்.

பிறகு பிரேமநாதம்பிரபு சிறிதுநேரம் மதுரைநாயகத்துடன் சென்ற இருபத்து நான்குமணி நேரமாக ஏற்பட்ட ஆச்சர்ய சம்பவங்களைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார். ஜெகதீஸ்வரியின் இரகசியத்தைக் கண்டுபிடிப்பதற்காக இளவரசரைச் சந்திக்கச் சென்ற இடத்தில் இவ்வளவு விஷயமும் நடந்தபடியால் அதன்மூலமாக விஷயம் வெளியாக வேண்டுமென்பது இறைவனுடைய விருப்பமாக இருந்தது என்று மதுரைநாயகம் அறிவித்தான். பிறகு பிரேமநாதம் நேராகத் தன் மாளிகைக்குச் சென்று தன் மனைவி பங்கஜம்மாளிடம் மதுரைநாயகம் அறிவித்த விஷயத்தை

யெல்லாம் கூறிவிட்டு அதை நிதானமாக ஜெகதீஸ்வரிக்கும் அறிவிக்கும்படி கூறினர்.

மதுரைநாயகம் தன் அறையில் தனியாக இருந்தமை யால், தன் தந்தையின் சட்டைப் பையிலிருந்து அகப்பட்ட தென டாக்டரால் எடுத்துக் கொடுக்கப்பட்ட அக்குறிப்புப் புஸ்தகத்தை மிக கவனமாகப் படிக்கத் தொடங்கினன். அதைப் படித்ததனல் மற்றும் ஆச்சர்யமும் துக்கமும் வாய்ந்த ஒரு பெரிய இரகசியம் வெளியாயிற்று. அப்படிப்பட்ட இரகசியம் ஒன்று நடந்திருக்குமென்பதையும் மதுரைநாயகம் கனவிலும் கருதியவனேயல்ல. இக்கடிதம் மட்டும் அகப் படாமல் இருந்தால் அந்த இரகசியம் யாருக்கும் தெரியாமல் அப்படியே மறைந்துபோயிருக்கும். மேலும் அது தெரிந்த தால் அவன் உடனே அது சம்பந்தமாக வேறொரு வேலை செய்யவேண்டியது அவசியமாயிற்று. ஆகவே தன் தந்தை யின் பிரேத சம்பந்தமான சடங்குகளை ஒருவாறு முடித்து விட்டதும் அவன் சிறிதும் காலதாமதம் செய்யாமல் இப் போது மேற்குறிப்பிட்ட காரியத்தில் இறங்கவேண்டிய அவ சியம் ஏற்பட்டது.

150 - வது அத்தியாயம்

மதுரை நாயகத்தின் தந்தையினுடைய பிரேத சோதனை நடந்த அதேதினத்தில் பகல் நான்குமணி சுமாருக்கு சுகசிங்கம் பிரபுவின் வீட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிற தென்பதை இப்போது கவனிப்போம். சுகசிங்கம்பிரபு தன் மாளிகையிலேயே இருந்தார். அச்சம யம் ஒரு பெரிய வண்டி அம்மாளிகையின் முன் வந்து

நின்றது. அதிலிருந்து ஒருவன் கம்பீரத் தோற்றத்துடனும் கையில் ஒரு பெருந்தடியுடனும் வந்து இறங்கினன். அவன் உடனே அம்மாளிகையில் புகுந்து பிரபு இருக்கிருரா என விசாரித்தான். சேவகர்களும் அவனை உள்ளே அழைத்துச்சென்று பிரபுவின் முன் விட்டார்கள். அவனைக்கண்ட சுகசிங்கம் பிரபுவும், "கபூர் கிருஷ்ணா; உட்காரு, உன்னைக் காணச் சந்தோஷப்படுகிறேன். நான் உனக்கு எந்தவேலைக்காக நியமித்தேனோ அதை நீ நன்ருகவே கவனித்து வருவது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷமே" என்று கூறினர்.

அப்போது கபூர் கிருஷ்ணன் மிக அலட்சியமாக, "இப்போது வெயில் கொடுமை அதிகமாக இருக்கிறது: சூட்டின் மிகுதியால் கண்ணும் தெரியவில்லை. யார் அது? சுகசிங்கமா?" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு சோபாவின்மீது சாய்ந்தான். அவன் செய்யும் அட்டகாசத்தைக்கண்டு சுகசிங்கம் பிரபு சிரித்தாரென்ருலும் வேறு ஒன்றும் பேசாமல், "ஆமாம்; வெயில் அதிகமாகத்தான் இருக்கிறது. என்ன விசேஷம்? ஏதேனும் அதிசய செய்திகள் உண்டோ?" என்று கேட்டார்.

கபூர்:—சென்ற இரண்டு மூன்று வாரங்களாக செல்லப்பப் பிரபு கண் மண் தெரியாமல் செலவு செய்ய ஆரம்பித்து விட்டான். அவன் இப்போது சூதாட்டத்தில் அதிக பிரேமை கொண்டுவிட்டான். நான் வேண்டாமென்ருலும் அவன் கேட்கமாட்டான்போ லிருக்கிறது. இதனல் நமது காரியம் விரைவில் முடியுமென்பது நிச்சயம்.

சுகசிங்கம்:—அப்படியானல் மிகவும் சந்தோஷமே. இப்போது அவனுக்குப் பெருந்தொகை அவசியமா யிருக்குமோ?

கபூர்:—அரைமணி நேரத்துக்குமுன் நான் அவனை விட்டு வரும்போது அவன் தன் மனைவியிடம் சென்று அத் தொகையைக் கேட்கவேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்தான். இன்றிரவு எட்டுமணிக்குள் இரு பதினாயிரம் பவுன்கள் அவனிட மில்லாவிட்டால் அவன் அழிந்தவனாகவே கருதப்படவேண்டும்.

சுகசிங்:—பேஷ்; கபூர். உன்னைக் கண்டால் எனக்கு இப்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? இவ்வளவு வேலைகளை நீ எப்படி சாமர்த்தியமாகச் செய்துமுடித்தாய்?

கபூர்:—செல்லப்பப்பிரபு பலரிடமும் பாண்டுகள் எழுதிக் கொடுத்து நிறைய பணம் வாங்கிவருகிறான். கேட்ட மாத்திரத்தில் கொடுக்கவேண்டுமென்பது அதன் நிபந்தனைகள். மேலும் அவன் அதோ அந்த ருசிகரமான பானங்களை விற்கும் கடைக்காரனுக்கு பத்தொன்பதாயிரம் பவுன் இன்று இரவு தராவிட்டால் அவனைப்பற்றிப் புகார் செய்து மானபங்கம் படுத்திவிடுவதென அக் கடைக்காரன் முடிவுசெய்து அதைச் செல்லப்பப் பிரபுவுக்கும் அறிவித்துவிட்டான்.

சுகசிங்கம்:—கடைக்காரன் செல்லப்பப்பிரபுவுக்கு அவ்வாறு அறிவித்து விட்டது வாஸ்தவம்தானா?

கபூர்:—இன்று பகல் இரண்டு மணிக்கே கடைக்காரன் கடிதமொன்று எழுதி அவனுக்கு அனுப்பிவிட்டதை நான் பார்த்தேன். உடனே நான் மூன்று மணிக்கெல்லாம் செல்லப்பப்பிரபுவின் நிலைமையைக் கவனிப்பதற்காக அங்குச்சென்றேன். உடனே அவன் தனக்குக் கிடைத்த கடிதத்தை என்னிடம் கொடுத்து இதற்கு என்ன

செய்வதென்று யோசனை கேட்டான். நான் உடனே அக்கடைக்காரனைத் திட்டினேன். ஆனால் அக்கடைக்காரன் மிகவும் அயோக்கியனென்றும் அவனுடைய பணத்தை உடனே செலுத்தி விடுவதே நலமென்றும் தெரிவித்தேன். ஆகவே அவன் பணத்துக்கு என்ன செய்வதென்று சிந்தித்தான். மிக்க மனவருத்தத்துடன் அவன் தன் அறையில் மேலும் கீழுகாக நடந்துகொண்டிருந்தான். தனக்கு ஏதேனும் யோசனை கூறும்படி என்னைக் கேட்டான். உடனே நான் அதிகம் யோசிக்கிறவனைப் போல் யோசித்து அவன் தன் மனைவியிடம் கேட்க வேண்டுமென்றும், அவள் எங்கிருந்தோ புதையல் எடுப்பதுபோல் பணத்தைக் கொண்டு வருவதால் அவளைக் கேட்பதால் பலன் ஏற்படுமென்றும் தெரிவித்தேன். அதற்கு அவன், இனியும் தான் தன் மனைவியைக் கேட்க முடியாதென்றும், சென்ற ஆறு, ஏழு மாதங்களாகவே அவன் பெற்ற பணத்தை யெல்லாம் அவளிடமிருந்தே பெற்றதால் அதுவே ஐம்பதினாயிரம் பவுனுக்குமேல் ஆகிவிட்டதென்றும் கூறினான். அப்போது நான் அவனுடைய மனைவி அவனுக்கு ஒரு பாங்கியைப்போல் இருந்து நினைத்தபோதெல்லாம் கேட்டதொகையைக் கொடுப்பதுபற்றி அவன் அதிர்ஷ்டவானே என்று கூறினேன். அவன் நீண்ட நேரம் யோசித்தும் அவனுக்குப் பணம் கொடுக்கக் கூடியவர் வேறு எவரு மில்லாமையால் மதனவல்லியைத் தான் கேட்பதென முடிவு செய்தான். அவன் பணம் கேட்கும்பொருட்டு மதனவல்லியின் அறைக்குச் செல்லப் புறப்பட்ட பின்னரே நான் அங்கிருந்து புறப்பட்டேன்.

சுகசிங்கம்:—நீ மிகச் சாமர்த்தியமாக நான் உனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றுவதைக் காண எனக்குச் சந்தோஷமாகவே இருக்கிறது. செல்லப்பப்பிரபு எப்போதாவது, தன் மனைவிக்கு இவ்வளவு பெருந்தொகை எங்கிருந்து கிடைக்கிறதென்பதை அறிய ஆவல் கொண்டதுண்டா?

கபூர்:—ஆம்; ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் அவன் அவ்வாறு சிந்தித்ததையும் நான் அறிவேன். சமீபத்தில்கூட நாம் சூதாட்டத்தில் அதி தீவிரமாய் இருந்தபோது அவன் நன்றாய்க் குடித்துவிட் டிருந்தபடியால் அப்போது அந்த மயக்கத்தில் தனக்கு தன் மனைவி எங்கிருந்து இவ்வளவு பெருந்தொகையைப் பெறுகிறாள் என்று தெரியுமென்றும், அந்த இளவரசன் தான் கொடுக்கிறார் என்றும் கூறினான்.

சுகசிங்கம்:—ஆ! அவன் என்ன நினைத்துக்கொண்டால் நமக்கென்ன? நமக்கு ஆகவேண்டியது காரியம். நீ இக்காரியத்தை அதிக சாமர்த்தியமாக முடிப்பது பற்றிச் சந்தோஷமே. இக்காரியத்தில் நீ ஈடுபட்டுக்கொண் டிருக்கவேண்டிய அவசியம் சீக்கிரத்தில் நீங்கிவிடும் என்றாலும் அச்சமயத்தில் நான் உனக்குத் தெரிவிக்கிறேன்.

என்று கூறிக்கொண்டே அப்பிரபு கபூர் கிருஷ்ணனிடம் இருநூறு பவுன் நோட்டைக் கொடுத்து அவன் போகலாமென அனுமதி கொடுத்தான். பிறகு கபூரும் வெளியே புறப்பட்டான். அவன் அம்மாளிகையை விட்டுச் சென்று சிறிது தூரத்தில் காத்திருந்த தன் வண்டியில் ஏறச் சென்றதை யாரேனும் கண்டிருந்தால் அவன் டாம்பீகமாகவும், ஆணவத்துடனும் நடப்பது கண்டு அவனே அத்தெரு

வின் அல்லது அப்பகுதியின் சொந்தக்காரனே என்றும் நினைத்திருப்பார்கள்.

கபூர் கிருஷ்ணன் வெளியே சென்றதும் சுகசிங்கம் பிரபு தனது பிரத்யேக அறைக்குச் சென்று அங்கிருந்த தன் அந்தரங்க பெட்டியைத் திறந்து பார்த்து தான் மதன வல்லிக்கு அனுப்பிய நூறு முத்துகளில் எவ்வளவு முத்து கள் இதுவரை தனக்குத் திரும்பியது என்பதை எண்ணிப் பார்த்தார். அவ்வாறு எண்ணி முடிந்ததும் தனக்குள்ளேயே சந்தோஷமடைந்து, "அவள் எனக்குச் சொந்தமே" எனக் கூறிக்கொண்டு அப்பெட்டியைப் பூட்டிக்கொண்டு வேறு அறைக்குச் சென்றார்.

இவ்வாறு நடந்த ஒருமணி நேரத்துக்குப் பிறகு மதனவல்லியின் வண்டி சுகசிங்கம்பிரபுவின் மாளிகை யின் முன் வந்து நின்றது. கபூர் கிருஷ்ணன் கூறியதி லிருந்து அவள் அங்கு வரக்கூடுமென்பதை முன்னமே அறிந்திருந்த சுகசிங்கம்பிரபு அவளை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்து அவ்வண்டி வந்ததும் அவரே வாயில்வரை வந்து அவளை வரவேற்றார். அவள் எவ் வளவுதான் சந்துஷ்டியுடனும் திருப்தியுடனும் இருப்பது போல் காட்டிக்கொள்ள முயன்றாளென்றாலும் சுகசிங்கம் பிரபு அவளிடம் காணப்படும் சோர்வைக் கவனிக்காமற் போகவில்லை. ஆனால் அதைக் கவனிக்காதவர்போல் அவர் அவளைச் சற்று நேரத்துக்குமுன் கபூர் கிருஷ்ணனைச் சந்தித்த அறைக்கே அழைத்துச் சென்றார்.

அப்போது மதனவல்லி ஒருவாறு புன்னகை புரிந்து கொண்டே, தன்னிடமிருந்த முத்து மாலையினின்றும் சில முத்துகளை எடுத்துக்கொண்டே, "ஐயா, பிரபுவே. என் பாங்கியாக இருக்கும் தங்களிடமிருந்து இன்னும் சொற்ப

பவுன்களை எடுத்துச் செல்லவே இப்போது இங்கே வந்திருக்கிறேன்" என்று கூறினாள்.

அதற்கு சுகசிங்கம்பிரபு, "ஆகா! அதற்கென்ன? உன் இஷ்டப்படி நடந்து கொள்ளத்தானே நான் காத்திருக்கிறேன். நீ இங்கு எப்போதெல்லாம் வருகிறாயோ அக்காலத்தை யெல்லாம் தான் நான் என்வாழ்க்கையில் மிக்க இன்பமான காலமாகக் கருதுகின்றேன் என்று உறுதி கூறுவதை நீ நம்பு" என்று கூறினார்.

அதற்கு அவள் சிறிது கோபத்தோடு, "ஓஹோ! இவ்வாறு நீர் கூறியதால் ஆ உமது அந்தரங்கமான எண்ணத்தை அதில் காட்டுகின்றீர்கள் போலும்! நான் இங்கு ஒவ்வொரு முறை வரும்போதும் நீர் நினைக்கின்ற இடத்துக்கு நான் வா ஒவ்வொரு படிக்கட்டாகத்தாண்டி வந்துகொண்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்" என்று கூறினாள். அதற்கு அப்பிரபு, "மதனவல்லி, இவ்வாறு ஆத்திரத்துடனும் கோபத்துடனும் பேசவேண்டாம். உன்னிடம் அவமதிப்பாக நடந்து கொள்ளக்கூடிய நிலைமையில் நான் இல்லை," என்றார்.

மதனவல்லி ஒரு பெருந்தொகையை வாங்கிக்கொண்டு போவதற்காக அவ்விடம் வந்திருந்ததால் பிரபுவின்மீது கோபித்துக் கொள்வதில் பயனில்லையென நினைத்துத் திடீரென்று புன்சிரிப்புடன் வேடிக்கையாகப் பேச ஆரம்பித்து, "பிரபுவே! எப்படியாவது இருக்கட்டும். இப்போது நாம் சண்டையிடக் கூடாது. எனக்குத் தற்சமயம் பணம் வேண்டும். அதற்கு வேண்டிய செக்கையும் கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறினாள். உடனே அவள் தன் கையிலிருந்த முத்துமாலையிலிருந்து அவளுக்கு எவ்வளவு தொகை தேவையா யிருந்ததோ அதற்கேற்ற முத்துகளை வெளியில்

எடுத்தாள். உடனே சுகசிங்கம் பிரபுவும் தன் பெட்டியைத் திறந்து நோட்டுகளடங்கிய பெரிய கட்டு ஒன்றை எடுத்தார்.

அப்போது ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டே இருபது முத்துகளை அவள் அவரிடம் கொடுத்தாள். அம்மாலையிலிருந்து அந்த இருபது முத்துகளை எடுத்துவிட்டதும் அதில் ஒரே ஒரு முத்துதான் பாக்கி இருந்தது. அதை எப்படியோ சுகசிங்கம் பிரபுவும் பார்த்து விட்டார். அதனால் அவரது முகத்தில் சந்தோஷக்குறி தாண்டவமாடியது. இதை மதனவல்லி கண்டுகொண்டாள். ஆகவே அவள் சிறிது கவலையுடன், "ஆ! பிரபுவே. இம் மாலையில் இன்னும் ஒரே ஒரு முத்து இருக்கிறது. அது எப் போதும் உமது கைக்கு வாராதபடி நான் நடந்து கொள் வேன். இதுவரை எனக்குப் பணம் கொடுத்துவிட்டதற்காக வருந்தி இப்போது கொடுத்திருக்கும் இருபது முத்துகளுக் குரிய பணத்தைக் கொடுக்க மறுப்பதாயினும் சரியே! நான் நிச்சயமாகச் சொல்கிறேன். அந்த ஒரு முத்து உம்மிடம் வாராதபடி பார்த்துக் கொள்வேன்." என்றாள். சுகசிங்கம் பிரபு சிறிதும் ஆத்திரப்படாமல் நிதானமாகத் தன் கையி லிருந்த நோட்டுகளை அவள் கையில் கொடுத்துக் கொண்டே, "மதனவல்லி! உனக்கு நீயே எஜமானியாகையால் நீ உன் னிஷ்டப்படி நடந்து கொள்ளலாம். இதோ இந்த நோட்டு களை எண்ணிச் சரியாக இருக்கிறது என்று தெரிந்துகொள்" என்றார்.

அப்போது நமது மதனவல்லியின் மனதில் ஒரு எண் ணம் தோன்றவே சிறிது லஜ்ஜை யடைந்தாள். அதாவது தன்னை அபகரிக்கவேண்டும் என்று இரத்தினபுரியில் ஆவல் கொண்ட ஆறு பிரபுக்களில் ஐவர் வெற்றி யடைந்துவிட்டது அவளுக்கு ஞாபகத்திற்கு வரவே, இப்போது ஆறுவது

பிரபுவும் வெற்றியடைவதற்கு இன்னும் சொற்பதடையே இருக்கிறதென்று உணர்ந்ததால் அவமானம் தோன்றியது. ஆகவே மெல்லியகுரலில், "தொகை சரியாகவே இருக்கிறது. உமக்கு வந்தனம்" என்று கூறினாள். சுகசிங்கம்பிரபு முத்துகளைத் தன் பெட்டியில் போட்டுவிட்டார். மதனவல்லி நோட்டுகளைத் தன் இடுப்பிலிருந்த பையில் போட்டுக்கொண்டாள். உடனே அவள் முகமூடியை அணிந்துகொண்டு வெளியில் புறப்பட்டாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவளுடைய வண்டி தன் மாளிகைக்கு வந்து சேர்ந்தது.

மாளிகையில் நுழைந்ததும், தன் கணவன் தனக்காகக் காத்துக்கொண்டிருந்த அறைக்கே நேராகச் சென்றாள். உடனே அவள் சிறிது கோபத்துடன், "நாதா! இதோ நீ கேட்ட தொகையை எடுத்துக்கொள். ஆனால் இதுவே கடைசிமுறை. இனி உனக்கு வேண்டிய பணத்தைச் சமாளிக்க என்னால் முடியாது" என்று கூறிக்கொண்டே நோட்டுகளை அங்கிருந்த மேஜைமீது போட்டாள்.

செல்லப்பப்பிரபு:—எனதன்புள்ள மதனவல்லி! நீ என்மீது மிகவும் கோபமாய் இருக்கிறாய்போல் இருக்கிறது. அல்லது நீ போன இடத்தில் உனக்கு ஏதேனும் கஷ்டங்கள் நிகழ்ந்து கோபமேற்பட்டிருக்கவேண்டும்.

மதனவல்லி:—அதைப்பற்றிய விவாதம் இப்போது வேண்டாம். உன்னை அவமானப் படுத்தக்கூடாதென்றும், கஷ்டத்தில் விடக்கூடாதென்றும் கருதியே எப்படியோ கஷ்டப்பட்டு இத்தொகையைக் கொண்டுவந்துவிட்டேன். ஆனால் இப்போது நிச்சயமாக நீ ஒன்று அறியவேண்டும். அதாவது இனி நீ என்னிடமிருந்து இவ்வாறு பணத்தை எதிர்பார்க்கமுடியாது என்பதே.

செல்லப்:—அன்புள்ள மாதே! நீ இவ்வாறு பணம்கொண்டு வருகிறாயே—இதன் இரகசியத்தை என்னிடம் சொல்ல மாட்டாயா? முதலில் நான் இத்தொகை உனக்கு இள வாசனிட மிருந்துதான் கிடைக்கிறது என நினைத் தேன். ஆனால் இவ்வளவு பெருந்தொகைகளைக் கொடுக் கக்கூடிய நிலைமையில் இளவரசர் இல்லை என்பதையும் நான் அறிவேன். அதிலும் இப்போது இப்பணம் கொண்டுவருவதற்காக நீ எங்கேயோ வெளியே வெகு தூரம் போய்வந்தாய்.

மதன:—நாதா! நீ இதைப்பற்றிக் கவலைப்படுவதில் பய னில்லை. நான் எப்படி இத்தொகையைப் பெறுகிறேன் என்று பதில் உனக்கு ஏதேனும் கஷ்டம் இருக்கு மானால் அதற்குக் காரணம் நீயே என்பதை நீ உணர வேண்டும். நீ இவ்வாறு அளவுக்கு மீறிச் செலவு செய்துகொண்டு அதற்கான பணத்தை என்னிடமிருந்து எதிர் பார்ப்பதால்தான் இத்தகைய சங்கடங்கள் ஏற் படுகின்றன. ஆகவே நான் ஏதேனும் வழிதவறி யிருந் தாலும் அதற்கு நீயே காரணமாவாய்.

மதனவல்லி அவ்வாறு கூறியதால் மிக்க அவமானமும் துயரமுமடைந்த செல்லப்பப்பிரபு தன் மனைவியின் அழகிய முகத்தைப் பார்த்துக்கொண்டே, "கடவுளே! இப்பணத் துக்காக நீ" என்று ஏதோ சொல்லி முடிப்பதற்குள் மதன வல்லி மிக ஆத்திரத்துடன், "நீ என்ன சொல்கிறாய் என்பது எனக்குத் தெரியும். இப்பணத்தைப்பெற நான் எங்கேனும் வியபிசாரம் செய்கிறேனா என்று கேட்கப்போகிறாய். இன் னும் அவ்வளவு தூரத்துக்கு வாவில்லை. ஆனால் மறுபடியும் கேட்பாயானால் இல்லையென்றுவது மறுத்துவிட வேண்டும். இன்றேல்—" என்றாள்.

செல்லப்:—இல்லை, இல்லை, அது கூடவே கூடாது. நான் மனிதன் என்னும் முறையிலும், உனது கணவன் என்னும் முறையிலும் அத்தகைய செயலை நான் வெறுக்கிறேன். நமக்கு விவாகமானபோது, நாம் இருவரும் தனித்தனியே நமது இஷ்டப்படி நடந்து கொள்ளலாமென்றும், கணவன் மனைவி என்னும் அ ர்பும் கட்டுப்பாடும் நமக்குள் இருந்தாலும் அதற்குப் பாதகமில்லாமலே நாம் நடந்து கொள்ளலாமென்றும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதில் நீ இளவரசனது காதலியாக இருக்கலாமென்பது மட்டுமன்றி, உனக்கு யாரிடம் மோகம் ஏற்படுகிறதோ அவர்களிடம் இஷ்டப்படி நடந்து கொள்ளலாமென்று நினைத்தேனே யொழிய இப்படி உன் அழகை விலைக்கு விற்க முடியாது. மதனவல்லி, அவ்வேலை வேண்டாம்.

மதன:—ஓ! அப்படியானால் நீ கூறுகிறபடி நான் என் மானத்தை விற்றுவிடக் கூடாதென்று விரும்புகிறாய்.

செல்லப்:—ஆம், சந்தேகமேயில்லை. அப்படி ஏதேனும் நேர்ந்ததாகத் தெரிந்தால் நான் உன்னைக் கட்டாயம் வெறுப்பேன். ஏனெனின் அதைக் கேட்கும்போதே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.

மதன:—அப்படியானால் இப்போது நீ என்னைச் சிறிதளவேனும் நேசிக்கிறாய் என்பது நிச்சயமா?

செல்லப்:—ஓ! ஒருமுறை உன்னை அவ்வளவு அளவுகாட்டி அன்புடன் நேசித்துவிட்டு, உன்பால் அவ்வளவு காதல் கொண்டு அதைத் திடீரென்று விட்டுவிட முடியுமென்று கருதுகிறாய். மேலும் நீஎவ்வளவு அழகாயிருக்கிறாய்? இவ்வளவு அழகுடன் கூடிய உன்னை நேசிக்காம லிருக்கவும் முடியுமா? நாம் இருவரும் கலியாணம்

செய்து கொண்டபோதே எளிய வாழ்க்கையுடன் இருந்து விட்டிருந்தால் நமது வாழ்க்கை எவ்வளவோ ஆனந்தமாக இருந்திருக்கும். அப்போது நமது அன்பு சிறிதும் குற்றமற்றதாய்ப் பரிசுத்த மானதாய் இருந்திருக்கும்.

மதன:—அவ்வாறாயின் இந்த ஆடம்பர வாழ்க்கையிலுள்ள இன்பங்களையும், ஆர்ப்பாட்டங்களையும், மேன்மையையும் நீ வெறுக்க ஆரம்பித்துவிட்டாய்போலும்! எனக்கும் சிறிது வெறுப்பு ஏற்பட ஆரம்பித்திருக்கிறது.

செல்லப்:—ஆ! கடவுளே! சந்தேகமென்ன? எனக்கு இந்த வாழ்க்கையானது பெரிய சுமையாகத்தான் தோன்றுகிறது. அதிலும் நாம் இருவரும் இப்போது இவ்வாறு பேசிக்கொண்டிருப்பதில்எனக்குப் பல பழைய விஷயங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்து என் மனதை அதிகம் வாட்டுகின்றது. நமக்குக் கலியாணமானதும் நாம் எங்கேனும் வெகுதூரத்தில் போய் வாழ்ந்திருந்தால் எவ்வளவோ நலமாக இருந்திருக்கும். இங்கே இருந்ததால் பலர் நம்மைத் தொந்தரைக் குள்ளாக்கி விட்டார்கள்.

மதன:—ஆம்; இப்போது நாம் பலருடைய ஆதிக்கத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறோம். நடந்து போனதைப்பற்றி இப்போது வருந்துவதில் பயனில்லை. உண்மையில் நீ இவ்வாறு வருந்துவதைக்கண்டு நானும் கஷ்டப் படுகிறேன்.

செல்லப்:—மதனவல்லி! நீ எப்போதாவது நமது எதிர்காலத்தைப்பற்றி நினைத்திருக்கிறாயா? நமது மன்னர் இறந்து போய் இளவரசர் பட்டத்துக்கு வந்ததும் நாம் இன்

னும் அதிக பட்டங்களையும் பதவிகளையும் பெற்று பெரிய அந்தஸ்தை யடையலாம். ஆனால் அவைகள் இன்பம் தரக்கூடியவைகளா? அவ்வளவுக் கவ்வளவு மானக்கேடு தானே. நாம் நமது விவாகத்துக்கும் தனித்திருந்து மாசு மருவற்ற அன்புடன் இருந்திருந் தால் நான் சூதாட்டத்துக்கு ஏன் போகிறேன்? மது பானங்களை ஏன் அருந்துகிறேன்? நான் இவ்வளவு மாதர் லோலனாகவும் ஆகி யிருக்கமாட்டேன். இக் கெட்ட பழக்கங்களெல்லாம் இந்த ஒருவருஷத்துக்குள் தான் அதிகரித்துவிட் டிருக்கிறது. சிற்சில சமயங்களில் நான் தனியாக இருந்து நமது நிலைமையைப்பற்றி ஆராயும்போது என்னை நானே வெறுத்துக் கொள் கிறேன். ஏ, மதனவல்லி! ஏன் அழுகிறாய்? உனக்கும் நம்முடைய வாழ்க்கையைப்பற்றித் துக்கம் தோன்று கிறதா? ஆ! நீயும் என்னைப்போலவே உள்ளேயே நினைத்து வருந்துகிறாய் போலும்!

மதன:—எனதன்புள்ள நாதா! ஆம், ஆம்; நினைத்து நினைத் துத் தான் வருந்துகிறேன். ஆயினும் என்னபயன்? நம் கதி இப்படிப்பட்டதென ஏற்பாடாகி விட்டிருக் கிறது. அதன்படிதானே நம் வாழ்க்கையும் இருந்து வரும். நாம் என்னதான் மேற்பார்வைக்கு இன்பங்கள் அனுபவித்தாலும் தனித்திருந்து சிந்திக்கும்போது துக்கப்பட வேண்டியதாகத்தான் இருக்கிறது.

செல்லப்:—ஆம்; இப்படிப்பட்ட வாழ்க்கையைக் கடைசி வரையுமா அனுபவிப்பது? என்ன செய்வது? நாம் பொறுத்துக்கொள்ள வேண்டியதாகத்தான் இருக் கிறது. எப்படி இருந்தாலும் நான் உன்னை என் மனைவி யாகவே நேசிக்கிறேன். இனி நீ மற்றொருவருடன்,

ஏன் மற்றவர்களுடன் இன்பமனுபவிப்பதைக் காண நான் சகியேன்.

மதன:—அன்பரே! இவ்வாறு வருந்திக்கொண் டிருப்பதில் என்ன பிரயோசனம்? நாம் அனுபவித்தே தீரவேண்டியிருக்கிறது. நீ இவ்வாறு வருந்துவதில் நானும் பங்கெடுத்துக் கொள்கிறேன். ஆயினும் நாம் நமது கதியை அனுபவித்தே தீரவேண்டு மாதலால் நம்முடைய ஒப்பந்தப்படி நாம் நடக்க வேண்டியதே.

செல்லப்:—ஆம்; வேறு வழியில்லைதான். ஆனால் இவ்வாறு அடிக்கடி தனியாக இருந்து சிந்திப்பதால் பல நன்மைகள் விளையுமென்பதில் ஆட்சேபமில்லை.

மதன:—நம்முடைய பலஹீனத்தைப்பற்றி நாமே சிந்திப்பதில் பயனில்லை. அதனால் நன்மை ஏற்பட ஹேதுவில்லை. நாம் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்திருக்கிறோம். நான் எத்தகைய நடத்தை யுடையவள் என்பது உனக்கும், நீ எத்தகைய நடத்தை யுடையவன் என்பது எனக்கும் தெரிந்தே இருக்கிறது. இப்போது நாம் எங்கேனும் தனியாக ஓடிப்போவதென்றால் அது முடியாத காரியம். இப்போது நாம் சகஜமாக மனிதர்களுக்குள்ள பச்சாதாபம் என்னும் அரிய குணத்தில் சிக்குண்டு முன்பின் நிலைமைகளைப்பற்றி ஆராய்வதால் நமக்கு ஏதோ பலவாறு தோன்றுகிறது. ஆனால் அந்த உணர்ச்சி நீடித்து நிற்காது. அன்பின் சக்தியாகிய தூய்மை என்பது நம்மிடத்தில் இப்போது இல்லாமற் போய்விட்டது. நாம் ஒருவரை ஒருவர் பார்த்தால் வெட்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

செல்லப்:—ஆம்; ஆம். நீ சொல்வதெல்லாம் உண்மையே. நம் நிலைமை அப்படி ஆகிவிட்டது.

மதன:—ஆகவே நாம் நமது விதிப்படி நடப்போம். பின்னர் நடப்பது நடக்கட்டும். இதோ உனக்கு வேண்டிய நோட்டுகள் மேஜைமீது இருக்கிறது. இனி என்னைக் கேட்கக் கூடாதென நான் சொன்னது உன் ஞாபகத்தி லிருக்குமென நம்புகிறேன்.

செல்லப்:—ஐயோ கடவுளே! ஞாபகமிருக்கிறது. நான் இனி உன்னை இன்னும் கேவலமான நிலைமையில் புகுத்துவதைவிட நானே மாய்த்துக் கொள்வேன்.

மதனவல்லி உடனே அவ்வறையைவிட்டுச் சென்றாள். உடனே நேராகத் தன் அறைக்குச்சென்று தான் வெளியில் செல்வதற்காக அணிந்திருந்த ஆடைகளைக் களைந்துவிட்டுத் தன் நகைப்பெட்டியைத்திறந்து அதில் அம்முத்துமாலையில் பாக்கி இருந்த ஒருமுத்தை மிக ஜாக்கிரதையாக வைத்தாள். பிறகு ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தனக்கு வந்த கடிதத்தை யெல்லாம் மிகக் கவனத்துடன் படித்தாள். அப்போது அவள் உண்மையிலேயே தன் கணவன் தன்னுடன் பேசியதை யெல்லாம் ஞாபகத்துக்குக் கொண்டு வந்தபடியால் அவளுக்கும் தெரியாமல் அவளது கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாக வழியலாயிற்று. ஆகவே கடிதம்கூடப் படிக்க முடியாமற் போய்விட்டது. எனவே அவள் கடிதங்களைத் திருப்பித் திருப்பிப் படிக்க ஆரம்பித்தாள். அச்சமயத்தில் அவளுடைய அந்தரங்க தோழி அவ்வறையின் கதவைத் தட்டினாள். கதவைத் திறந்து விசாரித்ததில் யாரோ ஒரு வயோதிகமாது மதனவல்லியைக்காண வந்திருப்பதாகவும், அதுவும் அவசரமாகப் பார்க்கவேண்டுமென்று சொல்வதாகவும் கூறினாள்.

அதற்கு மதனவல்லி, "அவள் யார்? அவள் பெயர் என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள். அதற்கு அத் தோழி, "அவள் தன் பெயரைச் சொல்லமாட்டேன் என் கிறாள். உண்மையில் அவள் எனக்குத் தெரியாது. நான் அவளை இதுவரை எங்கும் பார்த்ததாகவும் ஞாபகமில்லை. அவள் மிக அவசரகாரியமாக உன்னைக் காண விரும்புவ தாகக் கூறினாள்" என்று பதில் அளித்தாள்.

அதற்கு மதனவல்லி, "அப்படியானால் அம்மாதை இங்கே அழைத்துவா. பிறகு அரைமணி நேரத்துக்குள் எனக்குச் சாப்பாடு தயாராகட்டும்" என்றாள். தோழி, "இன்று நீ மட்டும் தனியாகச் சாப்பிடப்போகிறாயா" என்று கேட்டதற்கு மதனவல்லி ஆம் என்று பதிலளிக்கவே தோழி போய்விட்டாள். உடனே மதனவல்லி தான் படித்துக் கொண்டிருந்த கடிதங்களையெல்லாம் பெட்டியில் வைத்து விட்டுத் தன் முகத்தை எதிரிலிருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டு தன் தலைமயிர் முதலியவற்றை ஒழுங்கு படுத்திக் கொண்டாள். உடனே அவ்வறையின் கதவும் திறக்கப்பட் டது. தோழி அம்மாதை அறையில் விட்டுச் சென்றாள். அம்மாதைக்கண்டு அவள் யாரென்பதை அறிந்து கொண் டதும் மதனவல்லி திடுக்கிட்டுத் தயக்கத்துடன் "ஆ! கௌரியா?" என்றாள்.

151 - வது அத்தியாயம்

மதனவல்லியைக் காண அப்போது அங்கே வந்தவள் கௌரி என்னும் அயோக்கிய மாதே. ஆனால் அவள் பார்ப்பதற்கு மிகவும் யோக்கியள்போல் காணப்பட் டாள். பசுவைக் கொன்று செருப்புதானம் செய்வதைப்போல்

அவள் மிகப் பாபமான காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும் வெளிப் பார்வையில் ஏழைகளுக்கெல்லாம் பலவகை உதவிசெய்து வந்ததாலும், பலரிடமும் தாய்போல் அன்பு காட்டியதாலும் அவளைப் பலரும் பெரிய மனதுள்ள நற்குணம் வாய்ந்த மாது என்றே கருதிவந்தனர். எனினும் அவளுடைய யோக்கியதையை நமது நேயர்கள் அறிவீர்கள். ஒரு விசித்திர இல்லம் அமைத்து அதில் பிரபல கனதனவான்களுக்கெல்லாம் அவர்கள் விரும்பும் உயர்தர குடும்ப மாதர்களையும் சப்ளை செய்துவந்தாள். அவளைக் கண்டதும் மதனவல்லி திடுக்கிட்டு 'கௌரியா?' என்றதும், 'ஆம்,' கௌரிதான். இப்போது நீ மிகவும் சௌக்கியமாய் இருப்பதுபோலத் தெரிகிறது. நான் இங்கு வரவேண்டுமென்று பலமுறை யோசித்தேன். ஆனால் வேலை சரியாக இருந்துவிட்டது.

மதனவல்லி:—சரி; சந்தோஷம். இப்போது இவ்வளவு தூரம் என்னவேலையாய் வந்தாயோ?

கௌரி:—நான் ஏன் இங்குவருவேன் என்று உனக்குத் தெரியாதா? உன்னைப்பார்த்து அதிகநாட்களாய்விட்டனவே. ஏதேனும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து போகலாம் எனக் கருதினேன். மேலும் ஒரு முக்கியமான விஷயமும் இருக்கிறது. அதிருக்கட்டும்; உன் இந்த அறை மிக அழகாக அலங்கரிக்கப்பட் டிருக்கிறதே. இப்படிப்பட்ட அழகான அறையை நான் என் வாழ்க்கையிலேயே கண்டதில்லை.

மதன:—இவ்வாறு கூறியதற்காக மிகவும் சந்தோஷம்.

கௌரி:—என்ன அம்மா! உன்னைப் பார்த்தால் ஏதோ அசௌக்கியம்போல் காணப்படுகிறதே. ஆனாலும் நீ அதிர்ஷ்டம் வாய்ந்தவளே. மிக்க அழகான ஒரு கனவானை விவாகம் செய்துகொண்டிருக்கிறாய். மேலும்

உனக்கும் உன் கணவனுக்கும் உயர்தா பட்டம் கிடைத்திருக்கிறது. பணத்திலேயே மூழ்கிக் கிடக்கிறீர்கள். அரண்மனையிலும் நல்ல நாகரிகத்திலும் வசிக்கிறீர்கள். எல்லாவற்றையும்விட முக்கியமாக இளவரசரிடம் காதலியாகவு மிருக்கின்றாய்.

மதன:—நான் இளவரசரின் காதலியாய் இருக்கிறேன் என்பது உலகப்பிரசித்தம் போலும்!

கௌரி:—ஆம்; இது பலருக்கும் தெரிந்தவிஷயமே. இதைக் கேட்ட மாத்திரத்தில் நீ பெருமை யடையவேண்டாமா? இந்த அரண்மனைக்கு வரும் பிரபல மாதர்களெல்லாம் உன் அந்தஸ்தைக் கண்டு பொறாமைப் படுகிறார்களென்றே கூறலாம். ஆனால் நீ இவ்வளவு உயர்ந்த பதவியை அடைந்ததில் ஆச்சர்ய மொன்றுமில்லை. ஏனெனின் அன்று நான் உன்னை முதன் முதலில் தெருவில் சந்தித்தபோதே இவ்வுலகில் உன்னைப்போல் அழகானவர் எவரு மில்லையென்று நான் செய்த முடிவு சரியாய்ப் போய்விட்டது. இப்போது நீ இன்னும் அழகாகக் காணப்படுகிறாய்.

மதன:—நீ என்னை இவ்வளவு பெருமைப்படுத்திப் பேசுவதற்காக நான் உனக்கு வந்தனமளிக்கிறேன்.

கௌரி:—நீ முதன் முதலாக இரத்தினபுரிக்கு வந்து கையிலிருந்த பணத்தையும் இழந்து பரிதபித்த வேளையில் நான் உன்னைச் சந்தியாமல் இருந்தால் இப்போது உன் நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

மதன:—நீ இவ்வாறு பல விஷயங்களைப் பேசுவதுடன் ஏதோ முக்கிய காரியமாகவும் வந்ததாகச் சொன்னாயே. அது என்னகாரியம் உடனே சொல்.

கேளரி:—அதுவா! எனக்கு நீ இந்த நிலைமையில் ஏதேனும் சிறிது உதவி செய்யலாமல்லவா?

மதன:—உதவியா! இங்கு வருகிறவர்கள் அனைவருமே ஏதேனும் ஒருவகை உதவியை எதிர்பார்த்தே வருகிறார்கள். பலர் பணத்தை எதிர் பாரத்தும் வருகின்றனர்.

கேளரி:—அப்படியானால் சந்தோஷமே. உன் உதவியை எதிர்பார்த்து வரும் பலருக்கும் இல்லை என்று கூறாது நீ ஏதோ உதவிசெய்வதைக் காண மிகவும் சந்தோஷப் படுகிறேன். உன் தாராள குணத்தைப்பற்றியும், தர்ம சிந்தையைப் பற்றியும் பத்திரிகைகளிலும் காணப்படு கின்றனவே.

மதன—:ஆம்; அப்படித்தான். ஆனால் இப்போது நீ எதிர் பார்ப்பது தர்மமல்ல.

கேளரி:—சரி. அது தர்மமோ அல்லவோ எனக்குத் தெரியாது. நான் பலவிதமான கஷ்டங்களில் சிக்கி யிருக்கிறேன். அக்கஷ்டத்திலிருந்து எப்படி மீளுவது என்பதே தெரியாமல் அவஸ்தைப்படுகிறேன். அந்தப் படுபாவி தாகிரி வேலப்பன், தூக்கிலிடப்பட்டான் என்பது உனக்குத் தெரியுமல்லவா?

மதன:—ஆம்; அதற்கென்ன இப்போது? நாம் பேசுவதற்கும், அதற்குமென்ன சம்பந்தம்?

கேளரி:—என், அவன் என்வீட்டைத்தான் தன் துஷ்கிருத்திபங்களுக்கு உபயோகித்துக் கொண்டிருந்தான். அதிலும் முக்கியமாக குமாரவேல் பிரபுவின் மனைவி ஏகநாயகிச் சீமாட்டியுடன் அவன் என் வீட்டுக்குத் தான் வருவான். அச்சீமாட்டியும் சமீபத்தில் பரிதிபுரத்தில் பரிதாப மரணமடைந்தா ளென்பதும் பத்தி

ரிகைகளில் வெளியாயிருந்ததே. அதுவும் உனக்குத் தெரிந்திருக்கும்.

மதன:—ஆம்! அந்தப் பயங்கர விஷயங்களையெல்லாம் நான் பத்திரிகைகளில் படித்தேன். நீ சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லி முடி.

கௌரி:—அப்பயங்கர விஷயத்தில் ஈடுபட்டவர்களில் பலரும் எனக்குத் தெரியும். அவர்கள் பிழைத்திருந்தால் அவர்களைப்பற்றிப் பேசக்கூடாதுதான். ஆனால் இப்போது அவர்கள் தான் இறந்து விட்டார்களே. அவர்களைப் பற்றி எவ்வளவுதான் பேசினாலென்ன? ஏகநாயகிச் சீமாட்டியுடன் முதன் முதலில் கர்னல் மாரப்பன் தான் வந்தான். பிறகு வேலப்பன் வர ஆரம்பித்தான். அவ்வளவு ஏன்? உன் கணவன் அதே ஏகநாயகியுடன் இன்ப மனுபவிக்கவில்லையா? அது குமாரவேல் பிரபுவுக்குத் தெரிந்துபோய் பல கஷ்டங்கள் ஏற்படவில்லையா! எனினும் நவீன நாகரீகத்தில் இத்தகைய சம்பவங்களெல்லாம் மிக சகஜமானவை. ஏகநாயகியும் கர்னல் மாரப்பனும் என் வீட்டில் இருந்தபோதே குமாரவேல் பிரபுவும் பெரியநாயகிச் சீமாட்டியும் இருந்தார்கள். பெரியநாயகிச் சீமாட்டியை நான் நமது மகாராணியின் அரண்மனையில் பலமுறை பார்த்திருக்கிறேன்.

மதன:—நீ அரண்மனையில் சென்றிருக்கிறாய் என்பதை என்னிடம் தெரிவிக்க வருகிறாயா? என்ன. சங்கதியைச் சொல்.

கௌரி:—அதிலொன்றும் சந்தேகமில்லை. எத்தனையோ முறையில் சென்றிருக்கிறேன். நான் மருத்துவச்சியாகவும் இருந்திருக்கிறேன். அரண்மனையிலுள்ள உயர்தர மாதர்களின் யோக்கியதையை யெல்லாம் நான்

நன்கு அறிந்திருக்கிறேன். கற்பு என்னும் பதமே அரண்மனையில் அகப்படாது. வெளிதேசங்களுக்கு உத்தியோகத்துக்காகச் செல்லும் பெரிய மனிதர்களின் மனைவியரெல்லாம் அவர்கள் இல்லாதகாலத்தில் மக்களைப் பெறுகின்றனர். அரண்மனையிலுள்ள இளவரசிகளும் உத்தமமானவர்களல்ல என்று நான் உறுதி கூறுகிறேன்.

மதன:—நானும் அவ்விஷயங்களை யெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நீ சொல்லவேண்டியதைச் சொல்லி விஷயத்தை முடி. தரகிரி வேலப்பனைப்பற்றி ஏதோ பேச ஆரம்பித்த நீ என்னென்னமோ பேசுகிறாய்.

கௌரி:—ஆ! அந்த அயோக்கியன் தானே. நான் இப்போது சொன்னதுபோல் அவன் அடிக்கடி என் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். அப்போது அவன் தாராளமாகப் பணம் கொடுத்துவந்ததால் அவனைப்பற்றி நான் நல்லெண்ணம் கொண்டேன். மேலும் அவன் ஏகநாயகியுடன் பேசும்போதெல்லாம் ஆயிரக்கணக்கான பவுன்களுக்கு செக் எழுதுவதாக அவன் சொல்வதை நான் கேட்டதால் அந்த நல்லெண்ணம் இன்னும் அதிகரித்துவிட்டது. ஆகவே நானும் அவனிடம் அதிக வட்டிக்குப் பெருந்தொகையைக் கொடுத்து வைக்கலாமென்று கருதி என் எண்ணத்தையும் அவனிடம் சொன்னேன். அதற்கு அவன் என்னைத் தன் காரியாலயத்துக்கு வரும்படி சொன்னான். நானும் அப்படியே போனேன. அப்போது அவன் தான் ஏதோ ஒரு பெரிய வியாபாரத்தில் மூவாயிரம் பவுன் முதல் போடப்போவதாகவும் தெரிவித்தான். விவரமாகக் கூறு

வதில் என்ன பயன்? சுருங்கச் சொல்லி விடுகிறேன். அவனை நம்பி ஐயாயிரம் பவுன் மோசம்போனேன். நான் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை இவ்வாறு தொலைத்தேனென்றால் என் மனம் எவ்வளவு கஷ்டப்படும் என்பதை நீயே யோசிக்கவேண்டும்.

மதன:—தயவுசெய்து நீ இங்கு வந்ததன் நோக்கமென்ன என்பதைத் தெரிவி. நீ இப்போது கூறிய நஷ்டத்தால் நீ மிகவும் ஏழையாய்ப் போயிருப்பாய் என்பது நிச்சயமே.

கௌரி:—ஆம், மிகவும் கஷ்டம்தான். நாளை பகல் பன்னிரண்டு மணிக்குள் நான் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தா விட்டால் என் மாளிகை முழுகிப் போய் விடும். என் மாளிகை எவ்வளவு அழகா யிருக்கிறதென்பதை நீ பார்த்திருக்கிறாயே. அப்படிப்பட்ட மாளிகையை விட்டுவிட மனம் வருமா? ஆகவே தயவு செய்து நீ எனக்கு இப்போது இரண்டாயிரம் பவுன் கொடுக்கவேண்டும்.

மதன:—இரண்டாயிரம் பவுனா கேட்கிறாய். நான் உனக்குக் கொடுத்துதான் ஆகவேண்டுமோ?

கௌரி:—ஆம், நீதான் கொடுத்து ஆகவேண்டும்,

மதன:—என்ன மிக்க அயோக்கியத்தனமாக நடந்து கொள்கிறாய். என் வீட்டில் நீ வந்து என்னை வற்புறுத்த உனக்கு என்ன அதிகார மிருக்கிறது?

கௌரி:—பலவானே பெரியவன் என்பதுபோல் இப்போது எனக்கு உன்மீது பலம் இருப்பதால் உன்னை என் இஷ்டப்படி ஆட்டிவைக்க என்னால் முடியும். நீ பார்ப்பதாலேயே நான் பயந்து விடமாட்டேன். எனக்கு

இப்போது இரண்டாயிரம் பவுன் தேவை. அவை உன்னிடமிருந்தே பெறுவதென நிச்சயித்திருக்கிறேன்.

மதன:—ஆ! நான் தரமறுத்தால் உன்னால் என்னசெய்ய முடியும்?

கௌரி:—அப்படி மறுக்க உன்னால் முடியவேமுடியாது. நான் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் உன் பெருமையெல்லாம் ஒரே நிமிஷத்தில் அழிந்து விடும்.

மதன:—நான் எவ்வளவோ பரிசுத்த மானவளாகத்தானே இருந்தேன். நீ என்னைப்பற்றி எப்படிக் கேவலமாகக் கூறமுடியும் நீ சொல்வது பொய் அல்லவா?

கௌரி:—உன் பேச்சை யார் கேட்பார்கள். அதெல்லாம் முடியாது. நீ இவ்வளவு காலமாக பணத்திலேயே மூழ்கி இருக்கிறாயே. ஒரு வேளையிலாவது நான் உனக்குச் செய்த உதவியை நினைத்துக்கொண்டு எனக்கு ஒரு காசாவது அனுப்பி யிருக்கிறாயா? என்னால்தானே உனக்கு இவ்வளவு வாழ்வும் கிடைத்தது.

மதன:—என்னிடமிருந்து பெறாவிட்டால் என்ன? வேறு யாரிடமிருந்தாவது எனக்காக நீ பணத்தைப் பெற்று விடவில்லையா?

கௌரி:—அதைப்பற்றி உனக்கு அவசியமில்லை. அக்காலத்தில் எனக்குக் கிடைத்த சிறுதொகை, இப்போது நீ பெற்றுள்ள பதவியைக் கவனித்தால் மிகச் சொற்பமாகும். நீ நன்றி யறிதலென்னும் குணத்தைப் பெற்றவளா யிருந்தால் நீயாக என்னைக் கூப்பிட்டு உதவி செய்திருக்க வேண்டும். நானாக வந்திருக்கும் இப்போதும் உதவிசெய்ய மறுப்பது தகாது. என்னால்

தானே நீ இப்போது இவ்வளவு இன்பங்களை அனுபவிக்கிறாய் என்பதை ஞாபகப் படுத்திக்கொள்.

மதன:—சரி, நீ சொன்னதெல்லாம் உண்மையே. என் இத்தகைய அந்தஸ்துக்கு நீயே காரணமென்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆயினும் நீ கேட்கும் தொகையைக் கொடுக்கக்கூடிய நிலைமையில் நான் இப்போது இல்லை. ஆகவே, மறுமுறை நீ வரும்போது தருவதாக உறுதி கூறுகிறேன்.

கௌரி:—ஓ! அது முடியவே முடியாது. உன்னை நான் நம்பமாட்டேன். நீ என்னிடம் நல்லபடி நடந்து கொள்ளவில்லை. இப்போது கூட நான் இவ்வளவு உறுதியுடனும் தைரியமாகவும் பேசியிராவிட்டால் நீ என்னை உதைகொடுத்தே அனுப்பியிருப்பாய். ஆனால் உனக்கு நான் எவ்விதத்தும் அஞ்சுபவள் அல்ல.

மதன:—கௌரியம்மையே! நான் அவ்வளவு கேவலமாக நடந்துகொண்டிருக்கமாட்டேன். என் சுபாவம் அப்படிப்பட்டதில்லை. இப்போது என்னிடம் பணமில்லாமைக்காக வருந்துகிறேன்.

கௌரி:—இப்போது நீ மிகப் பக்குவமாகப் பேசுவதை நான் அறிவேன். ஆனாலும் என் தைரியமும் பிடிவாதமும் உன்னை அடங்கும்படி செய்தது. இன்றேல் நீ என்னை மிகவும் கேவலப் படுத்திவிட்டிருப்பாய். இன்றிரவுக்குள் அல்லது நாளை காலைக்குள் எனக்குப் பணம்வேண்டும். அதுவரை நான் உன்னைவிட்டுச் செல்லேன். அப்படி நீ தராவிட்டால் உடனே வெளியே சென்று இப்போது பெருமையாகக் கருதப்படும் மதனவல்லி இவ்

வளவு கேவலமான நிலைமையில் இருந்தாள் என்று இரத்தினபுரி நகரெங்கும் தெரிவித்துவிடுவேன்.

மதன:—உரக்கப் பேசாதே. தயவுசெய்து சிறிது இரக்கத்துடன் நடந்துகொள். அப்படியும் இப்போது இரண்டாயிரம் பவுன் தரக்கூடிய நிலைமையில் நான் இல்லையே.

கௌரி:—அது முடியாது. நான் இன்று அத்தொகையை உன்னிடமிருந்து பெற்றே தீர்வேன். பணம் கொடுக்கப்படும் வரை நான் இக்கட்டடத்தை விட்டுப் போக மாட்டேன்.

மதன:—அப்படியாயின் நீ நடந்துகொள்ளும் முறை மிகக் கொடுமையானதாக இல்லையா? இது சற்றும் நியாயமல்ல.

கௌரி:—ஆம், கொடுமையே என்று நானே ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் நான் என் காரியத்தில் வெற்றியடைந்தே தீரவேண்டும்.

மதன:—நாளையதினம் பகலில் உனக்கு இஷ்டமானபோது வந்தால் எப்படியாவது சமாளித்துத் தருவேன்.

கௌரி:—நான் மறுபடியும் இங்கே வர முடியாது. நாளைய தினம் நான் இங்கே வந்தால் உன் மாளிகையின் வெளியே நின்று கொண்டிருக்க வேண்டியதுதான். ஆகையால் இன்றிரவே எவ்வளவு நேரமாயினும் எனக்குப் பணம் வேண்டும்.

மதன:—ஐயோ! என்னிடம் இப்போது பணமில்லையே. வேண்டுமாயின் என்னுடைய நகைகளை எடுத்துக் கொண்டுபோய் அடமானம் வைத்துக்கொள். பிறகு அதை மீட்க நான் பணம் அனுப்புகிறேன்.

கௌரி:—இல்லை, அது முடியவே முடியாது. நான் நகைகளை எடுத்துக்கொண்டு போனால் அதை நான் திருடிக்

கொண்டு சென்றதாக நீ புகார் கிளப்பிவிட்டால் என் கதி யாதாகும். ஆகவே அது முடியாது எனக்குப் பண மாகவே இப்போது வேண்டும். இப்போது மணி ஏழு ஆகிறது. நடுநிசியாயினும் காத்திருப்பேன். நீ எங்கிருந்தாவது பணம் சமாளித்துக் கொண்டு வந்து எனக்குக் கொடுத்துவிடு.

இவ்வாறு கௌரி என்னும் அந்த அயோக்கியமாது பிடிவாதமாக இருப்பதைக்கண்ட மதனவல்லி மிகத் துக்கத்துடன் அருகிலிருந்த சோபாவில் சாய்ந்து நீண்டநேரம் சிந்தித்தாள். கௌரியின் முகத்தைப் பார்த்தாலோ அவள் சிறிதும் அசையமாட்டாள்போ லிருக்கிறது. ஆகவே வருத்தத்துடன் யோசனை செய்துகொண்டிருந்தபோது திடீரென்று ஏதோ யோசனை தோன்றியது. எனவே அவள் கௌரியைப் பார்த்து, "சிறிதுநேரம் இங்கேயே காத்திரு" என்று சொல்லிவிட்டு அவ்வறையை விட்டுச் சென்றாள்.

தான் ஒருமணி நேரத்துக்கு முன்புதான் தன் கணவன் செல்லப்பப்பிரபுவிடம் இருபதினாயிரம் பவுன் கொடுத்துவிட்டு வந்ததால் அதை அவன் இதற்குள் கடன்காரனுக்கு அனுப்பி விட்டிருக்கமாட்டானென்றும், அதில் இரண்டாயிரம் பவுன் கொண்டுவாலாமென்றும் நினைத்து அவனைத் தேடிக்கொண்டு சென்றாள். ஆனால் செல்லப்பப்பிரபு கபூர் கிருஷ்ணன் மூலம் சூதாட்டக் கடைக்காரனுக்கு அனுப்பவேண்டிய பணத்தை அனுப்பிவிட்டிருந்ததால் தன்னிடம் ஐந்நூறு பவுன் மட்டுமே இருப்பதாகவும், அதை வேண்டுமாயின் கொடுப்பதாகவும் தெரிவிக்கவே அவளும் அதையே பெற்றுக்கொள்வதாகத் தீர்மானித்தாள். மதனவல்லி பணத்துக்காக மிகக் கஷ்டப்பட்டதைக் கவனித்த அவள் கணவன் என்ன விஷயமென்று விசாரித்தான். அவள் உண்மையைக் கூறாது

ஏதோ கடன்காரன் வந்திருப்பதாகவும், அவனுக்குத் தற்சம யம் ஐந்நூறு பவுன்கொடுத்தாலும் போதுமென்றும் கூறிவிட் டுச் சென்றாள்.

மதனவல்லி நேராக கௌரியிடம் சென்று அத்தொகை யைக் கொடுத்து மீதியைப் பிறகு அனுப்புவதாகச் சொன் னாள். இதனால் மதனவல்லி தன் மானத்தை இழக்காமல் இருக்கும் பொருட்டுப் பணத்தைக் கொடுத்துவிடத் தன்னா லானதையெல்லாம் செய்வாள் என்று கௌரி தெரிந்து கொண்டுவிட்டதால் இன்னமும் பிடிவாதம் செய்வதே சரி யெனத் தெரிந்துகொண்டாள். ஆகவே அவள் அதைப் பெற்றுக்கொண்டு தான் கேட்ட பூராபணமும் கொடுத்தா லொழிய அங்கிருந்து போகமுடியாதெனக் கண்டிப்பாக அறிவித்துவிட்டாள். அவளுடைய பிடிவாதத்தைக் கண்டு மதனவல்லி தான் எதுவும் வாதம் செய்வதில் பயனில்லை என்று தெரிந்துகொண்டாள்.

ஆகவே மதனவல்லி மீண்டும் பழையபடியே துயரத் தில் மூழ்கலானாள். என்னசெய்வதென்று தோன்றவில்லை. கௌரியின் கோபத்துக்கு ஆளாகவும் அவள் விரும்பவில்லை. அவள் ஏதேனும் அவதூறாக நகரெங்கும் சொல்லித் திரிந் தால் அது தற்கொலைக்கே ஒப்பாகும் என்பதை அவள் அறி வாள். இவ்வளவு பெருமையுடன் கூடிய வாழ்க்கையை நடத்தும் தான் கேவலம் கௌரிபோன்ற இழிமாதர்களின் வாய்த்தூற்றலுக்கு ஆளாகவும் பிரியப்படவில்லை. ஆகவே இந்த ஆபத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக எத் தகைய தியாகத்தையேனும் செய்ய வேண்டியதுதான் என்று தீர்மானித்துவிட்டாள். தன் நகைகளை யெல்லாம் திரட்டித் தன் தோழியிடம் கொடுத்து அவற்றை அடகு வைத்தேனும் அத்தொகையைக் கொண்டு வந்து கௌரி

யிடம் கொடுத்து விடலாமா என்று நினைத்தாள். ஆனால் மறுநாள் தான் அந்நகரிலுள்ள பல உயர்தர குடும்ப மாதர்களுக்கு விருந்து அளிப்பதென ஏற்பாடு செய்திருந்தாள். அதற்கு நகைகள் இல்லாமல் எப்படி இருப்பது என்றும் யோசனை பிறந்து விட்டது. அவள் செயற்கையழகு செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லாதபடி இயற்கையிலேயே மிக மிக அழகானவளாக இருந்தாளென்றாலும் சுமக்க முடியாத நகைகளைப் போட்டுக் கொள்வதுதான் சிறந்த நாகரிகமெனக் கருதப்பட்டது.

ஆகவே அவளால் எவ்வழியிலும் செல்லமுடியாமற் போயிற்று. பணம் வேண்டுமாயின் ஒரே ஒரு வழி இருந்தது. அதை நினைத்தாலே அவள் மனம் அனலில் இட்ட மெழுகுபோல் உருகிற்று. எனினும் அதை விடுத்தால் வேறு வழியில்லை. இளவரசனிடம் போய்க் கேட்பதிலும் பயனில்லை, அவனிடம் பணம் சிறிதும் கிடையாதென்பதை அவள் அறிவாள். அவளுக்கு இன்னும் எத்தனையோ நண்பர்கள் இருக்கிறார்களென்றாலும் அவர்களையெல்லாம் பணம் கேட்டால் மதனவல்லி பிறரைப் பணம் கேட்கும்படியான அவ்வளவு கேவலமாகவா இருக்கிறாள் என்னும் உண்மை வெளிப்பட்டுவிடும். சர்தார் சூரியநாயகம் பிரபுவைக் கேட்டால் கொடுப்பார் என்றாலும் அவர் சொற்பகாலமாக இரத்தினபுரியில் இல்லை. ஆகவே என்ன செய்வதென்னும் கவலையுடன் கௌரியின் முகத்தைப் பார்த்ததில் அவள் ஈவிரக்கமின்றி பிடிவாதத்துடன் இருப்பது தெரிந்தது. அதன்மீது அவள் வேறு வழியில்லை யென்றும், தனக்கு வெறுப்பைத் தருகின்ற அந்த ஒரு காரியத்தையேனும் செய்து பணம் கொண்டுவருவதெனத் தீர்மானித்து அங்கிருந்த மணியை அடித்தாள்.

உடனே மதனவல்லியின் அந்தரங்கத் தோழி அங்கு வந்தாள். ஒருவாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு வந்து பின் புறவாயிலில் நிறுத்தும்படி கட்டளையிட்டாள். இந்நேரத்தில் ஆகாரம் அருந்தாமலும் அவ்வளவு அவசரமாக ஏன்வெளியில் போகிறாள் என்பதை அறிந்துகொள்ள விரும்பியும் தன் எஜமானி தன்னிடம் அதைக் கூறுவாள் என்னுந் தைரியத்துடன் இட்ட கட்டளையை நிறைவேற்றப் போய்விட்டாள். உடனே மதனவல்லியும் அழகாக அலங்கரித்துக்கொண்டு முகமூடியையும், போர்வையையும் அணிந்து கொண்டாள். தன் நகைப்பெட்டியிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டாள். பிறகு கௌரியைப்பார்த்து, "உனக்குப் பணம் கொண்டு வருவதற்காகச் சொற்ப தூரத்திலுள்ள ஒரு நண்பர் வீட்டுக்குச் செல்லுகிறேன். திரும்பிவர இரண்டு மூன்று மணிநேரங்கள் செல்லும்." என்றாள். அதற்கு அவள், 'இரவு நடுநிசியானாலும் நான் அதுவரை இங்கேயே காத்திருக்கத் தயாராக இருக்கிறேன்' என்று பதில் அளித்தாள். மதனவல்லி ஒன்றும் பேசாமல் அவ்வறையை விட்டுச் சென்றாள்.

152 - வது அத்தியாயம்

மதனவல்லி வெளியில் காத்திருந்த வாடகை வண்டியில் உட்கார்ந்து கொண்டாள். வண்டியும் வேகமாகச் செல்லத் தொடங்கிற்று. அப்போது வழியில் மதனவல்லி பலவகை எண்ணங்களையெல்லாம் சிந்தித்துக்கொண்டே சென்றாள். சென்ற டிசம்பர் மாதம் முதல் இந்த ஜுலை மாதத்துக்குள்ளாக தொண்ணூற்றொன்பது ஆயிரம் பவுன்களைத் தானும் தன் கணவனுமாக வீண்செலவு செய்ததை

நினைத்து வருந்தினுள். அதில் எழுபதாயிரம் பவுனுக்கு மேல் செல்லப்பப்பிரபுவே செலவு செய்துவிட்டிருக்கிறுன். மீதி தொகையில் பெரும்பாகத்தைக் குமாரவேல் பிரபுவும், கர்னல் மாரப்பனும் அவளிடமிருந்து பெற்றிருக்கிறுர்கள். சுகசிங்கம்பிரபு மதனவல்லியை விலைக்கு வாங்குவதற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட நூறு ஆயிரம் பவுன்களில் இப்போது ஒரே ஆயிரம் பவுன்தான் பாக்கி இருக்கிறது.

இந்த ஏழெட்டுமாத காலத்துக்குள் மதனவல்லியும் தனது கணவனுமாக இந்த 99 - ஆயிரம் பவுன்மட்டுமன்றி அப்போதைக்கப்போது இளவாசரால் மதனவல்லிக்கு அளிக்கப்பட்ட பொருளையும், செல்லப்பப்பிரபுவுக்கு உத்தியோக மூலம் கிடைத்த சம்பளத்தையும் செலவழித்துவிட்டார்கள். நல்லவழியில் ஏதேனும் செலவழித்தார்களா? இல்லவே இல்லை. நல்வழியில் செலவழிக்கப்படாத பொருள் வியபிசாரத்துக்கும், கள்ளுக்கும் வம்புக்கும்தான் பயன்படும். இவ்வாறு செலவழித்ததையெல்லாம் நினைத்தபோது அவளுக்கு அச்சம் அதிகரித்துவிட்டது. இப்படி செலவுசெய்து கொண்டே போனுல் பிற்காலத்தில் அவர்களுடைய கஷ்டம் அதிகரித்துவிடுமே என்பதை உணர்ந்தாள். தன் கணவன் பணம் கேட்டபோதெல்லாம் எப்படியோ சமாளித்துக் கொண்டுவந்து கொடுத்துவிட்டதற்காக மனம்வருந்தினுள்.

நேயர்காள்! "ஆனமுதலில் அதிகம் செலவானுல் மானமழிந்து மதிகெட்டுப்போய்" என்று பெரியோர்கள் அனுபவ வாயிலாய்க் கூறியதை நாம் நமது வாழ்க்கையில் கவனிக்க வேண்டும். பண்டைக் காலத்துப் பெரியோர்கள் கூறிய உபதேசங்களை அலட்சியம் செய்யும் சுபாவம் இப்போது நம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. தக்க ஆராய்ச்சியின்மீது காலத்துக்கேற்றபடி ஆசார அனுஷ்டானங்களையோ

மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களேயோ மாற்றிக்கொள் வதில் நமக்கு ஆட்சேபமில்லே. ஆனால் பொதுவாக ஜாதி மத வித்தியாசமின்றி ஜனசமூகத்தின் நன்மைக்கென்றே, தங் கள் சொந்த அனுபவத்தின்மீது கூறிச் சென்றுள்ள வாழ்க்கை சம்பந்தமான உபதேசங்களே நாம் மறக்கலாகாது. வரவுக்கு மிஞ்சி செலவு செய்தால் பிறகு பல கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாக நேரிடுமென்று பெரியோர்கள் கூறிச் சென்றதை அலட்சியம் செய்ய யாரால் முடியும்? அதுபோலவே மற் றும் பல விஷயங்களே உதாரணமாகக் கூறலாம். மாதர்கள் கண்ட ஆடவர்களுடன் தாராளமாகக் கலந்து திரியலாகாது என்று அப்பண்டைப் பெரியோர்கள் கூறி இருக்கிறர். ஆயி னும் இக்காலமக்கள் பலர் அதை மூடநம்பிக்கை யென்றும் கூறத் துணிந்து விட்டனர். என்னே இவர்களது அறியாமை! மாதர்களும் ஆடவர்களேப்போலவே எல்லாத் துறைகளிலும் சம அந்தஸ்து பெறுவதில் நமக்கு யாதொரு ஆட்சேபமு மில்லே. மாதர்கள் தக்க கல்விகற்று அரசியல் சமூக வாழ்க்கை யில் ஈடுபட்டு ஜனசமூக முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமென்பதே நமதுகொள்கை.எனினும் மாதர்கள் அத் துமீறி நினைத்தபோதெல்லாம் ஆடவர்களுடன் தாராளமாகக் கலந்து உறவாடலாகாது. ஏனெனின் அதனல் பழிக்குப் பாத் திரமான முறை தவறிய சம்பந்தங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆடவர்களோ மாதர்களோ அவர்கள், யாராயினும் அளவுக்கு மீறி நெருங்கி இருந்தால் இரும்புக்கும் காந்தத்துக்கும் சம் பந்தம் ஏற்படுவதுபோல் சம்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. இது அனுபவ உண்மை. அதிகமாக நெருங்கிப் பழகும் தந்தைக் கும் மகளுக்குங்கூடச் சம்பந்தம் ஏற்பட்டுவிடுகிறதென்றல் மற்றப்படி கேட்பானேன். அதனல்தான் பெரியார்கள், தாயும் பிள்ளேயுமானலும் பிள்ளேக்குத் தக்கபருவம் வந்துவிடு மாயின் அவன் தாயுடன் தனியே இருக்கக்கூடாது என்

றும், பெண்கள்மீது அவர்களுடைய கணவன்மாரின் ஆடை தவிர வேறு புருஷருடைய ஆடை தேகத்தில் பட்டாலும் தேகம் உடனே சிலிர்க்க வேண்டுமென்றும், அதுதான் பயிர்ப்பு என்னும் குணமென்றும் கூறியிருக்கின்றனர்.

இக்காலத்தில் நம் இந்தியர்களிலும் எத்தனையோபேர் புலியைப்பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொள்வதேபோல் மேல்நாட்டு நாகரிகத்தில் மயக்கங்கொண்டு ஜனசமூக அபி விருத்திக்குக் கூடாத செயல்களிலும் ஈடுபட ஆரம்பித்து விட்டது மிக்க பரிதாபமான விஷயமாகும். இவ்விஷயத்தில் ஹிந்துக்களாகிய நம்மைவிட முஸ்லிம்கள் பெருந்தன்மை யுடனேயே நடந்து கொள்கின்றனர். ஆகவே நேயர்கள் எதையும் செய்வதற்குமுன் அதனால் ஏற்படக்கூடிய பலா பலன்களைச் சிந்தித்துச் செய்வார்களாக.

மதனவல்லி பலவாறு சிந்தித்துக்கொண்டே இருக்கை யில் அவள் ஏறிவந்த வண்டியும் ஒரு மாளிகையின்முன் நின் றது. அப்போது அவள் திடுக்கிட்டுத் தன் நிலைமையைப் பற்றிச் சிந்தித்தாள். அம்மாளிகையில் செல்லாமல் தான் வந்தவழியே போய்விடலாமா என்றும் யோசித்தாள். ஆனால் அங்கு போனால் கௌரிக்குப் பதில் சொல்ல வேண்டுமே என்னும் திகில் ஏற்பட்டது. ஆகவே அவள் ஒன்றும் பேசாமல் அவ்வண்டியைவிட்டுக் கீழே இறங்கினாள். உடனே சுகசிங்கம் பிரபுவின் சேவகர்களில் ஒருவன் வெளியே வந்து கதவைத் திறந்தான்.

மதனவல்லி சுகசிங்கம் பிரபுவின் மாளிகைக்குத் தான் வந்தாள். அவள் தடிப்பான முகமூடியையும் போர்வை யையும் அணிந்திருந்ததால் அவள் யாரென்று அச் சேவகர்க ளாலும், அவர்களுடைய எஜமானனாகிய சுகசிங்கம் பிரபு வாலும் விரைவில் கண்டு பிடிக்க முடியவில்லை. அவள்

தனியே பிரத்யேக அறைக்குள் சென்றதும் சுகசிங்கம் பிரபுவும் உள்ளேபோய்க் கதவைச் சாத்திக்கொண்டான். உடனே மதனவல்லி தன் முகமூடியை எடுத்துவிட்டு, "பிரபுவே! மீண்டும் நான் உடனே வரவேண்டியதாயிற்று. நீ சற்று பொறுமையுடன் இருந்து என்னை மன்னித்தாலும் சரி, அல்லது உன் இஷ்டப்படி நடத்தினாலும் சரி. உன் கிருபைக்குப் பாத்திரமாகி இங்கு வந்துவிட்டேன்" என்று மிக விசாரமாயும் நாணத்துடனும் கூறினாள்.

மதனவல்லி அந்நேரத்தில் அவ்வளவு விரைவில் திரும்பி வருவாளென்று அவன் நினைக்காமையால் மதனவல்லியைக் கண்டதும் சுகசிங்கம் பிரபுவுக்கு ஆச்சர்யம் அதிகரித்து விட்டது. ஆகவே அவன் அவளுடைய கரத்தைப்பிடித்துத் தன் ஆசனத்துக்கருகில் உட்கார வைத்துக்கொண்டு, "மதனவல்லி! நீ கூறியதை நான் அறிந்துகொண்டேன்" என்று நிதானமாகக் கூறினான்.

அப்போது அவள், "பிரபுவே! நான் இப்போது உன்னுடைய தயவில் இருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த முத்துமாலையை எடுத்து அதிலிருந்த அந்த ஒரே ஒரு முத்தையும் பிரபுவினிடம் கொடுத்து விட்டாள். ஆனால் அப்போது அவளுடைய முகம்மட்டும் வாட்டமடைந்தது.

அச்சமயம் சுகசிங்கம்பிரபு மிகச் சந்தோஷத்துடன், "ஓ! அப்படியானால் இப்போது நான் கனவு காணவில்லை. உண்மையாகவே என் விருப்பம் முடியும் காலம் வந்துவிட்டது. என் கரத்தை உன் தோள்மீது போட்டு மதனவல்லி நீ என் சொந்தம் என்று சொல்லக்கூடிய காலமும் வாய்த்து விட்டது" என்று கூறிக்கொண்டே அவள்மீது தன் கரத்தைப்போட்டு இறுகத் தழுவிக்கொண்டு தன் ஆசைதீர அவ

ளது கன்னத்தில் கணக்கிலடங்காத முத்தந் தந்தான். அதை மதனவல்லி எதிர்க்கவில்லை. எனினும் அவளுக்கு உள்ளூறவே அப்பிரபுவினிடம் ஒருவகை வெறுப்பு இருந்ததால் அவள் உள்ளம் சற்று கூச்சத்தை யடைந்தது. எனினும் அதை அவள் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. அவ்வாறு காட்டிக்கொண்டால் பிரபுவுக்குப் பிடிவாதம் அதிகரித்து விட்டால் என் செய்வதென்று கருதி பக்குவமாகவே அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றாள். பிரபு அதையெல்லாம் கவனியாமல் அவள் தன்னிடம் அகப்பட்டுக் கொண்டாள் என்னும் ஆவலினால் அவளுடைய அவயவங்களைக்கண்டு இன்பமனுபவிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். அவன் அவளுடைய போர்வையை எடுத்துப் போட்டுவிட்டு அவள் மெல்லிய ஆடையை அணிந்துகொண்டிருந்ததால் அவளது அழகைக்கண்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தான். அவள் சிவந்த மேனியையும், அழகிய மனங் கவரும் மார்பகத்தையும். அவளது ரூபலாவண்யத்தையுங் கண்டு தான் அந்த இன்பத்தை அனுபவிப்பதற்காக நூறு ஆயிரம் அல்லது லட்சம் பவுன் செலவழித்ததும் பெரிதல்ல என்று கருதினான். மதனவல்லியும் அவனை எதிர்க்காமலேயே, அவன் தன்னிடம் கருணைகாட்டி தந்தை மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்து வணக்கத்துடன் நின்றாள். ஐயோ பாவம்! மதனவல்லி இளவரசரின் காதலியாக அரண்மனையில் வாழக்கூடிய நிலைமையில் இருந்தும், தன் கற்பு என்னும் ஒரு பாதுகாப்பை இழந்து விட்டதால் இப்போது கேவலம் சுடுகாடு செல்லக் காத்திருக்கும் கிழவனுடைய மோகத்துக்கும் ஆளாகவேண்டிய நிலைமையில் நின்றாள். ஆகவே மாதர்கள் சுயமதிப்புடன் ஆடவர்களின் தொல்லைக்கு ஆளாகாமல் இருக்கவேண்டுமென்றால் தங்கள் கற்பை பத்திரமாகக் காப்பாற்றிக்கொள்ள

வேண்டும். அப்போதுதான் அவர்களுடன் பேச எப்படிப் பட்ட ஆடவரும் பயப்படுவர்.

கடைசியாக சுகசிங்கம்பிரபு தன் வாயைத் திறந்து "இப்படியாக நீ என்னிடம் சரணாகதி யடைந்து உன்னை மன்னிக்க வேண்டுமென விரும்புகிறாய். ஆனால் என் மோகத் துக்காளான உன்னை நான் மன்னித்துவிடுவேன் என நீ எதிர்பார்க்க முடியாது. உன்னை நான் கட்டி அணைத்துக் கொள்வதற்காக எவ்வளவோ பிரயத்தனங்களைச் செய்தபோ தெல்லாம் நீ என்னைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அலட் சியமாக நடந்துகொண்டாய். ஆகவே நான் இப்போது உன்னை மன்னித்துவிட முடியாது. என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளவே வேண்டும்" என்று புன்சிரிப்புடன் கூறிக்கொண்டே அவளை உச்சிமுதல் உள்ளங்கால் வரை உற்று நோக்கி, அவளது அழகைக்கண்டு ஆனந்த பரவச மடைந்தான்.

அதைக்கேட்ட மதனவல்லி மிகச் சாமர்த்தியமாகப் பேசக் கருதி, "அப்படியானால் பிரபுவே! இப்போது நீ என் னைப் பழிவாங்கப் போகிறாயா? அல்லது உண்மையிலேயே உனக்கு என்மீதுள்ள அன்பை என்னிடம் காண்பிக்கப் போகிறாயா?" என்று பணிவுடன் கேட்டாள்.

அதற்கு சுகசிங்கம்பிரபு மிகவும் ஆத்திரத்துடன், "ஓ! அப்படியா! உண்மையில் நீ என்னிடம் மரியாதையுடனும் விசுவாசத்துடனும் நடந்து கொண்டிருந்தால் நானும் உன் பால் என் அன்பைக் காண்பிப்பேன் என்பதில் ஆட்சேப மில்லை. ஆனால் இப்போது நீ அப்படி நடந்து கொண் டாயா? நான் உன்மீது காதத்தைப்போட்டு முத்தமிட்ட போது நீ சிறிது ஆர்வத்துடன் என் கரத்தையேனும் பிடித் துத் திருப்தி காட்டாமல் ஏதோ சவம்போல் அசைவற்று

நின்றுயே. அப்போது என்மனம் என்னபாடு பட்டிருக்கும். நீ என்னை ஒரு பாங்கியாக வைத்துக்கொண்டு அடிக்கடி பணத்தை வாங்கிக்கொண்டு போனுயே; அப்போது இத் தகைய முடிவு ஏற்படுமென நீ கருதினதுண்டா? இன்று பகல் நீ இங்கு வந்து போனபோது கூட இந்தக் கடைசி முத்தை இங்கே கொண்டுவர மாட்டேன் என்று சொல்லிப் போனுயல்லவா? அதைக் கொண்டுவர நீ சற்றும் பிரியப்பட வில்லையே. இவ்வளவு பெருந்தொகையையும் என்னிட மிருந்து கொள்ளை யடிக்கலா மென்றல்லவா நினைத்தாய். என்ன காரணத்துக்காக நீ இன்று மறுபடியும் பணத்துப் காக வந்தாயோ தெரியவில்லை. அது எதுவாயினும் எனது வெற்றிக்காகவே நீ வந்தாய் என்று நான் நிச்சயமாகக் கூறு வேன். ஏதோ முக்கிய காரணம் ஏற்பட்டுத்தான் நீ எத் தகைய தியாகத்தையும் செய்வதெனத் துணிந்து வந்திருக் கிறுய். கடைசியில் வந்து என்னை மன்னிக்கும்படி கேட் பதில் அப்படி கேட்தற்குத்தான் என்ன பெருமை இருக் கிறது. உன்னைப் பெறுவதற்காக நான் எவ்வளவு பெரிய தொகையைத் தியாகம் செய்திருக்கிறேன் என்பதை நீ கவ னிக்கவேண்டும்,'' என்று விவரமாகக் கூறினுன்.

அப்போது மதனவல்லி ஏதேனும் காரணம் சொல்லித் தான் தப்பித்துச் செல்லவேண்டுமென்னும் எண்ணத்துடன், ''அப்படியானுல் என்னைப் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் இருப்பதாகத் தெரிகிறதே யொழிய அன் பிற்குக் கட்டுப்பட்டு இன்று இரவு உன் காரியத்தை முடித் துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் இல்லை போல் தெரிகிறது. ஆ! எனதன்புள்ள பிரபுவே! உண்மை யில் உனக்குக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டு மென்னும் எண்ணமிருந்தால் நீ ஏன் என்போன்ற பெண்

மணியுடன் பேசுவதற்கென ஏற்பட்டுள்ள இனிய மொழி களால் அன்பு ததும்பப் பேசலாகாது என்று கேட்கிறேன். நல்ல, இனிய சொற்களால் என்போன்ற மாதர்களை வழிக்குக் கொண்டுவந்து விடலாமல்லவா? நீயும் அன்புடன்பேசியிருந் தால் நான் அப்போதே இணங்கி யிருப்பேனே, நீ புகார் செய்ததுபோல் வெறுப்புடன் நடந்துகொண்ட மாதிரி நடந்துகொண் டிருக்கமாட்டேன்'' என்று கூறிக்கொண்டே தான் சொல்வது உண்மை என்று அவன் நம்பும்படி செய் வதற்காக அவனது கரத்தைத் தன் இருகரங்களாலும் பிடித்து அவனிடம் காதல் கொண்டவள்போல் தடவிக் கொடுத்தாள்.

மதனவல்லி அவ்வாறு கூறியதைக் கேட்ட சுகசிங்கம் பிரபு மிக்க சந்தோஷமடைந்தவனாய் அவளுடைய தோள் களையும், கூந்தலையும் தடவிக்கொடுத்து மிக அன்புடன், ''மதனவல்லி! நீ மிக்க சமத்காரமாகப் பேசுவாய் என்பதை நான் முன்னரே அறிவேன். இருந்தாலும் நான் உனக்கு ஒரு யோசனை கூறுகிறேன். அதன்படி நீ நடந்துகொண்டால் ஒருபோதும் பணக் கஷ்டத்துக்கு ஆளாகமாட்டாய்'' என்று கூறினான்.

மதன:—ஆ! யோசனையா? சரிதான். உடனே அது என்ன யோசனை என்பதைச்சொல். அதை அறிய மிக ஆவ லாக இருக்கிறேன்.

சுகசிங்:—அந்த யோசனையா? நீ எனது காதலியாக இருந்து விடு. உன் கணவனையும் காதலன் இளவரசனையும் விட்டு என்னிடமே வந்துவிடு. நான் பக்கத்திலுள்ள எனது ஊருக்கு அனுப்பிவிடுகிறேன். அங்கே பெரிய மாளிகை யில் இன்பமாகக் காலங்கழிக்கலாம்.

மதன:—ஓ! நல்ல யோசனை. உன்னுடைய அன்பையும் தாராளச் சிந்தையையுமே இது காட்டுகிறது. ஆ! என்ன பெருந்தன்மை! ஆனால் இந்த யோசனைப்படி நடந்துகொள்வதன் சம்பந்தமாய் யோசிப்பதற்காக எனக்குச் சிறிது சாவகாசம் அளிக்கவேண்டும்.

சுகசிங்:—அன்புள்ள மதனவல்லி! அவசியமாயின் இதைப் பற்றிச் சிந்திக்க ஒருநாள் அல்லது ஒருவாரம் ஆயினும் நீ எடுத்துக்கொள்ளலாம்.

மதன:—ஆஹா! இதுவல்லவா உண்மையான அன்புக்கு அடையாளம். உன் பெருந்தன்மையும் தாராள நோக்கமும் பாராட்டத்தக்கதே. அப்படியானால் இப்போது நான் கொடுத்த அந்தக் கடைசி முத்துக்குச் சேரவேண்டிய ஆயிரம் பவுனையும், கடனாக ஒரு ஐந்நூறு பவுனையும் கொடு.

உடனே சுகசிங்கம் பிறகு அப்படியே யாகட்டுமென்று கூறித் தன்னிடம் தற்செயலாய் வைத்திருந்த தொகையில் ஆயிரத்தைந்நூறு பவுன்களுக்கான நோட்டுகளை அவளிடம் கொடுத்தான். அதை அவள் தன் இடுப்பில் பத்திரமாக வைத்துக்கொண்டு தன் ஆசனத்திலிருந்து எழுந்து, "பிரபுவே! உனக்கு ஆயிரம் வந்தனம் செலுத்துகிறேன். இப்போது நான்போய் வருகிறேன். நீ சொன்னயோசனை சம்பந்தமாய்ச் சிந்தித்து நாளை மாலை என் இறுதியான முடிவைத் தெரிவிக்கிறேன்'' என்றாள்.

அதைக்கேட்ட சுகசிங்கம்பிரபு பரிகாசமாகவும், கோபமாகவும் அவளைப்பார்த்து, "எனதன்புள்ள மதனவல்லி! என் யோசனையை நீ அங்கீகரிப்பதில் உன் இஷ்டப்படியே நீ நடக்கலாம். ஆனால் அதற்கும் இன்றிரவே என் காரி

யத்தை நான் சாதித்துக் கொள்வதற்கும் என்ன சம்பந்தம். இவ்வளவு பெரிய தொகையைத் தியாகம்செய்த நான் என் முன் ஏற்பாட்டின்படி 'மதனவல்லி நீ என் சொந்தம்' என்று உரிமையை அனுபவிக்கவேண்டாமா?'' என்று கேட்டான். அதற்கு மதனவல்லி ஒன்றும் பதில் கூறவில்லை. தான் அவனை ஏமாற்ற முயன்றும் தன் யோசனை பலிப்பதாக இல்லை. ஆகவே அவனுடன் பேசுவதில் பயனில்லை என்று உணர்ந்து மௌனமாக நின்றுகொண்டிருந்தாள்.

அப்போது சுகசிங்கம்பிரபு தன் இருகரங்களாலும் அழகிய மதனவல்லியை அணைத்துக்கொண்டு, ''மதனவல்லி, இனி நீ எனக்குச் சொந்தம். உனக்காக இவ்வளவு பெரிய தொகையைத் தியாகஞ்செய்த நான், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதுபோல நான் ஆவலுடன் எதிர்பார்க்கும் இன்பத்தை அனுபவிக்கக்கூடிய காலம் இப்போது வாய்த்திருந்தும் அதை நான் விட்டுவிடக்கூடிய மடையனென்றோ அல்லது ஏமாந்தமுட்டாளென்றோ என்னை நினைத்துவிட்டாயா? உனக்கு ஒருயோசனை கூறினேன். அதை இப்போதே ஒப்புக்கொள்வதாயின் இதோ என் வண்டி தயாராகிறது. அதில் ஏறிக்கொண்டு என் ஊருக்குச் செல். அவ்வாறின்றி அதைப்பற்றி ஏதேனும் யோசித்து நிதானமாகக் கூறுவதாயிருந்தால் இன்றிரவே, இப்போதே நான் உன் இன்பத்தை நுகர்ந்துவிடவேண்டும்,'' என்று கூறினான்.

சுகசிங்கம்பிரபு இவ்வாறு பேசும்போது அவன் கண்களில் காமத்தீ அனல் விட்டு எரிவதையும், அவன் மிக்க காமவேட்கையால் தாக்குண்டிருப்பதையும் கண்டுகொண்டாள். ஆகவே அவன் வெற்றி பெறுவதாகவே இருந்தாலும் தான் பூரண வெற்றியடைந்ததாகவோ, பூரண இன்

பம் அனுபவித்ததாகவோ இல்லையென்று அவன் கருதும்படி செய்யவேண்டுமென நினைத்து அவள் தன் முகமூடியை அணிந்துகொண்டு, "பிரபுவே, நான் முன்னரே தெரிவித்தது போல் உன் தயவில் இப்போது இருக்கிறேன். நீ மன்னித்தாலும்சரி; அல்லது உன் இஷ்டப்படி நடத்தினாலும் சரியே" என்று மிக வணக்கத்துடன் சொன்னாள்.

அப்போது சுகசிங்கம்பிரபு, "அப்படியானால் இவ்வழியே வா" என்று கூறிக்கொண்டே பக்கத்து அறையின் வாயிலின் வழியே பிரத்யேகமான அறைக்கு இட்டுச்செல்ல முயன்றான். மதனவல்லி அதைப் பார்த்து, "ஏன் அந்த அறைக்குச் செல்லவேண்டும்" என்று கேட்டாள். அதற்கு அவன், "உன்னுடன் நான் இந்த அறைகளில் இருக்கக் கூடாது. மேலும் இங்கிருந்து நீ வெளியே போனால் வெளியிலுள்ள ஜனங்கள் உன்னைப் பார்த்து விடுவார்கள். ஆகவே பிரத்தியேக அறைக்குத்தான் செல்லவேண்டும்" என்று கூறிக்கொண்டே முன்னே நடந்தான். அவள் ஒன்றும் பேசமுடியாமல் அவனுக்கு அடிமைப்பட்டவளே எனத் தெரிந்துகொண்டாள். அவள் தன் மானத்தை அவனுக்கு விற்றுவிடக்கூடிய அவ்வளவு பெரிய தொகையை அவனிடமிருந்து பெற்றிருக்கிறாளென்பது வாஸ்தவமேயாயினும் உண்மையிலேயே அக்கிழவனை அவள் வெறுத்தாள். ஆகவே அப்போதும் சமயம் அகப்பட்டால் அவனைப் பழி வாங்கிவிடவேண்டும் என்று நினைத்துக்கொண்டுதான் அவன் பின்னால் சென்றாள்.

சுகசிங்கம் பிரபு தன் சட்டைப்பையிலிருந்து ஒரு சாவியை எடுத்து ஒரு அறையின் கதவைத் திறந்து உள்ளே சென்று அக்கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு சிறு மெழுகுவர்த்தி விளக்கின் துணையால் மற்றொரு அறையின்

கதவைத் திறந்துகொண்டு அதில் அவனும் மதனவல்லியும் நுழைந்தார்கள். அதுதான் மின்சார இயந்திரங்கள் அமைக்கப்பட்ட நாற்காலிகளையுடைய அறையாகும். அதில் அவர்களிருவரும் நுழைந்ததும் சுகசிங்கம் பிரபுவின் கையிலிருந்த விளக்கு வெளிச்சத்தால் அந்த இயந்திர நாற்காலியில் யாரோ ஒரு மனிதன் சிக்கி யிருப்பதைக்கண்டு உடனே அவன் கொடிய தானப்பனே என்பதை உணர்ந்து திடுக்கிட்டார்கள்.

153 - வது அத்தியாயம்

அன்று அதிவிடியற்காலைமுதல் தானப்பன் அந்த நாற்காலியில் தெய்வயானையின் சூழ்ச்சியால் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பது நேயர்கள் ஞாபகத்தி லிருக்கலாம். அவன் இருபதுமணி நேரத்துக்கு மேலாகவே அதில் அகப்பட்டுக்கொண்டு பட்டினியாலும் பசியாலும் வாடுவதாலும், அதினின்றும் விடுவித்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் போராடி அலுத்துப் போய் விட்டதாலும், தெய்வயானை இப்படிச் செய்து விட்டாளே என்னும் கோபத்துடன் ஆத்திர மடைந்திருப்பதாலும் அவன் முகம் மிக்க பயங்கரமாகவும், பரிதாபமாகவும் காணப்பட்டது. அவன் அப்போது இரத்தவெறி கொண்ட ஒரு பெரும்பேயைப்போல் காணப்பட்டானே யொழிய சாதாரண மனிதனைப்போல் காணப்படவில்லை.

அவன், அவ்வறையில் நுழைந்த அவர்களிருவரும் சுகசிங்கம் பிரபுவும், மதனவல்லியுமே என்பதை அறிந்துகொண்டான். தானப்பன் மதனவல்லியைப் பலமுறை வெளியில் அவள் தன் வண்டியில் சவாரி செய்யும்போது கண்டிருக்

கிருன். மேலும் சர்தார் சூரியநாயகத்தின் கட்டளையின்படி இதே மதனவல்லிக்கு உதவி செய்வதற்கு அவன் இதே அறைக்கு முன்பு ஒருமுறை வந்திருக்கிருன். ஆகவே அவன் அவளை எளிதில் அறிந்து கொண்டான். மேலும் சுகசிங்கம் பிரபு எந்த மாதையும், அவளுடன் இன்ப மனுபவிப்பதற் குத்தவிர வேறு எக்காரணத்தைக் கொண்டும் அந்த அறை களுக்கு அழைத்துக்கொண்டு வரமாட்டான் என்பதும் அவ னுக்குத் தெரியும்.

மதனவல்லியோ இக்கொடிய தானப்பனை அந்த நாற் காலியில் கண்டதும் பெரிய நாகசர்ப்பத்தை மிதித்ததுபோல் அஞ்சித் தன் தலையைக் காண்பிக்கவும் இஷ்டப்படாமல் உள்பக்கமாக இழுத்துக்கொண்டு முன் அறைக்குள் சென் ருள். சுகசிங்கம்பிரபுவும் அவனைக் கண்டு திடுக்கிட்டதால் மூளையே குழம்பிவிடவே ஒன்றும் தோன்ருமல் மதிமயங்கி நின்ருன். மதனவல்லியின் மானம் போய்விட்டதே, இப் போது அவனுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமே என்பதும் அப்போது அவனுக்குத் தோன்றவில்லை. முன் அறைக்குச் சென்ற மதனவல்லி அங்கேயிருந்த ஒரு சோபா வில் சாய்ந்துகொண்டாள். அவளுக்குப் பலவித யோசனை கள் தோன்றலாயின. அதே சமயத்தில் சுகசிங்கம்பிரபு ஒரு வாறு தைரியமடைந்து தானப்பன் சமீபத்தில் சென்று அவ னுடன், “அடே தானப்பா! நீ ஏன், எப்படி, எதற்காக இங்கே வந்து இதில் அகப்பட்டுக்கொண்டாய்? உண்மையைச் சொல்” என்று கேட்டான்.

அதற்கு அவன், “என்னுடைய குற்றத்தால்தான் நான் இவ்வாறு அகப்பட்டுக்கொண்டேன். தயவுசெய்து உடனே என்னை விடுவித்துவிடு. இன்றேல் எனக்கு மிகக் கஷ்டமாக இருக்கிறது” என்று கதறினன். அதற்கு சுகசிங்கம்பிரபு,

"ஆத்திரப்படாதே. ஒருநிமிஷம் இரு. நீ எனக்கு என்ன உறுதிமொழி கொடுப்பாய்? அதிருக்கட்டும்; இப்போது என்னுடன் இங்குவந்த மாது யார் என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

அதற்குத் தானப்பன், "அவள் யாரென்பது எனக்கு நன்ருகத் தெரியும். உலகம் பூராவும் அவளை அறிந்திருக்கிறதே. ஆனல் அம்மாது உன்னுடன் வருவதுபற்றி எனக்கென்ன கவலே. என் கவலேயெல்லாம் நான் விடுதலேயடைந்து இங்கிருந்து செல்லவேண்டு மென்பதே" என்ருன். அப்போது சுகசிங்கம்பிரபு, "சரிதான். ஆனல் நீ இங்கே எப்படி வந்தாய்? இந்த விவரம் எனக்கு நன்ருகத் தெரியவேண்டும்" என்று பிடிவாதமாகக் கேட்டான்.

அப்போது தானப்பன், "ஐயா, உண்மையைக் கூறுகிறேன். நான் உன் சகோதரன் புத்திரியாகிய தெய்வயானேயைப் பார்க்கவந்தேன். அவள் என்னேச் சூழ்ச்சியாக இங்கே அழைத்துவந்து இந்த நாற்காலியில் தள்ளிவிட்டாள். இப்போது இதில் இருப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆதலால் என்னே விடுவித்து விடு" என்று கெஞ்சிக்கேட்டான்.

அவனுடன் அதிக விவாதம் செய்யச் சுகசிங்கம்பிரபு இஷ்டப்படவில்லே. கூடிய விரைவில் மதனவல்லியுடன் தனியாக இருந்து சுகிக்க வேண்டுமென்னும் ஆவலே அதிகரித்துவிட்டது. மேலும் தெய்வயானேயைப்பற்றி மதனவல்லி அதிகம் ஏதும் தெரிந்துகொள்ள லாகாதென்னும் எண்ணமும் தோன்றியது. ஆகவே அவன் அந்த நாற்காலியின் அருகில் சென்று எந்த இயந்திரத்தைச் சரிப்படுத்த வேண்டுமோ அதைத் தொட்டதில் உடனே அவனே அழுத்திக்கொண்

டிருந்த வளையங்களெல்லாம் விலகின. ஆகவே அவன் சந்தோஷத்துடன் அதினின்றும் எழுந்தான். ஆனால் அவன் எழுந்ததும் அருகிலிருந்த கம்பளத்தின்மீது விழுந்தான். ஏனெனின் அவனது கைகால்களெல்லாம் அலுத்துப்போய் இருந்தன.

அவனுடைய நிலைமையைப் பார்த்து சுகசிங்கம் பிரபு, "என்ன உனக்குத் தேக அசௌக்கியமா?" என்று கேட்டான். அதற்கு அவன் தன் கை கால்களை நீட்டி அக்கம்பளத்தின்மீது படுத்துக்கொண்டு, "ஓ! இன்னும் சொற்ப நேரத்துக்குள் என் உடம்பு சரியாய்விடும். இன்று விடியற்காலை இரண்டு மணிமுதல் நான் இங்கே அகப்பட்டுக்கொண்டு வலிபொறுக்க முடியாமலும், பசி தாகத்தாலும் வருந்திக்கொண்டிருக்கிறேனே. சிறிதேனும் சிரமமாய் இராதா" என்று சுகசிங்கம் பிரபுவைக் கேட்டான்.

அதற்கு அப்பிரபு, "ஓ! அவ்வளவு நேரமாகவா இங்கு இருக்கிறாய்? இப்போது நீ ஒன்றும் விவரம் கூறவேண்டியதில்லை. மற்றொருமுறை என்னைச் சந்திக்கும்போது விவரம் பூராவும் கூறலாம். இப்போது உனக்கு ஏதேனும் பணம் கொடுக்கிறேன். நீ போய்விடு" என்று பேரம்பேச ஆரம்பித்தான். அப்போது தானப்பன், "எனக்கும் சம்மதமே. ஆனால் எதற்காக இப்போது பேரம் பேசவேண்டும் என்பது தெரியவில்லையே" என்று கேட்டான்.

அதைக்கேட்ட சுகசிங்கம்பிரபு, "அதாவது இன்று இரவு என்னுடன் இங்கே நீ யாரைப் பார்த்திருந்தாலும் அப்படிப் பார்த்த விஷயத்தையே நீ மறந்துவிடவேண்டும். அதற்காக உனக்கு நூறு பவுன் கொடுத்தால் போதுமல்லவா?" என்று கேட்க, தானப்பன், "ஐயா! நான் இந்த இயந்திர நாற்காலியில் அகப்பட்டுக்கொண்டு என் தேக

மெல்லாம் வலிக்கிறது நல்ல தைலம் வாங்கித் தடவ வேண்டி யிருப்பதால் தயவு செய்து இருநூறு பவுன் கொடுத்தால் நலம்'' என்று வணங்கிக் கேட்டான். உடனே சுகசிங்கம் பிரபுவும் அலட்சியமாக இருநூறு பவுன்களுக்கான நோட்டுகளை அவன் கையில் கொடுத்து இப்போது அவனை வெளியே அனுப்புவதெப்படி என்று யோசிக்கலானான்.

ஆனால் அதற்கு யோசிக்க வேண்டியதில்லை என்று தானப்பன் தைரியம் கூறி எப்படியாவது தான் வெளியில் செல்வதாகச் சொல்லி சுகசிங்கம்பிரபுவிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அங்கிருந்து வெளியேபோனான். அவன் ஒழிந்ததும் சுகசிங்கம்பிரபு சிறிது ஆறுதலடைந்து, தனக்குள்ளேயே ''தெய்வயானை என்ன புதிய கஷ்டத்தில் அகப்பட்டுக்கொண்டாளோ, எந்தக்காரணமாயிருந்தாலும் தானப்பன் இரவில் அவளை வந்து பார்க்கவேண்டிய அவசியமென்ன'' என்று பலவாறு சிந்தித்தான். எனினும் தெய்வயானையையே சந்தித்து எல்லா விவரங்களையும் விசாரித்து அறிந்த பின்பு தான் உண்மை விளங்கும் என்பதை உணர்ந்தான். இதற்குள் பக்கத்து அறையில் தன் ஆவலை நிறைவேற்றக்கூடிய அழகிற் சிறந்த மதனவல்லி காத்திருப்பது ஞாபகத்துக்கு வரவே அவன் திடீரென்று அவள் இருந்த அறைக்குச் சென்றான். அங்கு அவள் ஒரு சோபாவின்மீது மிக்க விசாரத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

அப்போது அவ்வறையில் தானும், தன்னால் அதிககாலமாகக் காதலிக்கப்பட்டு வந்த ரூபலாவண்யத்திற் சிறந்த மதனவல்லியும் தனியாக இருப்பது அவனது ஞாபகத்திற்கு வரவே அவன் தனக்கும் தெரியாமல் ஒருவித [illegible] குதூகலத்தை யடைந்தான். ஆகவே அவன் மதனவல்லியிடம் [illegible] [illegible] தொலேந்தான்'' என்று கூறினான்.

சென்னை-600 008

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்காதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம் 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி ரூபா	1	0
4-பாகமும் ...	8	4	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.